S.H.M. Jameel
775-

# நம் முன்னோர்

(ஸ்ரீ லங்காவின் கடந்த கால சோனகர், மலாயர், மற்றும் முஸ்லிம்கள்)

முகம்மது ஸமீர் பின் ஹாஜி
இஸ்மாயில் எபெண்டி

MAIN LIBRARY, SEUSL
SJ008920
305.6975493
SAM

தொகுப்பு:

எம். ஸீ. எம். ஸாஹிர்
(ஸாயிர்)

(Muslims)
008920 (Sri Lanka)

சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்

Ex-Libris S.H.M. Jameel
Donated to the Library
South Eastern University of Sri Lanka

முதற் பதிப்பு 1979

அச்சிட்டோர்

த டயமண்ட் பிரிண்டர்ஸ், கொழும்பு - 3.

LIBRARY
25 NOV 2011
*SEUSL*

DONATED
by
S.H.M. JAMEEL

இதனுள் அடங்கும் ஸ்ரீ லங்காவின் கடந்தகால சோனகர், மலாயர், மற்றும் முஸ்லிம்கள் சிலர் பற்றிய சுருக்கக் குறிப்புகள், முகம்மது ஸமீர் பின் ஹாஜி இஸ்மாயில் எபெண்டி அவர்களின் ஏறக்குறைய ஐம்பதாண்டு முயற்சியினால் சேகரிக்கப்பட்டவைகளாகும். பழைய பதிவுகளை ஆராய்ந்தும் வேறு விதத்தில் சிரமப்பட்டும் அவர் இவ்விவரங்களைச் சேகரித்திராவிட்டால், அவற்றில் அனேகம் எம்மத்தியிலிருந்து மறைந்து போயிருக்கும். அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளைத் தொகுத்த கூறும் நல்லுலகுக்கு அளிக்கின்றோம்.

DONATED
by
S.H.M. JAMEEL

## உள்ளே

பக்கம்


1. பேருவலை பெரிய முதலி மரைக்கார் ... 1
2. அகமது லெப்பை சின்னலெப்பை மரிக்கார் 4
3. மூரிஷ் வைத்தியர் ... ... ... 5
4. சேகாதி மரிக்கார் ... ... ... 13
5. காஸிம் லெப்பை மரிக்கார் முதலியார் ... 19
6. இலங்கைச் சோனகரால் பேணப்பட்ட வம்சாவளிப் பட்டியல்கள் ... 23
7. 1804 இல் பிரித்தானியரின் பகைவர்களாகப் பிரகடனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சோனக மனிதர் எழுவர் 25
8. ஔது கண்டு மரிக்கார் ஹசன் (ஒசன்) லெப்பை 26
9. எஸ். டீ. இஸ்மாயில் ஹாஜி ... ... 28
10. செய்கு இஸ்மாயில் லெப்பை அப்துல் வத்தீபு அல்லது லெவ்வை சின்னலெவ்வை ... ... 35
11. எம். சீ. சித்திலெப்பை... ... ... ... 38
12. மீரா லெப்பை பக்கீர் தம்பி ... ... 45
13. முகம்மது காஸிம் அப்துர் ரஹ்மான் ... 46
14. அறபி பாஷா ... ... ... 50
15. ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் ... ... 59
16. ஏ. எம். வாப்பிச்சி மரிக்கார் ... ... 66
17. ஏ. எம். சரீபு ... ... ... 75
18. எம். எல். எம். ஸெய்னுதீன் ஹாஜியார் ... 77
19. ஐ. எல். எம். நூர்தீன் ஹாஜியார் ... 80

20. அகமது லெப்பை மரிக்கார் ஹஸன் மீரா லெப்பை மரிக்கார்... ... ... 83
21. மீராலெப்பை மரிக்கார் முகம்மது உதுமா நெய்னா மரிக்கார் ... ... ... 83
22. கரீம் ஜீ ஜபர் ஜீ ... ... ... 84
23. எஸ். எல். நெய்னா மரிக்கார்... ... ... 88
24. டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான் ... ... 94
25. பூதென் பூதில் உம்பிச்சி ... ... ... 100
26. என். டீ. எச். அப்துல் கபூர் ... ... 101
27. என். எச். எம். அப்துல் காதர் ... ... 109
28. எம். ரீ. அக்பர் ... ... ... 114
29. எம். சீ. அப்துல் காதர் ... ... ... 118
30. எஸ். எல். மஹ்மூது ஹாஜியார் ... ... 126
31. ஸேர் முகம்மது மாக்கன் மாக்கர் எபெண்டி... 131
32. ரீ. பீ. ஜாயா ... ... ... 138
33. டபிள்யு. எம். ஹாஷிம் ... ... ... 140
34. வைத்ய திலக்க ராஜகருணா ஹாஜி முகாந்திரம் செய்கு முகம்மது உடையார் ... ... 143
35. ஏ. எம். ஹாமிது ... ... ... 145
36. எஸ். எம், இஸ்மாயில் ... ... ... 148
37. எம். எல். எம். ரியாழ் ... ... ... 151
38. 'மோர்ஸ்' அல்லது முகம்மதியர் சம்பந்தமான விசேட சட்டங்கள் ... ... ... 170

# பேருவலை பெரியமுதலி மரைக்கார்

பேருவலையில் வாழ்ந்த பெரியமுதலி மரைக்கார் என்பாருக்கு கி.பி. 1016 இல் சிங்கள மன்னனொருவன் வழங்கிய பழங்கால செப்புப் பட்டயம் ஒன்றிலிருந்து பெறப்படும் கீழ்க்காணும் பகுதி, வாசகர்களின் கவனத்தைக் கவருவதாக இருக்கின்றது:

"........பேருவலையில் கப்பல்களை நங்கூரமிட்டதற்காகவும், அவற்றை ஏனைய நாடுகளுக்கு அனுப்பி கிராமத்தை முன்னேற்றமடையச் செய்ததற்காகவும் பேரரசன் பேருவலையுற்று, அவற்றுக்குப் பகரமாக........ பெரியமுதலி மரைக்கார் வழிவரும் ஆண்மக்கள், பேரர், அவர்களின் பிள்ளைகள் உயிரோடிருக்கும் வரை அவர்கள் "ராஜகாரிய" (அதாவது, அரசாங்கத்துக்காகப் பல்லக்குத் தூக்கும் சேவை) செய்வதோ, அல்லது பணவரி செலுத்துவதோ தேவையில்லை. அவரின் நற்பெயரும் நன்மதிப்பும் என்ஞான்றும் குறைவின்றிப் போற்றப்படல் வேண்டும். தங்கள் மதக் கடமைகளைச் செய்வான் வேண்டி விண்ணப்பத்தின்பேரில் அவர்கள் பள்ளிவாசல்களைக் கட்டவுள்ளனர். அவை பேணிக் காக்கப்படல் வேண்டும். அத்துடன் அதன் பொருட்டு அவர்கள் விண்ணப்பிக்கும் எந்த ஒரு நிலமும் அவர்களுக்குக் கொடுபடல் வேண்டும்.

அவர் தீவின் எப்பாகத்திலும் கப்பற்சரக்கு வாணிபம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்........"

இச் சோனக வணிகரது விண்ணப்பத்திற்கிணங்க இஃது அவ்வரசனால் வழங்கப்பட்டது. சரித்திரச் சான்றுகளின்படி அவ்விண்ணப்பம் "செப்போலைப் பத்திரம்" என அறியப்படுகிறது.

பெரியமுதலி மரைக்கார் அவர்கள் நாட்டுக்காற்றிய சேவையைக் கருத்திற் கொண்ட அன்றைய ஆட்சியாளன் பின்வரும் உரிமைப் பத்திரத்தை அவருக்கும் அவருடைய சந்ததியினருக்கும் அளித்தான்:

> "பெரியமுதலி மரைக்காரும் அவருடைய சந்ததியினரும் சிறைத் தண்டனை, அல்லது மரண தண்டனையிலிருந்து இத்தால் விலக்களிக்கப்படுகின்றனர். மாட்சிமை தங்கிய மன்னன், அவனது அரசுக்கு அவர்கள் புரிந்த சேவையின் காரணமாகப் பேருவகையுற்றதால் அவர்கள் அவ்வாறு கௌரவிக்கப்பட்டு மதிப்பளிக்கப் படுகின்றனர். மேலும், அரசாங்கம் அவர்களை எக்காலமும் எல்லாக் குழப்பங்களிலிருந்தும் இன்னல்களிலிருந்தும் காப்பாற்றல் வேண்டும். அவர்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றவும் பள்ளிவாசல்களைக் கட்டவும் சுதந்திரமுடையோராய் இருப்பதோடு, தாங்கள் விரும்பிய எந் நிலத் துண்டிலும் வணக்கஸ்தலங்களை அமைக்க விரும்ப முடியும். கப்பல்களைக் கட்டவும் அவற்றின் மூலம் ஏனைய நாடுகளுடன் வாணிபம் செய்யவும் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது.
>
> (ஒப்பம்) புஷ்மன்
>
> (ராஜ வீர புஷ்மன்)"

இவன் இலங்கையின் அரசன் அல்லன் எனவும், ஆனால் ஒரு குறுநில மன்னனாக இருந்திருக்கலாம் எனவும் கலாநிதி போல் பீரிஸ் கருத்துத் தெரிவிக்கிறார். அத்துடன் மன்னனுக்காற்றிய பெருஞ்சேவையின் பெறுபேறாக அவர் "செப்புத் தட்டு" (செப்புப்பட்டயம்) வடிவான ஒரு "முத்ரிகா"

வையும் பெற்ருர். இஃது, அதனை வைத்திருப்பவர்களுக்கு அந்நாளில் அரிதான அனேக சிறப்புரிமைகளை அளித்தது. இந்த விசேட சலுகைக்காக—

(அ) பெரியமுதலி மரைக்கார் அவர்கள் தென்னிந்தியாவிலுள்ள சாலிமங்கலத்திலிருந்து எழுவரை அரச பல்லக்கைச் சுமக்க அழைத்து வந்தார். அவர்களாவோர்: வலி அரசன், வலி முனி, வலி அருணன், வலி சல்மன், வள்ளி அரசன், பரமுத்தி, வள்ளியன்.

(ஆ) பெரியமுதலி மரைக்கார் அவர்கள், பேருவலை வணிகத்துறைக் களத்தைப் பராமரித்து வந்தார். அத்துடன் ஏனைய பகுதிகளிலிருந்து புதிய குடியிருப்பாளர்களைக் கொணர்ந்து அங்கு குடியேற்றியதன் மூலம் சனத் தொகையையும் அதிகரித்தார். தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இந்த எழுவருடன், நாட்டுக்கு உபயோகமுள்ள மற்றும் அனேகரும் வந்தனர். சிலர் தையற்காரர்களாகவும் நெசவாளர்களாகவும் இருந்ததோடு, ஏனையோர் தச்சர்களாகவும் வணிகர்களாகவும் இருந்தனர். மன்னன் மிக்க மகிழ்வுற்று அவர்களுக்கு நாட்டில் குடியமர எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தான். அவர்கள்தாம் "சலாகம" அல்லது சாலிய இனத்தின் மூதாதையராவர்.

பெரியமுதலி மரைக்கார் அவர்களின் வழிவந்தோரில் சோனகரின் தலைவரான பஸ்தாமியார் லெப்பை மேஸ்திரியார் மீராலெப்பை மேஸ்திரியார் என்பாரும் ஒருவராவார். அவர் அகமது லெப்பை எனும் தம் மகனை கி. பி. 1760இல் மரதானைப் பள்ளிவாசலின் பொறுப்பாளராக விட்டுச் சென்ருர்.

# அகமது லெப்பை
## சின்னலெப்பை மரிக்கார்

அகமது லெப்பை சின்னலெப்பை மரிக்கார் என்பாரைக் காலிச் சோனகரின் தலைவராக நியமித்து அப்போதைய ஆட்சியாளர் வழங்கிய நியமனப் பத்திரம் பின்வருமாறு:

"சோனகரான செய்யிது நாதி நெய்ந்த மரிக்கார் லெப்பை நெய்ரு மரிக்கார், எம்மால் சமீபத்தில் காலிப் பட்டின சோனகரின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டதாலும், அதிகாரத்திலுள்ள இச் சமூகத்தின் மற்றத் தலைவர், தாம் சேவையில் மூத்தவராக இருப்பாதல் முன்னையவரை விட முன்னுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டுமென இப்போது விண்ணப்பம் செய்திருப்பதாலும், யாம் சொல்லப்பட்ட தற்போதைய தலைவரின் வேண்டுகோளைப் பரிசீலனை செய்து, அவர், சோனகரான இஸ்மாயில் லெப்பை மேஸ்திரி காதர் என்பாரைத் தம் "Canne Kappel"ஆக அமர்த்தும் அதிகாரத்தோடு, காலியின் நான்கு எல்லைக்குள் வதியும் சோனக சமூகத்தின் முதல் தலைவராக நியமிக்கப்பட விரும்பத்தக்கவர் எனக் கொள்கின்றோம்.

அக் காரணத்தால், சம்பந்தப்பட்ட எவராயினும், அஃது அவருக்குக் கடமையாதலால், சொல்லப்பட்ட அகமது லெப்பை சின்னலெப்பை மரிக்கார் என்பாரைச் சோனகரின் முதல் தலைவராக ஏற்று, அவருக்கு மதிப்பும் மரியாதையும் அளித்து, அவராணை ஏற்று ஒழுகவும் கட்டளையிடப் படுகின்றனர். கொழும்பு, 28 ஜூலை 1757."

# மூரிஷ் வைத்தியர்

மீராலெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்கார் (மத்திச்சம் மீராலெப்பை மேஸ்திரியார் செய்கு அப்துல் காதிர் மரிக்கார்) என்பார் ஒரு பிரபல மருத்துவராவார். அவர் கறுவா பட்டை கழற்றுவோரின் காவலரதும் (சாலிய தளபதிகள்) கொழும்பில் டச்சுக்காரரின் கீழ் சேவை புரிந்த சோனக படையணியினதும் மருத்துவராக நியமிக்கப்பட்டார். 1806இல் பிரித்தானியரால், உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சுகாதாரத் திணைக்களத்தின் சுதேச அத்தியட்சகராக அவர் நியமிக்கப்பட்டார். தேசாதிபதி நோத் பிரபுவின் ஆணையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 1806 ஓகஸ்ட் 1ஆம் தேதிய ''மோர்ஸ்'' அல்லது முகம்மதியர்கள் சம்பந்தமான விசேட சட்டங்களில் கையொப்பமிட்டவர்களில் அவரும் ஒருவராவார். 1823இல் சோனக சமூகத்தின் தலைவராகவும் நடுத்தீர்ப்பு வழங்குபவராகவும் நியமிக்கப்பட்ட அவர் 1840 பெப்ரவரி 25ஆம் தேதி இறையடி சேர்ந்தார்.

இலங்கையின் பிரதம நீதியரசரும் மாட்சிமை தங்கிய மன்னரின் பேரவைத் தலைவருமாக இருந்த ஸேர் அலக்சாந்தர் ஜொன்ஸ்டன் என்பவரால் ஒழுங்கு செய்யப்பட்டு, 1834 ஜூன் 19ஆம் தேதி அரச ஆசிய கழக இலங்கைக் கிளைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட மீராலெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்காரின் உருவப்படம் கலாநிதி ஸேர் போல் பீரிஸின் கவனத்தக்கு வந்தது. அவர் அதைக் கொழும்பிலுள்ள தேசிய பொருட்காட்சி சாலைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அது இப்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பு இல. C/448

மூரிஷ் வைத்தியரின் முன்மரபு பின்வருமாறு விரிகின்றது:

1. சின்னாசிய, கோனியாவைச் சேர்ந்த சுல்தான் ஆப்தீனின் மைந்தர் இளவரசர் ஜமால்தீன் என்பார் கி.பி.

800இல் பேருவலேயில் குடியேறி மருத்துவத் தொழிலில் ஈடு பட்டார். இது சிங்கள அரசன் மூன்ருவது தாப்புலவின் ஆட்சிக்காலத்திலாகும். அவ்வரசன் ஒரு மருத்துவக் கல் லூரியை நிறுவினுன்.

2. வைத்தியர் பெரியமுதலி மரைக்கார் (கி.பி.1016): எதிர்க்கரையான இந்தியாவிலிருந்து இலங்கைக்கு புடவை நெய்வோரை முதன்முதல் அறிமுகப்படுத்தியவர். (இப் புடவை நெய்வோரே தற்போதைய ''சலாகம'' வம்சத்தின ரின் மூதாதையர்). அதற்காக அக்கால சிங்கள அரசனுல் அவருக்கு அரச அங்கீகாரம் (செம்புப் பட்டம்) அளிக்கப் பட்டது.

3. வைத்தியர் மின்னு மரிக்கார் பஸ்தாமியார் (கி.பி. 1515) போர்த்துக்கேய அரச குடும்பத்தின் மருத்துவராக நியமிக்கப்பட்டவர்.

4. வைத்தியர் உதுமா லெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்கார் மேஸ்திரியார் (கி. பி. 1640). டச்சு அரசாங்க மருத்துவர்.

5.. வைத்தியர் பஸ்தாமியார் லெப்பை மரிக்கார் மீரா லெப்பை மேஸ்திரியார். டச்சு அரசாங்க மருத்துவர். பதவி உயர்த்தப்பட்ட நிலேயில் சாலிய தளபதிகளேத் தம் பொறுப் பிற் கொண்ட மருத்துவராகக் கொழும்புக்கு அனுப்பப் பட்டார்.

6. வைத்தியர் மீரா லெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்கார். போற்றப்படும் ''மூரிஷ் வைத்தியர்''.

மூரிஷ் வைத்தியரின் குடும்பம் பற்றிய ஒரு குறிப்பு மகா முதலியார் ஏப்ரஹம் டி. சேரத்தின் ''குல லேக்க பொத்த''வில் காணப்படுகிறது.

மீரா லெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்கார், மர தானேப் பள்ளிவாசல் அமைந்துள்ள காணிக்கு மூல உரிமை கொண்டாடிய பஸ்தாமியார் லெப்பை மரிக்கார் மீரா

லெப்பை மேஸ்திரியார் அவர்களின் மூத்த புதல்வராவார். சொல்லப்பட்ட மேஸ்திரியார், டச்சு, பிரித்தானிய அர சாங்கங்களின் கீழ் பிரபல மருத்துவராகத் தொழில் புரிப வராக இருந்தார். மரதானைப் பள்ளிவாசல் அமைந்திருக் கும் காணிக்கு நீண்ட காலமாகவும் பிரச்சினையின்றியும் அவர் சொந்தம் கொண்டாடி வந்ததன் மூலம், முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக அதை அவர் 1744இல் உறுதியெழுதி எடுக்க முடிந்தது. இப்போதைய கொழும்பு மரதானைப் பொலிஸ் நிலையத்துக்கும் தெமட்டகொடை வீதிச் சந்திக் கும் இடையிலான ஒரு காணித் துண்டும் அவருக்குச் சொந்தமாக இருந்தது. சொல்லப்பட்ட இரு காணிகளையும் மேஸ்திரியார் ஏற்கெனவே எடுத்ததன் நோக்கம், அவை அவர் புரிந்த மருத்துவத் தொழிலுக்கு மூலிகைகளை வழங்க வேண்டி இருந்தபடியாலாகும்.

கால கதியில் அவர் இப்போதைய மரதானைப் பொலிஸ் நிலையம் இருக்கின்ற இடத்துக்கருகில் ஒரு கட்டடத்தை நிர் மாணித்து, ஆங்கு தமது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். இந்த இல்லிடம் காலப்போக்கில் சேகா மரிக்கார் (செய்கு அப்துல் காதிர் மரிக்கார்) என்பாரின் உடைமையாக வந்தது.

சொல்லப்பட்ட மேஸ்திரியார் அவரின் இல்லிடத்துக்கு எதிர்ப்பக்கக் காணியில் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார். ஆரம்பத்தில் அது அனேகமாக அவராலும் அவரின் குடும் பத்தாராலுமே தொழுகைக்காகப் பாவிக்கப்பட்டது. பின் னர், சுற்றுடலிலுள்ள ஏனைய முஸ்லிம்களும் அப்பள்ளி வாசலைத் தங்கள் தொழுகையிடமாகப் பாவிக்கத் தொடங் கினர். காலகதியில் அப்பள்ளிவாசல் முஸ்லிம் சமூகத்தின ரால் விசாலமாக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டது. அதுதான் இன்று மரதானைப் பள்ளிவாசலாகப் பரிணமிக்கிறது.

மரதானை சீமன் வீதியிலுள்ள "சின்னப் பள்ளிவாசல்", மிகவும் பிந்திய காலத்தில் "பெரிய பள்ளிவாசல்" ஜமா அத்தார் சிலரால் கட்டப்பட்டது. உறுதி இல. 2032; தேதி: 12. 8. 1856. பிரசித்த நொத்தாரிசு ஜீ. டபிள்யு.

ஸ்டொக் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டது. கொழும்பில் 1505இல் இரண்டு பள்ளிவாசல்களும், 1824இல் பதினேழு பள்ளிவாசல்களும் காணப்பட்டன.

மூரிஷ் வைத்தியரைப் பற்றியும் அவரது குடும்பம் பற்றியும் ஸேர் அலக்சாந்தர் ஜொன்ஸ்டன், 1827 பெப்ரவரி 3ஆந் தேதி அரச செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தின் அடிக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறூர். பெரிய பிரித்தானியாவினதும் அயர்லந்தினதும் அரச ஆசிய கழக நிலைய அறிக்கை (Transactions of the Royal Asiatic Society of Great Britain and Ireland) தொகுதி 1, பக்கம் 537இல் இச்சொற்றொடர்கள் காணப்படுகின்றன:

"(R) அப்பொழுது பேருவலையில் வாழ்ந்த பெரும் முகம்மதிய வணிகர் ஒருவருக்கும் அவருடைய எக்காலத்துக்குமான பரம்பரையினருக்கும் என அறுநூறு அல்லது எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் சிங்கள அரசர்களில் ஒருவன் வழங்கிய மிகப் புதுமையானதும் மிகத் தொன்மையானதுமான செம்பாலான பட்டயம் ஒன்றின் நகலொன்று என்னிடம் உள்ளது. எதிர்க்கரையான இந்தியாவிலிருந்து புடவை நெய்வோரை முதன்முதலாக அந்த வணிகர் இந்த நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்ததற்காக அது குறிப்பிட்ட சில சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் அவர்களுக்கு அளிக்கின்றது. அந்த நெசவாளர்களே இலங்கையில் எந்தக் காலத்திலாயினும் குடியேற்றப்பட்ட நெசவாளர்களாவர். இந்தப் பட்டயத்தின் காரணமாக அந்த வணிகரின் நேரடிச் சந்ததியினர், அந்நாட்டின் சிங்கள அரசால் அவர்களின் மூதாதையர்களுக்கு வழங்கப்பட்ட அந்தச் சிறப்புரிமைகளின் ஒரு பகுதியைப் பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் இப்போதும் அனுபவிக்கின்றனர். அவை இலங்கையின் போர்த்துக்கேய, டச்சு, ஆங்கிலேய அரசாங்கங்களால் உறுதிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்தக்

குடும்பத்தின் தலைவர் உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 1806இல் மருத்துவத் திணைக்களத்தின் சுதேச அத்தியட்சகராக என்னால் நியமிக்கப்பட்டார். தீவிலுள்ள சுதேச வைத்தியர்களில் மிக்க அறிவுள்ளவர்களில் ஒருவர் என நாட்டின் குடிமக்களால் அவர் கருதப்பட்டதோடு, சுதேச மருத்துவ நூல்களில் மிகச்சிறந்த ஒரு தொகுதியைத் தம்வசம் கொண்டவராகவும் விளங்கினார். அவற்றில் அனேகம் அவருடைய குடும்பத்தில் எழுநூறு, எண்ணூறு ஆண்டுகளுக் கிடைப்பட்ட காலமாக இருந்து வந்திருக்கின்றன. அந்தக் காலப் பகுதி முழுவதிலும் அக்குடும்பத்தில் குறைந்தது ஒருவராதல் மருத்துவத் தொழிலை மேற்கொள்ள வேண்டியது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இலங்கையில் முகம்மதிய சுதேச வைத்தியர்களால் மருத்துவ நோக்கங்களுக்காக மிகப் பழங்காலந் தொட்டு பாவிக்கப்பட்ட அத் தீவின் எல்லா மூலிகைகளைப் பற்றியும் மிகவும் விவரமான ஓர் அறிக்கையை அவர் எனக்குச் சமர்ப்பித்தார். 1810இல் மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம் எனது ஆலோசனையின் பேரில் இலங்கையில் ஓர் அரச தாவரத் தோட்டத்தை அமைப்பதற்கான பெருநோக்கங்களில், இந்த மூலிகைகளையும் உணவுக்காகவோ வர்த்தக நோக்கங்களுக்காகவோ உபயோகிக்கக்கூடிய தீவின் மற்றும் எல்லாச் செடியினங்களையும் மரக்கறி வகைகளையும் பயிரிடுவதும் விருத்தி செய்வதும் ஒன்றாக அமைந்திருந்தது.''

மருத்துவத் துறையிலும் தத்துவ ஞானத்திலும் அக்கால சோனக மருத்துவர்களுக்கிருந்த அரும்பெரும் அறிவுத் திறன் பற்றி ஸேர் அலக்சாந்தர் ஜொன்ஸ்டன் அதே கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:


''(T) அவர்கள் இலங்கைக்கு அறிமுகப்படுத்திய மருத்துவம் பற்றிய பிரதான நூல்களில் ஒன்று, அவிசின்

ஞவின் நூலாகும். அரிஸ்டோட்டல், பிளாற்ரோ, ஊக்லிட், கலென், டொலமி ஆகியோரின் நூல்களின் மொழிபெயர்ப்புக்களையும் அவர்கள் இங்கு அறிமுகப்படுத்தினர். நான் இலங்கையில் இருந்த பொழுது அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளை முகம்மதிய மத அறிஞர்களும் வணிகர்களும் என்னிடம் கொண்டு வந்தனர். அந்த நூல்கள் ஆரம்பத்தில் தங்கள் மூதாதையரால் பக்தாதிலிருந்து தருவிக்கப்பட்டன வென்றும் அவை இலங்கையில் அவர்களின் அந்தந்தக் குடும்பத்தினரிடம் சில நூறு ஆண்டுகளாக இருந்தன என்றும் அவர்கள் கூறினர்.''

*1800ஆம் ஆண்டளவில் இம் மூரிஷ் வைத்தியர், ''மரக்கலப் பள்ளி''யினதும் அதன் ''வத்த''யினதும் (மரதானைப் பள்ளிவாசலும் அதன் வளவும்) பொறுப்பாளராக இருந்தார். ஜமாஅத்தின் முக்கிய உறுப்பினர்களுக்காக (பிரேத அடக்கத்துக்காக) அவர் அவ் வளவைப் பகுத்தார். அவரது குடும்ப நிலத் துண்டின் இலக்கம் 41 ஆகும். அம் மையவாடியை மூடிவிடுமாறு 1873 மே 21இல் ஒரு பிரகடனத்தின் மூலம் அரசாங்கம் கட்டளையிட்டது. ஆனால், இவ்வைத்தியரின் வழித்தோன்றல்கள் அக்கட்டளையைத் தொடர்ந்து மீறி, அவர்களின் இறந்தோர் சடலங்களை அங்கேயே அடக்கம் செய்தனர். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. சில உறுப்பினர்கள், அவர்களின் இறந்தோர் சடலங்களை அங்கு அடக்கம் செய்ய அரசாங்கத்திடம் அனுமதி வேண்டி நின்றனர். எனவே, ஒரு*

*எதிர்ப் பக்கத்தில் காணப்படுவது மூரிஷ் வைத்தியரது உருவப்படத்தின் புகைப்படப்பிரதி. 'கூபா' தொப்பியணிந்து, 19ஆம் நூற்றுண்டின் ஆரம்ப கால உயர்குடிமகனின் உடையில் காட்சி தருகிறார். வழக்கத்துக்கமைய காலணி கழற்றி வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு தேசிய பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கும் இவ்வுருவப்பட மூலப் பிரதியின் பின்புறத்தில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது:*

**''ஸேர் அலக்சாந்தர் ஜொன்ஸ்டனால் அன்பளிப்புச் செய்யப் பட்டது 19 ஜூலை 1834.''**



கட்டளைச் சட்டம் பிரேரிக்கப்பட்டு, 1882 ஜூன் 16ஆம் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. எனினும், அப்போது குப்பியாவத்தை மையவாடியில் பிரேத அடக்கம் நடந்து கொண்டிருந்ததனால் இக்கட்டளைச் சட்டம் கைவிடப்பட்டது. அதன் பின்னர் இக் குடும்ப மையவாடியின் அரைவாசி இலங்கை அரசாங்க ரெயில்வேயினால் சுவீகரிக்கப்பட்டது. அவ்விடத்தில் இப்போது ஓர் அரச மரம் நிற்கிறது. பள்ளிவாசல் வளவில் ஒரு புளிய மரத்தடியில் இருந்த மூரிஷ் வைத்தியரின் கல்லறை மட்டமாக்கப்பட்டு, அவ்விடம் ஜமாஅத்தாரின் உபயோகத்துக்காக வாகனம் நிறுத்துமிடமாக ஆக்கப்பட்டுள்ளது.

1931 இல் இவ் வைத்தியரின் பேரரான வைத்தியர் பஸ்தாமியார் அப்துல் கரீம் என்பாரின் சடலத்தையும் 1955 டிசம்பர் 27 இல் அவரின் வழித்தோன்றல்களில் ஒருவரான புரக்டர் எஸ். டீ. எம். புர்ஹான் என்பாரின் சடலத்தையும், அவர்கள் கொண்டாடி வந்த உரிமைக்கிணங்க 41ஆம் இலக்க நிலத் துண்டில் அடக்கம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அம் முயற்சி வெற்றிபெறவில்லை.

இம் மூரிஷ் வைத்தியரின் சந்ததியில் உதித்த ஒருவர் வைத்திய கலாநிதி எம். நாபிக் புர்ஹான் ஆவார். அவர் மருத்துவத் தொழிலில் சிறப்பெய்திய ஒருவர். எப்.ஆர்.சீ. எஸ். பட்டம் பெற்ற முதலாவது இலங்கை முஸ்லிம் அவரே.

ஏ. சீ. அப்துல் காதிர், ஏ. சீ. ஜமால்தீன் ஆகிய இருவரும் இந்த மூரிஷ் வைத்தியரின் கொள்ளு பேரர்களாவர். மரதானைப் பள்ளிவாசல் பரிபாலன சபைச் செயலாளராக ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் கடமை புரிந்த உயர் நீதிமன்ற புரக்டரான எஸ். டீ. எம். புர்ஹான் என்பாரும் அவரின் சந்ததியில் உதித்தவராவார்.

உயர் நீதிமன்ற புரக்டர் முஹ்யித்தீன் புர்ஹான், அகில இலங்கை வை. எம். எம். ஏ. கூட்டவையின் ஆரம்ப உறுப்பினரும் பதின்மூன்றாவது தலைவருமான மர்ஸூக் புர்ஹான் ஆகியோரும் அவரின் சந்ததியில் உதித்த மற்றுமிருவராவர்.

# சேகாதி மரிக்கார்

## (உதுமா லெப்பை மரிக்கார் செய்கு அப்துல் காதிர் மரிக்கார்)

இலங்கையில் டச்சுக்காரர் ஆட்சி ஒரு முடிவு நிலைக்கு வந்துகொண்டிருந்த காலத்தில் கொழும்பு டாம் வீதியில் ஒரு பிரபல சோனக குடும்பம் வாழ்ந்து வந்தது. இப்பொழுது 263, 265, 269ஆம் இலக்கங்களைக் கொண்ட இல்லங்களும் 263ஆம் இலக்க குடியிருப்புத் தோட்டமும் அமைந்திருக்கும் இடக்கங்களே அக் குடும்பத்தினர் வசித்த இடமாகும். ''டாம் வீதி'' எனும் சொல்லிலிருந்தே அது சதுப்பு நிலத்திலிருந்து மீட்கப்பட்ட காணி என்பது தெளிவாகிறது. மேற்குறிப்பிடப்பட்ட குடியிருப்புத் தோட்டம் இன்றும் ''தண்ணிக்கரைத் தோட்டம்'' என்றே அறியப்படுகின்றது. இக் குடும்பம், கோனியாவிலிருந்து கி.பி. 800இல் இலங்கையில் குடியேறிய அரபு மகனான இளவரசர் ஜமால்தீனின் தலைமுறையாகும். இந்தக் காணித் துண்டு, மஃதூரம் கண்டு மரிக்கார் என்பாருக்குச் சொந்தமாக வந்தது. அதில் அவர் குடியிருந்தார். அவரது எடுப்பான தோற்றத்தின் காரணமாக அவரை "மாப்புளே'' (மாப்பிள்ளை) என அழைத்தனர். அவரின் மகன் உதுமா லெப்பை மரிக்கார் (இறப்பு 1800) ஆவார். அவரது உடல் மரதானைப் பள்ளிவாசல் வளவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். ''கொடி போட்ட மரிக்கார்'' எனும் புனைபெயர் கொண்டு அழைக்கப்பட்ட முகம்மது ஹனீபா மரிக்கார் என்பாரும் சேகாதி மரிக்கார் எனப் புகழ்பெறும் செய்கு அப்துல் காதிர் மரிக்கார் என்பாருமே அவர்களாவர். முன்னவர் பற்றிய தகவல்கள் அறியக் கிடைக்கவில்லை. பின்னவர் 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிறந்தவர். அவரது முதலாவது விவாகத்தின் காரணமாக அவருக்கு உதுமான் (பிறப்பு 1799) அல்லது உதுமா லெப்பை மரிக்கார் என்பவர் பிறந்தார். அவரின் இரண்டாம் தார

மான, ஒசன் லெப்பை (கப்போடயார்)[1] என்பாரின் மக ளான கதிஜா உம்மா மூலம் அவருக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். அவர்களாவோர்:

1. முகம்மது காஸிம் அல்லது கச்சு லெப்பை அல்லது காஸிம் லெப்பை மரிக்கார்.
2. முகம்மது ஹுசைன் அல்லது லெவ்வை மரிக்கார்.
3. உம்மு ஹானி.
4. இதுரூஸ் அல்லது இதுரூஸ் லெப்பை மரிக்கார்.
5. பொன்னு அல்லது பொன்னுச்சி உம்மா.

பிரபல கொடை வள்ளலான அல்ஹாஜ் என். டீ எச். அப்துல் கபூர் அவர்களின் தகப்பனார், உம்மு ஹானி அவர் களின் மகனாவார். பிரபல சோனகத் தலைவரான ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்கள் இதுரூஸ் மரிக்கார் அவர்களின் மகனாவார்.

சோனகர், கல்வியிலும் வழிகாட்டலிலும் வாய்ப்புக் குறைந்தவர்களாக இருந்த காலத்தில் சேகாதி மரிக்கார் அவர்களின் வழித்தோன்றல்கள் புகழ்பெற்று விளங்கினர். சேகாதி மரிக்கார் அவர்களின் வாழ்க்கையும் சுவாரசியத் தில் குறைந்ததன்று. அவரது கல்வித் தகைமை பற்றி எது வும் அறிய முடியவில்லை. எனினும், ஸேர் அலக்ஸாந்தர் ஜொன்ஸ்டன், தாம் மூன்றாவது ஜோர்ஜ் மன்னருக்கு 1806ல் அனுப்பிய அறிக்கையில் இலங்கைச் சோனகர் பற்றிக் குறிப் பிட—அவர்களின் சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்கள், கலாசாரம் ஆகியவை பற்றிக் குறிப்பிட—தகவல் சேகரிக்கக் கலந்தாலொசித்த சோனகத் தலைவர்களுள் சேகாதி மரிக் கார் அவர்களும் ஒருவராவார். இலங்கைச் சோனகர் சம் பந்தமான எந்த ஒரு விடயம் பற்றியும் தேசாதிபதிகள் கலந்தாலோசிக்க வேண்டிய பெருமகனாக அவர் இருக்க வேண்டுமென ஸேர் அலக்சாந்தர் ஜொன்ஸ்டன் கருத்துக்

---

1. கப்பலுடையார்.

கொண்டார். எனவே, அவரது அறிவுரையின் பேரில் சோனகத் தலைவர்கள் சேகாதி மரிக்கார் அவர்களை அதன் பொருட்டான தங்கள் விருப்பாளராகத் தேர்ந்தெடுத்தனர். அதன் பிரகாரம் அவர் 1818 ஜூன் 16ஆம் தேதி ஸேர் ரொபட் பிரௌன்ரிக்கினால், கொழும்பினதும் சல்பிற்றிக் கோரளையினதும் தலைமைச் சோனக மனிதராக நியமிக்கப் பட்டார். அதே பதவிக்கு அவர் ஸேர் எட்வட் பார்ன்ஸி னால் 1824 மே 22ஆம் தேதி மீண்டும் நியமிக்கப்பட்டார்.

அந்நாளில் கொழும்பு மரதானைப் பள்ளிவாசல் செடி கொடிகளால் சூழப்பட்ட ஒரு சிறிய மண்டபமாகவே இருந் தது. சேகாதி மரிக்கார் அவர்கள் ஜமாஅத்தாரையும் தம் நண்பர்களையும் அழைத்து பள்ளிவாசலைப் புனரமைக்கப் பணம் வசூலித்தார். அவ்வித கூட்டு முயற்சியால் பள்ளிவா சல் பெருப்பித்துக் கட்டப்பட்டது. கட்டடம் கி. பி. 1840 ஜூன் 14ஆம் தேதி கட்டி முடிக்கப்பட்டது. அவர் அப்பள்ளி வாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராக ஓசன் லெப்பை என்பாரை நியமித்தார். அவருக்குப் பின் காஸிம் லெப்பை மரிக்கார் அப்பதவிக்கு நியமிக்கப் பட்டார். முகம்மதியர், அல்லது "மோரர்ஸ்" (முஅர்ஸ்) என அறியப்பட்ட சோனகர் தொடர்பான சட்டதிட்டங் களை ஆக்குவதற்கு உதவும் பொருட்டு அவர் சோனக 'கமிஷன'ராகவும் கடமை புரிந்தார். 1820இல் அரசாங்கத் தால் அவர் கிழக்கு மாகாண நடுவஸ்தராக நியமிக்கப்பட் டார். 1835இல் அவர் கிழக்கு மாகாண முதலியாராக இருந்தார். அங்கு அவர் தம் மூத்த மகனான காஸிம் லெப்பை மரிக்காரைத் தமது உத்தியோகப் பணிகளில் பயிற்றுவித் தார். அவர் எத்துணை மதிப்புப் பெற்றவராக இருந்தா ரெனில், குடும்ப சர்ச்சைகளில் அவரது சொல்லே

மேலோங்கி இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவரின் கருத்துரைப்படி உடனே தீர்வுகளும் பெறப்பட்டன. எந்தப் பொதுவிடயத்திலும் அவர் அரசாங்கத்துக்கு அறிக்கை செய்யுமுன் தம் சமுதாயத்தினரைக் கலந்தாலோசித்தார். இப்பெருமகனின் உருவப்படம் கிடைக்கப் பெருமல் இருப்பது, அல்லது இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கதே. நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பயன்மிகு சேவைகள் செய்து, தம்போன்ற உபயோகமுள்ள பிள்ளைகளைப் பெற்றெடுத்த அவர் 1847.6.14ஆம் நாள் இறையடி சேர்ந்தார்.

அவரின் மூத்த மகன் காஸிம் லெப்பை மரிக்கார் முதலியார் 1867இல் தேசாதிபதியால் "கேட் முதலியா"ராக நியமிக்கப்பட்டார். அவரின் இன்னெரு மகனை ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் என்பார் பல அரசாங்கத் திணைக்களங்களில் காசாளராகக் கடமை புரிந்தார்.

கீழ் வருவது, மரதானைப் பள்ளிவாசல் புனரமைக்கப் பட்ட சமயம் அப்பள்ளிவாசலின் முகப்பில் செதுக்கப்பட்ட அறபுப் பாடலின் மொழிபெயர்ப்பாகும். பாடல், அதுபோழ்து பள்ளிவாசல் கதிபாகக் கடமை புரிந்த சேகு முஹியத்தீன் சின்ன மீரா ஔதுகா லெப்பை என்பாரின் படைப்பாகும்:

"கஃபாவை நிறுவியவரின் உள்ளத்தைத் தூய்மையாக்கியவனை அல்லாஹ்வின் திருநாமத்தால், யாம் அல்லாஹ்வின் இந்த வீட்டுக்கான அத்திவாரத்தை "ளுஹறா" நேரத்தில் இடுகிறோம். அவ்வாறு செய்வதால் யாம் இம் முற்பகல் வேளையில் "தக்வா"வின் வழி நடந்தோம். இது கண்ணியமும் நன்மையும் நிறைந்த றஜப் மாதத்தின் ஆறும் நாளாகும். அந்நாள் தான் இமாம் அவர்கள் அவனை (அல்லாஹ்)வைப் புகழ்ந்து

நின்றனர். அத்துடன் மற்றெல்லோரும் ஆங்கு பெரு மானார் (ஸல்) அவர்கள் மீது (அல்லாஹ்வின்) ஆசீர் வாதத்தை இறைஞ்சியவர்களாக ஒன்றிணைந்து நின் றனர்.

ஆசூரா நாளில் (முஹர்ரம் 10ஆம் நாள்) மூஸா (அலை) அவர்களின் வேலை பூரணமாக்கப்பட்டது போல, ஹாஷிம் கோத்திரத்தை விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா சென்ற நாளிலிருந்து ஆயிரம், இருநூறு ஐம்பதுடன் ஆறும் ஆண்டிலான (1256) சிறப்பும் பொலிவும் ஒருங்குநிறை ஹஜ் நாளில் (துல்ஹஜ் 10ஆம் நாள்) இந்தக் கட்டடமும் முடிக்கப்பட்டது. எங்கள் இறைவா! உன்முன் மண்டியிட்டு, உன்னைப் பெருமைப் படுத்தியோருக்கு வெற்றியையும் மன்னிப்பையும் கருணை யையும் ஈந்தருள்வாயாக. பள்ளிவாசல்களைக் கட்ட விதந்துரைத்தவர் மீதும் யாம் உனது ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கின்றோம். அவர் உன் அன்புமிக்க அடி யானும் மக்காவில் தொழுதவரில் சிறந்தவருமாவார்.

1256 ஆம் வருடம் ஹஜ் மாதம்.''

### சேகாதி மரிக்கார் அவர்களுக்கு பிரித்தானியர் வழங்கிய நியமனப் பத்திரத்தின் உண்மைப் பிரதி

''அதி உன்னத பாத் ஒடரின் நைட் கொமாண் டரும் இலங்கைத் தீவின்-அதன் சார்பு நிலங்களுட்பட-பிரித்தானிய குடியிருப்புக்களினதும் ஆள்நிலப் பகுதிகளி னதும் தேசாதிபதியும் முதற்பெரும் படைத் தலைவரு மான மேன்மை தங்கிய லெப்டினண்ட் ஜெனரல் ஸேர் எட்வட் பார்ன்ஸ் அவர்களால்—

உதுமா லெப்பை மரிக்கார் சேகாதி மரிக்காரின் உன்னத சிறப்பியல்புகளிலும் ஆர்வத்திலும் நல்லெண்ணத்திலும் திறமையிலும் எமக்கு மிக்க நம்பிக்கையிருப்பதால், யாம் இத்தால் அவரை எமது அரசாண்மை காலத்தில் கொழும்பினதும் சல்பிற்றி கோரளையினதும் தலைமைச் சோனக மனிதராக நியமிக்கிறோம்.

அத்துடன், சொல்லப்பட்ட உதுமா லெப்பை மரிக்கார் சேகாதி மரிக்காருக்கு, அவருடைய முன்னோர்கள் கொழும்பினதும் சல்பிற்றிக் கோரளையினதும் தலைமைச் சோனக மனிதர் எனும் பதவி மூலம் அனுபவித்த, சட்டத்தால் ரத்து செய்யப்பட்ட அல்லது திருத்தப்பட்டவாறல்லாத அவ்வித எல்லா சிறப்புரிமைகளையும் யாம் இந்த ஆவணத்தின் மூலம் மேலும் உறுதிப்படுத்துகிறோம்.

சொல்லப்பட்ட உதுமா லெப்பை மரிக்கார் சேகாதி மரிக்கார் என்பாரைக் கொழும்பினதும் சல்பிற்றிக் கோறளையினதும் தலைமைச் சோனக மனிதர் என ஏற்கவும் அவருக்கு மரியாதையளிக்கவும் கீழ்ப்படியவும் சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களும் இத்தால் பணிக்கப்பட்டு ஏவப்படுகின்றனர்.

அது காரணத்தால் யாம் இந்த ஆவணத்தை அதன் மீது எமது அதிகார முத்திரையைக் கொழும்பில் 1824 மே 22-ஆம் தேதி இட்டு அவருக்கு அளித்துள்ளோம்."

மேன்மைதங்கிய தேசாதிபதியின் கட்டளைப்படி,

ஜீ. ஓ. சீமோர்

## காஸிம் லெப்பை மரிக்கார் முதலியார்

காஸி லெப்பை மரிக்கார் என அறியப்பட்ட காஸிம் லெப்பை மரிக்கார் அவர்கள் உதுமா லெப்பை மரிக்கார் சேகாதி மரிக்கார் அவர்களின் மூத்த புதல்வராவார். 1805 டிசம்பர் 5ஆம் தேதி பிறந்த அவர் கப்போடயார் குடும்பத்தைச் சேர்ந்த ஓசன் லெப்பை என்பாரின் மகளை மணந்தார். அவர் மூலம் அவருக்கு இருகுழந்தைகள் பிறந்தன. அவை குழந்தைப் பிராயத்திலேயே இறந்துவிட்டன. மனைவியின் மறைவுக்குப் பின்னர், கொழும்பைச் சேர்ந்த சுல்தான் கண்டு யூசுப் லெப்பை என்பாரின் மகளான முஹ்யித்தீன் கண்டு நாச்சியா அல்லது மதுங்க நாச்சியா என்பாரை அவர் 1842 மே 26 ஆம் தேதி இரண்டாந் தாரமாக ஏற்றார். அவரும் நான்கு ஆண்களையும் நான்கு பெண்களையும் ஈன்றெடுத்துவிட்டு, 1900 மே 26 ஆம் தேதி கொழும்பு டாம் வீதியிலுள்ள இப்போதைய 268 ஆம் இலக்க இல்லத்தில் இறையடி சேர்ந்தார்.

அவரின் பிள்ளைகள்:

1. ஹப்ஸா உம்மா: திருகோணமலையில் 1843.6.1. இல் பிறந்தார். சி. எல். சம்சுதீன் என்பாரை மணந்தார்.

2. முகம்மது யூசுப்: 1844.12.11 இல் திருகோணமலையில் பிறந்தார். அவரது முதல் விவாகத்தின் மூலம் அவருக்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் பிறந்தனர். அவரின் இரண்டாந் தாரமாக அமைந்தவர் சித்தி லெப்பை எனப் புகழ்பெற்ற முகம்மது காஸிம் என்பாரின் சகோதரியாவார். கொழும்பு மாநகர சபையில் நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்த முகம்மது யூசுப் 1917 இல் கண்டியில் காலகதியடைந்தார்.

3. ஸப்ரா உம்மா: 1847.5.8 இல் திருகோணமலையில் பிறந்தார். அகமது லெப்பை மரிக்கார் என்பாரை மணந்தார்.

4. ஹனிபா உம்மா: 1848.9.18இல் திருகோணமலையில் பிறந்தார். காதர் சாகிப் சின்னலெப்பை என்பாரை மணந்தார்.

5. ஆயிசா அல்லது மூமினு உம்மா: 1850.11.5 இல் கொழும்பில் பிறந்தார். அவர், மரதானைப் பள்ளி வாசல் நம்பிக்கைப் பொறுப்பாளரும் கஷ்டோவிட்டி யில் அடங்கியிருக்கும் செய்கு உமர் பாதிபுல் யமனீ அவர்களின் கலீபாவுமான காதர்சாகிப் அலியா மரிக்கார் ஆலிம் ஹாஜியார் என்பாரை மணந்தார்.

6. அப்துல் மஜீது: 1853.9.26 இல் திருகோணமலையில் பிறந்தார். அவர் ஸைனம்பு நாச்சியா என்பாரை மணந்து பின்னர் உம்மு ஹானி என்பாரை மணந்தார். அவர் கொழும்புக் கச்சேரியில் காசாளராகவும் பின் னர் எழுதுவினைஞர் சேவையிலும் கடமையாற்றினர்.

7. அப்துல் கபூர்: 1860.5.10 இல் பிறந்தார். முகம்மது லெப்பை மரிக்கார் என்பாரின் மகளை மணந்தார். சுங்கத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய அவர் 1940.830. இல் இறந்தார்.

8. அப்துல் காதர் அல்லது அப்துல் ஜப்பார்: 1863.2.24 இல் பிறந்தார். கப்போடயார் அகமது லெப்பை மரிக்கார் என்பாரின் மகளான ஆயிசா உம்மாவை மணந்தார். சாற்றட் வங்கியில் கடமையாற்றிய அவர் 1920.6.19 இல் இறந்தார்.

காஸிம் லெப்பை மரிக்கார் முதலியார் அவர்கள் தம் தந்தையார் போலவே பொதுநலன் விழைபவராகவும்மார்க்க சேவையில் ஈடுபாடுடைய பக்திமானுகவும் விளங்கினுர். அவரின் மூத்த மகனுன முகம்மது யூசுப் என்பாரின் ஊக்குவித்தலின் பேரிலேயே அறிஞர் சித்திலெப்பை அவர்கள் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியிலும் பொது முன்னேற்றத்திலும் பெரிதும் ஈடுபாடு கொண்டார்.

காஸிம் லெப்பை மரிக்கார் முதலியார் அவர்கள் திருகோணமலையில் தம் தந்தையாருடன் இணைந்து செயலாற்றினுர். அதில் திறமை காட்டிய அவரை ஸேர் ரொபட் வில்மட் ஹோட்டன் என்பவர் 1834.10 23 இல் கிழக்கு மாகாணம் முழுவதற்கும் பிரதம முதலியாராக நியமித்தார். பின்னர் அவர் பதவி உயர்த்தப்பட்டு, 1855.6.19 இல் ஸேர் ஹென்றி ஜோஜ் வோட் என்பாரால் மேற்கு மாகாண அரசாங்க அதிபர் திணைக்களத்தின் முதலியாராக நியமிக்கப்பட்டார். முகாந்திரம், ஆரச்சி, கங்காணி, லஸ்கொரீன் (காவற் படையினர்) ஆகியோரும் அவர்களுடன் தொடர்புடைய ஏனையோரும் அவரது அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப் பட்டனர். 1855 இல் அவர் கொழும்புக் கச்சேரியில் காசாளராகக் கடமையாற்றினுர். 1853.3.3 இல் அவர் முத்துக் குளிப்புக்குப் பொறுப்பான காசாளராக நியமிக்கப்பட்டார். கொழும்புச் சோனக மக்களின் வேண்டுகோளின் பேரில் மரதானைப் பள்ளிவாசலில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அவர் 1859.12.25 இல் கொழும்பின் தலைமைச் சோனக மனிதராக நியமிக்கப் பட்டார். அதன்பின்னர் அவர் பொதுத் திறைசேரியின் காசுக் கணக்கராக நியமிக்கப்பட்டதோடு 1867 ஜுலை 3 இல் ஸேர் ஹேர்க்குலீஸ்

ஜோஜ் ரொபட் ரொபின்சன் என்பாரால் கேட் முதலியாராகவும் நியமிக்கப்பட்டார்.

சேவை மிகுந்த ஒரு வாழ்க்கைக்குப் பின்னர் இறையடி சேர்ந்த அவரின் பூத உடல் 1877.8.16 ஆம் தேதி ஜும்ஆத் தொழுகைக்கு முன்னர் மரதானைப் பள்ளிவாசல் வளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் மகளான ஆயிசா (மூமினா), தன் தந்தை பற்றிக் கூறிய சில விடயங்களை ஆயிசா அவர்களின் பேரப் பிள்ளையான ஏ. ஐ. எல். மரிக்கார் என்பார் பின்வருமாறு ஞாபகப் படுத்துகிறார்:

> "என் தந்தை திருகோணமலை, அல்லது கண்டியிலிருந்து குதிரை வண்டியில் நாட்கணக்கில் பிரயாணம் செய்து கொழும்பை அடைவார். அவர் தொழில் புரிந்த திணைக்களங்களின் ஆங்கிலேயத் தலைவர்கள், என் தந்தை அலுவலகத்தில் இல்லாவிட்டால், அவசர வேலைகள் இருப்பதனால் உடனே அலுவலகத்துக்கு வரும்படி வீட்டுக்குச் செய்தி அனுப்புவார்கள். அவர் தலைப்பாகை அணிந்தவராக காற்சட்டையுடனும் தளர் மேலங்கியுடனும் காட்சியளிப்பதை அக்கால சோனகர் விரும்பாது தமக்குள் குசுகுசுப்பார்களாம். அவ்வுடை அந்நாளில் முஸ்லிம்களுக்கு முரணான ஓர் உடையாகக் கருதப்பட்டது."

★★

# இலங்கைச் சோனகரால் பேணப்பட்ட வம்சாவளிப் பட்டியல்கள்

சோனகர், வம்சாவளிப் பட்டியல்களைப் பேணி வருபவர்களாக இருந்தனர். அவ்வித இரு பட்டியல்கள் பதிவுகளிலிருந்து தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை நெடுங் காலத்துக்கு முன் ஆரம்பித்து 1886 இல் முடிவுறுகின்றன. முதற் பட்டியலிலுள்ளவர்கள் தாங்கள் முதலாவது கலீபா ஹழறத் அபூபக்கர் (ரழி) அவர்களின் வழி வந்தவர்களென உரிமை கொண்டாடினர். சோனகர்களின் ஆரம்ப குடியிருப்புக்களில் ஒன்றான அளுத்கமையில் அவர்கள் வாழ்ந்தனர்.

முதற்பட்டியல்:

1. மூனா அசன் நெய்னா லெப்பை
2. கோஜா அகமது லெப்பை
3. அகமது லெப்பை
4. அசன் நெய்னா லெப்பை
5. முகம்மது லெப்பை
6. அகமது லெப்பை (மாத்தறையில் மணமுடித்தார்)
7. முகம்மது அப்துல் காதிர்

இரண்டாம் பட்டியல்:

1886 இல் முகம்மது இஸ்மாயில் எனப்பெயரிய கதீப் ஒருவர் அளுத்கமையில் வாழ்ந்தார். அவருடைய தந்தை கதீப் அகமதுலெப்பை; அவருடைய தந்தை கதீப் ஐதுரூஸ் லெப்பை; அவருடைய தந்தை செய்கு அப்துல் காதிர் லெப்பை; அவர் கதீப் அசன் லெப்பையின் மகனாவார். அவருடைய தந்தை மீரா அசன் லெப்பை; அவருடைய தந்தை அசன் நாயுடு லெப்பை. கதீப் அசன் நாயுடு லெப்பையின் தந்தை மூனா கோஜா தீனின் மகனாவார். அவர் மூனா அசன் என்பாரின் மகனாவார். அவர் மூனா கௌதுல் கரமைனின் மகனாவார். அவருடைய தந்தையின் பெயர் பஷீருதீன் பக்தாதி.

கீழ்வரும் வம்சாவளிப் பட்டியல் இன்றுவரை மிக நுணுக்கமாகப் பேணப்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. அஃது இத்தீவில் கி. பி. 800 இல் கோனியாவிலிருந்து இங்கு வந்திறங்கிய அறபி ஒருவரான இளவரசர் ஜமால்தீன் என்பாரின் பரம்பரையிலிருந்து ஆரம்பிக்கின்றது:

1. பெரிய முதலி மரைக்கார் 2. செய்கு அகமது 3. செய்கு அப்துல் காதிர் 4. செய்கு இப்ராஹீம் 5. செய்கு அகமது 6. மமுனு மேஸ்திரியார் 7. கப்போடயார் 8. பெரிய தம்பி 9. ஐயூ நாயுடு கணக்கப்பிள்ளை 10. கொரக்கதீவு கப்போடயார் 11. வீரமன் நாயுடு 12. மஃதூம் நாயுடு 13. கப்போடயார் 14. உதுமான் நாயுடு 15. நாது நாயுடு 16 சேகாதி மரிக்கார் 17. மின்னு மரிக்கார் 18. பஸ்தாமியார் லெப்பை 19. மீரா லெப்பை மேஸ்திரியார் 20. கப்போடயார் லெப்பை மரிக்கார் (காலியில் மணமுடித்து சேர்ச் வீதியில் வாழ்ந்தார்.) 21 முகம்மது பளுன்—1958ல் கொழும்பு தெமட்டகொடை வீதியிலுள்ள "ஜெம் ஹவு"ஸில் வாழ்ந்தவர்.

சோனகர் சிறந்த அறபுப் பெயர்களைக் கொண்டவர்களாக இருந்தனர். எனினும், சில சமயம் சிதைந்த சுருக்கப் பெயர்களைக் கொண்டும் அழைக்கப்பட்டனர். உதாரணமாக, இப்ராஹீம் லெப்பை அபூபக்கர் லெப்பை மரிக்கார் எனும் பெயர் "இப்ரால அபக்கல மரிக்கார்" எனவும் செய்கு அப்துல் காதிர் மரிக்கார் எனும் பெயர் "சேகாதி மரிக்கார்" எனவும் மருவின. எனவே, மேற்போந்த பட்டியல்களிலுள்ள பெயர்கள் பல அவற்றின் சிதைவுருவிலேயே உள்ளன. தங்கள் மூதாதையரின் பெயரைக் கொண்டு தங்கள் அடுத்தபடியான வழித்தோன்றல்களைப் பெயரிடுவது அன்றைய வழக்கமாக இருந்து வந்துள்ளபடியால் ஒரே பெயர் மீண்டும் மீண்டும் வருவதாக உள்ளது.

## 1804 இல், பிரித்தானியரின் பகைவர்களாகப் பிரகடனம் செய்யப்பட்ட

# கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சோனக மனிதர் எழுவர்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைச் சோனகர் நால்வரும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைச் சோனகர் மூவரும் உட்பட 169 பேர் பிரித்தானியரின் பகைவர்களாக 1804 ஜூன் மாதம் 4ஆம் தேதி பிரகடனம் செய்யப்பட்டனர்.

அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட சோனக மனிதர்:

**மட்டக்களப்பு மாவட்டம்:**

1. மீரா ஒசன் அவ்வக்கர் (முன்பு காரியப்பா); ராய்முனை.
2. ஒசன் லெப்பை உதுமா லெப்பை (முன்பு காரியப்பா); ராய்முனை.
3. அவ்வக்கர் ஈஸா (முகாந்திரம்); சம்மாந்துறை.
4. அனீஸ் லெப்பை (டச்சு படைச் சேவையில் முன்னாள் மலாய் உத்தியோகத்தர்); மருதமுனை.

**திருகோணமலை மாவட்டம்:**

5. சேகு தீதி (தோப்பூர் வாசி); தோப்பூர்.
6. பீர் முகம்மது; சோனக மனிதரின் பாதிரி.
7. சலம்பதி உடையார் (குச்சவெளி இரண்டாம் கிராமத் தலைவர்); குச்சவெளி.

இத்தகவல், பொலிஸ் நீதிபரிபாலன (1803—4)த்தின் கீழ்க் காணப்படும் பிரகடனங்கள், கட்டளைச் சட்டங்கள், சாசனங்கள், அரச பேரவைக் கட்டளைகள் (1853 இல் பதிப்பிக்கப்பட்ட) ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கை அரசாங்க சட்டவாக்கச் சட்டங்கள், தொகுதி 1 (1796—1833, பக்கங்கள் 75, 76, 77, 78 இலிருந்து பெறப்பட்டது.

# ஒளது கண்டு மரிக்கார்

# ஹசன் (ஒசன்) லெப்பை

புதிய சோனகத்தெருவிலுள்ள பெரிய பள்ளிவாசலின் நிர்வாகத்தில் ஹசன் லெப்பை அவர்கள் அதிமுக்கிய பங்கெடுத்தார். புதிய சோனகத்தெருவில் இப்பள்ளிவாசலோடிணைந்த மையவாடியைச் சுகாதார கட்டளைச் சட்டத்தின் கீழ் 1874 ஒக்ரோபர் 21 ஆம் தேதியிலிருந்து முடிவிடும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஹசன் லெப்பை அவர்கள் முஸ்லிம் மக்களுக்காக மையவாடியொன்றைத் தேட முனைந்தார். அவருக்கு பள்ளிவாசலின் செல்வம் படைத்த முகாமையாளர்கள் (மத்திச்சம்மார்) பக்கபலமாக இருந்தனர். நிதி சேகரிக்கப்பட்டு மாளிகாவத்தையில் 37 ஏக்கர் 3 றூட் 13 பேர்ச் காணி வாங்கப்பட்டது. (வரைபட இல. 1826; நில அளவை: ஜீ. எல். ஷ்ரெய்டர்; உறுதி இல. 85; நொத்தாரிசு, சீ. எச். ஆலிப்; தேதி, 10-11-1890). இக்காணி முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்காகப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளருக்குக் கையளிக்கப்பட்டது.

ஹசன் லெப்பை அவர்களின் புதல்வர்கள் உதுமான் ஹாஜியும் அப்துல் மஜீதுமாவர். ஹசன் லெப்பை அவர்கள் துருக்கி அரசுக்கான அயல்நாட்டுப் பேராளு (கொன்ஸல்) மாவார். அவருக்குப் பின் அவருடைய மகன் அப்துல் மஜீது அவர்கள் அந்தப் பதவியை வகித்தார். 1900 இல் கொன்ஸல் மஜீது அவர்கள் துருக்கி சுல்தானின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் முக்கிய பங்கெடுத்தார். அந்தக் கொண்டாட்ட தினத்தில் அவர் ஹமீதியாப் பாடசாலைக்கான அடிக்கல்லை நாட்டியதோடு, கொழும்பு பிரதான வீதி (மெயின் ஸ்டிரீட்) யில் "இப்ராஹிம் பின்

அகமது'' எனும் கடைக்கான அத்திவாரத்தையும் இட்டார்.

கொன்ஸல் மஜீது அவர்கள் பெண்மக்கள் இருவரின் தந்தையாவார். திருமதிகள் எம். ஏ. சி. முகம்மது, ஸூபி அப்துல் அஸீஸ் என்போரே அவர்கள்.

காலியில் துருக்கி அரசுக்கான துணைக் கொன்ஸலாக இருந்த முகம்மது மாக்கன் மாக்கர் எபெண்டி என்பார் கொன்ஸல் மஜீதுக்குப் பின் அப்பதவியை வகித்தார்.

ஹஸன் லெப்பை அவர்களின் அடுத்த புதல்வரான உதுமான் ஹாஜி அவர்களும் ஷம்ஸி லெப்பை மதார் லெப்பை அவர்களும் அன்னாருக்குப் பின் மாளிகாவத்தை மையவாடியின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக ஆகினர். மதார் லெப்பை அவர்களின் இறப்புக்குப்பின் உதுமான் ஹாஜி அவர்களின் மகன் நூர்தீன் என்பாரும் உதுமான் ஹாஜி அவர்களின் இறப்புக்குப்பின் அவரின் இளைய மகன் ஸுலைமான் என்பாரும் அப்பதவிகளை வகித்தனர்.

மாளிகாவத்தை மையவாடியின் உபயோகிக்கப்படாத ஒரு பகுதி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது. ஓ. எச். எம். ஸுலைமான் அவர்கள் இம்மையவாடியின் உறுதியையும் எல்லா உரிமைகளையும் தனி நலன்களையும் புதிய சோனகத் தெரு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்புக் குழுவிடம் ஒப்படைத்தார். 1875 இல் இக்குழுவின் சார்பாகவே இம்மையவாடிக்கான காணி வாங்கப்பட்டது. ஒருபோது, சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் துணைத் தலைவராக இருந்த அவர் மாளிகாவத்தைக் காணியில் பத்து ஏக்கரை இந்நிலையத்தின் பேரில் உறுதிமாற்றித் தருவதாக வாக்களித்திருந்தார்.

மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியிலுள்ள ஒரு தகடு ஹஸன் லெப்பை அவர்களின் பெயரை நினைவு கூருகிறது. அவரது உருவப்படமொன்று 1877 இல் ஜோன் கப்பர் என்பாரால் ''ஓல்ட் சிலோ''னில் பிரசுரிக்கப்பட்டது.

## எஸ். டீ. இஸ்மாயில் ஹாஜி

அறபிகள் இலங்கைக்குச் சப்பலேறி வந்தனர். இலங்கையை வந்தடைந்தபோது அவர்கள் பாரசீக, இந்தியக் கரைகளைத் தழுவியே வந்தனர். கடற்கரையோரமாகச் செலுத்தப்பட்ட இந்நாவாய்கள் பேருவலை, காலி, வெலிகாமம், ஹம்பாந்தோட்டை, திருகோணமலைத் துறைமுகங்களைத் தழுவின. அவர்கள் தங்கள் நாட்டுப் பொருட்களைக் கொண்டுவந்து இலங்கையின் விளைபொருட்களை எடுத்துச் சென்றனர். பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றி இஸ்லாத்தை மக்களுக்கு எடுத்தோதியதன் பின் அவர்கள் இலங்கையில் குடியேறியிருந்த அறபிகளுக்கு இஸ்லாத்தை எடுத்து வந்தனர். பக்தாதில் இஸ்லாம் பரவியதும் பக்தாது கலீபா அவர்கள் இலங்கைக்கு மத போதகர்களை அனுப்பி வைத்தார். அவர்களில் ஒருவர் அபூ பகாயா ஆவார். அவர் கொழும்பில் ஒரு பள்ளிவாசலை எழுப்பினார். அவரின் சீருடல் அப்பள்ளிவாசலின் அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது. அவரின் அடக்கஸ்தலத்தின் மீது நட்டப்பட்டிருந்த கல்லறை நடுகல், இலங்கையில் டச்சுக்காரர் ஆட்சியின்போது கொழும்பு டச்சு திஸாவையினால் அகற்றி எடுத்துச் செல்லப்படும் வரை ஏறக்குறைய எண்ணூறு வருடங்களாக அங்கேயே இருந்தது.

பேருவலையானது அறபு மக்கள் நடமாட்டத்தின் ஒரு நடுநாயகமாக விளங்கியது. அவர்கள் பள்ளிவாசல்களையும் தங்களுக்கென சொந்த மையவாடிகளையும் கொண்டிருந்தனர். திரு. பீ. இராமனுதனது "எத்னலொஜி ஒப்

சிலோன் மோர்ஸ்'' (இலங்கைச் சோனகர் இவ்வரலாறு) எனும் நூலைத் திறனாய்வு செய்த ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்கள் அத்திறனாய்வில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:



''இத்தீவில் முகம்மதியக் குடியேற்றத்தைக் குறிப்பிட்டுக் காட்டும் அடுத்த மிகப் பழைமையான பதிவுச் சான்று எதுவெனில், இப்போது பேருவலை முகம்மதிய மையவாடியிலுள்ள ஹிஜ்ரி 331 எனக் கல்லறை நடுகல்லொன்றில் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டாகும் என நினைக்கிறேன். 1906 ஒக்ரோபர் 15 ஆந் தேதி 'டைம்ஸ் ஒப் சிலோன்' (காலைப் பதிப்பு) இல் வெளியிடப்பட்டபடி அதனைக் கொழும்பைச் சேர்ந்த ஜனாப். எம். ஏ. சீ. முகம்மது கண்டுபிடித்தார்.''

கி. பி. 1401 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட சிங்கள தூத காவியமான ''கிரா சந்தேசய'' எனும் நூல் பேருவலையைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது: (இந் நூலாசிரியர் தூது செல்லும் கிளிக்கு, அது செல்ல வேண்டிய திசையை ஆற்றுப்படுத்தி, செல்லும் வழியில் பேருவலைக்குள் பிரவேசிக்குமாறு அறிவுரை பகர்கிறார்)

"பலவகைக் கொடிகள் பல அலங்கரிக்கும் இல்லங்களும் எழில் நகைகள் நிரம்பி வழியும் கடைகளும் நிறைந்திருக்கும் பேருவலையினுள் கடல் மார்க்கமாக நீ மனநிறைவுடன் நுழைவாயாக. ஆங்கு தங்கக் காதணிகளை அணிந்த சோனக மகளிர் வாழ்கின்றனர்."

கொழும்பு முகத்துவாரத்தில் வதிந்த முஸ்லிம்களுக்கு கதீப் ஒருவரின் அவசியம் ஏற்பட்டது. அவர்கள் கி. பி. 1410 இல் பேருவலைக்குத் தூதுக்குழுவொன்றை அனுப்பி அங்குள்ள காழியிடம் தங்கள் தேவையை எடுத்துரைத்தனர். ஆகவே, அறபுத் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு முகத்துவாரத்துக்கு பல்லக்கில் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் பள்ளிவாசல் கதீபாகக் கடமையாற்றினார், அவரின் வழித்தோன்றல்களும் அங்கு அதே வேலையை மேற்கொண்டனர். அவர்களில் இறுதியானவர் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான வைத்திய கலாநிதி எம். ஸீ. எம். கலீல் அவர்களின் தந்தையான கதீப் காஸிம் லெப்பை மரிக்கார் ஆவார்.

கரையோர மக்களின் உளப்போக்கு கொழும்பை நோக்கியே இருந்தது. எனவே, அவர்கள் கொழும்பை நோக்கிக் குடிபெயர்ந்தனர். பேருவலையிலுள்ள மரதானை (கொரக்கதீவு)ப் பள்ளிவாசல் வட்டாரத்தில் "சப்போடயார்" குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் குடும்பம் பாணந்துறைக்குக் குடிபெயர்ந்தது. அந்தக் குடும்பத்தில் ஒருவர் சோனகர் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்த நியமன விவரம் வருமாறு:

"எனவே கப்பல் உடையார் சேகு இப்றாஹீம் லெப்பை மரிக்காரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவைப் பரிசீலனை செய்ததன் பின், அவரை மேற்சொல்லப்பட்ட சல்பிற்றி, ரைகம் கோறளைகளையும் பாணந்

துறை மாவட்டத்தையும் சேர்ந்த சோனகரின் தலைவராக நியமிக்க யாம் தீர்மானித்து முடிவு செய்ததன் பேரில், அவர் இந்த ஆவணத்தின் மூலம் அப்பதவிக்கு நியமிக்கப்படுகிறார். பண்டைய காலத்திலிருந்து அப்பதவிக்கு இருந்து வந்த சலுகைகளும் மதிப்பும் அவருக்குமுண்டு. ஆனால், அதற்காக கப்பல் உடையார் சேகு இப்ராஹிம் லெப்பையான அவர் இங்கு சேவைக்காக சல்பிற்றி கோறளையிலிருந்து மூன்று தொழிலாளர்களையும் அத்துளுகம கிராமத்திலிருந்து இரு தொழிலாளர்களையும் பாணந்துறையிலிருந்து பதினெட்டுத் தொழிலாளர்களையும் அல்லது எல்லாமாக இருபத்திமூன்று தொழிலாளர்களை அனுப்பி வைக்கக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.''

கொழும்பு மாளிகையில் 1765 ஜூலை 22 ஆம் நாள் கொடுக்கப்பட்டது.''

இந்தக் கப்போடயார் குடும்பத்தில் சிலர் கொழும்பில் குடியேறினர். சின்னலெப்பை மரிக்கார் ஸாகிப் துரை எனும் ஒருவர் உம்மு ஹானி உம்மா என்பாரை 1851 ஒக்ரோபர் 18 ஆம் தேதி (ஹிஜ்ரி 1267, துல்ஹஜ் 22) கொழும்பு புதிய சோனக்தெரு 47 ஆம் இலக்க இல்லத்தில் மணமுடித்தார். அவர்களுக்கு 1854 ஒகஸ்ட் 23 ஆம் தேதி (ஹிஜ்ரி 1270 துல்கஃதா 28) ஒரு மகவு பிறந்தது. அதற்கு இஸ்மாயில் எனப் பெயரிட்டனர். இஸ்மாயில், பகல் வேளையில் அறபி-குர்ஆன் திண்ணைப் பள்ளிக்கூடத்துக்குச் சென்றதோடு, இரவு வேளையில் பிறிதொரு திண்ணையில் ''வாத்தியார்'' (உபாத்தியாயர்) ஒருவரின் கீழ் தமிழ் கற்றார். அறபு மொழி இளம் இஸ்மாயிலைக் கவர்ந்தது. எனவே, அவர் உயர்தர அறபு மொழியை மத்ரஸாவில் கற்றார். அதிசீக்கிரமே அவர், அறபு மொழி செய்கான உஸ்தாதுல் காமில் வல் ஆரிப் ஹழ்றத் அப்துல்லாஹ் இப்னு உமர் பாதிபுல் யமனி ஹழ்றமிய்யா சிபாமிய்யா அவர்களின் கவனத்துக்குள்ளானார். இஸ்மாயில் அவர்கள் எகிப்திய நூல்களையும் பத்திரிகைகளையும்



008920

படித்து அறபு இலக்கியங்களை எழுதினார். அவர் எழுதிய செய்குமார் வம்சாவளிச் செய்யுள்கள்-ஸில்ஸிலா-செய்கு அவர்களுக்குப் பெருமகிழ்வூட்டியது. 1883 இல் எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட அறபி பாஷா முதலியோர் வந்திருந்த காலம் அது. இஸ்மாயில் அவர்களின் அறபுமொழி அறிவு, தங்கள் மொழி அறிவுக்குச் சமமானதெனு அவர்கள் கண்டனர். இஸ்மாயில் அவர்களும் அவர்களோடு நீங்காத தொடர்பு வைத்திருந்தார்.

இஸ்மாயில் அவர்கள் கொழும்பு பிரதான வீதி 7ஆம் இலக்க இடத்தில் மாணிக்கக்கல், நகை, விந்தைப் பொருட்கள் ஆகியவை அடங்கிய வியாபாரமொன்றைத் தொடங்கினார். வியாபாரம் சிறப்பாக நடந்தது. போதுமான தொகை பணம் சேர்ந்தவுடன், முஸ்லிம் நாடுகளுக்குச் செல்லவும் ஹஜ் கடமையை நிறைவேற்றவும் அவர் நாடினார். இப்பிரயாணத்தில் தம்முடன் நண்பர்கள் சிலரையும் சேர்த்துக்கொள்ள அவரால் முடிந்தது. ஐ. எல். சின்னலெப்பை மரிக்கார், எம். எல். எம். ஸெய்னுதீன், ஏ. எல். எம். சம்ஸி லெப்பை மரிக்கார், அவரின் அறபு மொழி மாணவரான எஸ். எல். மஹ்மூது ஆகியோரும் சமையற்காரர் ராவுத்தர் ஹாஜியும் அவருடன் 1884 மார்ச் 27ஆம் தேதி எஸ். எஸ். மல்வா எனும் கப்பலில் பிரயாணமாயினர். பம்பாய் சென்றடைந்ததிலிருந்து அவர் பின்வருமாறு எழுதுகிறார்: "நாம் இங்கு அவுஸ்திரேலியக் கம்பனியொன்றின் கப்பலுக்கு மாறினோம். மே 21 ஆம் தேதி நாம் சுயெஸ்ஸை அடைந்தோம். அங்கு நாம் காலியைச் சேர்ந்த இலங்கை வாசியான ஸஈது ஹாஜியின் சுல்தான் பாபாவைச் சந்தித்தோம். நாம் கெய்ரோவுக்குச் சென்று அறபி பாஷாவின் இல்லத்துக்குச் சென்றோம். அங்கு அவரின் உறவினர்களுக்கு எல்லாக் கடிதங்களையும் ஒப்படைத்தோம். எகிப்திலுள்ள எல்லா முக்கிய இடங்களும் எங்களுக்குச் சுற்றிக் காண்பிக்கப்பட்டன. அறபி பாஷாவுக்கான எல்லா வேலைகளும் முடிந்த பின் நாம் துருக்கிக்குப் பயணமானோம். அந்த ஸ்தம்பூலுக்குச்

சென்று மகிழ்ச்சிகரமான எல்லா விடயங்களிலும் கலந்து கொண்டோம். பயாஸித் ஸ்டுடியோவில் கூட்டமாகவும் தனியாகவும் புகைப்படம் எடுத்துக்கொண்ட நாம் பின்னர் ஹஜ்ஜுக்காக மக்காவை நோக்கிப் புறப்பட்டோம். மதீனாவிலுள்ள எங்கள் திருநபி (ஸல்) அவர்களின் புனித அடக்கஸ்தலத்துக்குச் சென்று மரியாதை செலுத்திவிட்டு நாம் கொழும்புக்குக் கப்பலேறினோம்.''

விவரம் நீண்டதாயினும் இவ்வாறு தான் அவர்களின் பயணம் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இஸ்மாயில் அவர்கள் இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆலிம் என அறியப்பட்டார். அவர் தமது பெயரை ஹாஜி இஸ்மாயில் எபெண்டி என மாற்ற முடிவு செய்தார். சுல்தானினதும் கதீவேயினதும் பெரிய அளவான புகைப்படங்களை அவர் கொண்டு வந்தார். இக்கோஷ்டியினர் தங்கள் பிரயாணத்தின் போது சப்பாத்து அணிந்தனர். எனினும், கொழும்பை வந்தடைந்ததும் சப்பாத்து அணிவதைக் கைவிட்டனர். ஆனால், ஹாஜி இஸ்மாயில் அவர்களோ சப்பாத்து அணிவதை விட்டுவிடவில்லை. அவர் தம் வருங்கால மனைவிக்கும் சப்பாத்து எடுத்து வந்தார். அவர் சப்பாத்து அணிவது எத்தனையோ மக்களின் கோபத்தைத் தூண்டிவிட்டது. வைபவங்களுக்கு அழைக்கப்பட்ட இல்லங்களுக்குச் சென்று அங்கு வாசற்படியில் அவர் சப்பாத்துக்களைக் கழற்றி வைத்த போதெல்லாம் அவர்கள் அவற்றுள் படிக்கத்திலுள்ள எச்சிலைக் கொட்டிவிட்டனர். இல்லங்களில் வைக்க விலக்கப்பட்ட உருவச் சிலைகளோடு புகைப்படங்களையும் அவர்கள் ஒப்பிட்ட காரணத்தால் ஹாஜி இஸ்மாயில் அவர்களால் எடுத்துவரப்பட்ட சுல்தானினதும் கதீவேயினதும் இரு புகைப்படங்களும் அவருக்கெதிராகக் "குப்ர்" பத்வாவைக் கொடுக்கக் காரணமாயிருந்தன.

புகழ்பெறு "கப்போட்டயார்" குடும்பத்தைச் சேர்ந்த அகமது அலி மரிக்காரின் புதல்வியை அவர் 1886 ஜூலை 27 இல் கொழும்பு புதிய சோனகத்தெரு 39 ஆம் இலக்க

இல்லத்தில் மணமுடித்தார். அவரது திருமண அழைப் பிதழ் வருமாறு:

"எஸ். டீ. இஸ்மாயில் ஹாஜி

..................................................

அவர்களை அவரது திருமண வைபவத்தின் நிமித் தம் இம்மாதம் 25 ஆம் தேதி பி. ப. 7-00 மணிக்கு நடைபெறும் இராப் போசனத்துக்கு அன்புடன் அழைக்கிறார்."

இத்திருமண வைபவத்துக்கு எகிப்திலிருந்து இலங் கைக்கு நாடுகடத்தப்பட்டோரும் சமூகமளித்திருந்தனர்.

முஸ்லிம் நாடுகளில் வியாபாரத் தொடர்பு கொண்ட வர்களோடு அவர் பரந்த அளவில் வியாபாரம் நடத்தி னார். சப்பாத்து அணிவதையும் இல்லங்களில் புகைப்படங் கள் மாட்டுவதையும் எதிர்க்கும் மக்களிடையே வதிவது அவருக்கு சகிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. அவர்கள் அவரை "சப்பாத்து ஆலிம்" எனப் புனைபெயரிட்டழைத் தனர். எனவே, அவர் சோனக வாடியைவிட்டு நீங்கி, ஏறக்குறைய ஆறுமைல் தொலைவிலுள்ள வெள்ளவத்தை யில் குடியேறி வாழ்ந்தார்.

அவர் 1896 ஜனவரி 11ஆம் தேதி (ஹிஜ்ரி 1313 ரஜப் 26) வெள்ளவத்தைப் புகையிரத நிலையத்தில் ஏற்பட்ட புகை யிரத விபத்தில் உயிரிழந்தார். மரதானைப் பள்ளிவாசல் பரி பாலனக் குழுவிலும் கொழும்பு முகம்மதிய கல்விக் கழக (ஜம்இய்யத்துல் இஃதிக்கானுல் உலூம்)த்திலும் அவர் ஒரு முக்கிய உறுப்பினராகத் திகழ்ந்தார். 1896 டிசம்பர் 27ஆம் தேதி நடந்த கல்விக் கழக கூட்டத்தில் இஸ்மாயில் எபெண்டி அவர்கள் உட்பட மூன்று உறுப்பினர்கள்மீது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மா னம் வருமாறு:

"எமது கழகத்தின் மூன்று உறுப்பினர்களது மர ணத்தை யாம் துக்கத்துடன் குறிப்பிடுகிறோம். அவர் களாவோர்:

1. சேகு லெப்பை அகமது லெப்பை நொத்தாரிசு.
2. ஸாஹிப் துரை இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆலிம் ஹாஜியார் எபெண்டி.
3. சேகா லெப்பை காஸி லெப்பை மரிக்கார்; நம்பிக் கைப் பொறுப்பாளர்.

# செய்கு இஸ்மாயில் லெப்பை அப்துல் லத்தீபு அல்லது லெவ்வை சின்ன லெவ்வை

புதிய சோனகத் தெரு பெரிய பள்ளிவாசல் கதீப் ஹுஸைன் லெப்பை மஹல்லம் செய்கு இஸ்மாயில் லெப்பை என்பார் 1832 மார்ச் 26 இலிருந்து 1844 ஜனவரி 18 வரை சோனகரின் முன்னூற்றுக்கு மேற்பட்ட விவாகங்களைப் பதிந்துள்ளார். அவரது "கடுத்தம்" புத்தகத்தில், மணமக்கள், வலீ, சாட்சிகள் ஆகியோரின் பெயர்கள் மாத்திரமன்றி அவர்களின் முகவரிகளும் பதியப்பட்டுள்ளன.

அவரின் மகனான லெவ்வை சின்ன லெவ்வை அல்லது அப்துல் லத்தீபு என்பாரும் பெரிய பள்ளிவாசலின் கதீபாக நியமிக்கப்பட்டார். அவரது நியமனத்தை 1845, பெப்ரவரி 13 ஆம்நாள் இலங்கையின் தேசாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸேர் கொலின் கம்பெல் என்பாரைக் கொண்டு அவர் உறுதிப்படுத்திக் கொண்டார்.

பெரிய பள்ளிவாசலில் அவரின் தகப்பனாரது கல்லறைக்குப் பக்கத்தில் அவரது உடலை அடக்கம் செய்து கொள்ளத் தேசாதிபதியால் பின்வரும் மேலாண்மையுரிமை வழங்கப்பட்டது:

"இல. 1112

குடியேற்றநாட்டுச் செயலாளர் அலுவலகம்,
கொழும்பு, 16, மே 1906.

ஐய,

கடந்த ஏப்ரில் 6 ஆம் தேதிய உங்கள் மனுவைப் பெற்றுக் கொண்டதை அறிவிக்குமாறும் அதில் விடுக்கப்பட்

டிருந்த கோரிக்கையை வழங்குவதில் மேன்மை தங்கிய தேசாதிபதி மகிழ்ச்சியடைகிறார் என்பதைப் பகரு மாறும் யான் தேசாதிபதியால் பணிக்கப் படுகிறேன்.

2. அதேசமயம், இத்தால் வழங்கப்படும் அனுமதி யைப் பயன்படுத்தும் அவசியம் ஏற்படுவதற்கு இன் னும் பல்லாண்டுகள் கழியும் எனத் தாம் நம்புவதா கத் தெரிவக்க வேண்டுமென்றும் மேன்மை தங்கிய தேசாதிபதி விரும்புகிறார்.

இங்ஙனம்,

உங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியன்,

.....................................

குடியேற்றநாட்டுச் செயலாளருக்காக.

சேகு இஸ்மாயில் லெப்பை
அப்துல் லத்தீபு,
முகம்மதிய உயர் மதகுரு.
83, புதிய சோனகத் தெரு,
கொழும்பு. ''

அப்துல் லத்தீபு அவர்களும் அவருடைய பரம்பரை யும் கதீப் என்ற முறையில் ஆற்றிய சேவை சம்பந்தமாக பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற நூற்றாண்டு விழா பற்றி 1945 மார்ச் 10 ஆம் தேதிய "சிலோன் டெயிலி நியூஸ்" இதழில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது:

"பதவி அங்கீகாரம் வழங்கப்பட்ட முதலாவது மத குருவான காலஞ்சென்ற கதீப் செய்கு இஸ்மாயில் லெப்பை அப்துல் லத்தீபு என்பாரின் குடும்பத்தார் பள்ளிவாசல் ஜமாஅத்தாருக்கு ஆற்றிய நூறாண்டுசேவை யை நினைவுகூருமுகமாக ஜமாஅத்தாரின் ஒரு விசேஷ

கூட்டம். ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடியது. அவருக்குப் பின் அவர் மகன் காலஞ்சென்ற கதீப் அப்துல் லத்தீப் அப்துல் கபூரும் அவருக்குப் பின் அவர் மகன் காலஞ்சென்ற கதீப் அப்துல் கபூர் அப்துல் ஜவாதும் அப் பணியைத் தொடர்ந்தனர். அப்பணி இப்போது பின்னவரின் மகனை கதீப் அப்துல் ஜவாது முகம்மது வாரிது என்பாரால் தொடரப்படுகிறது, பள்ளிவாசலின் ஜமா அத்துக்கு அவர் ஆற்றிய தடையற்றதும் ஒப்பற்றது மான சேவையைப் பாராட்டுமுகமாக அனேக பேச் சாளர்கள் ஆர்வ உணர்ச்சி மிகுந்த புகழுரைகளை வழங்கி னர், 1845 பெப்ரவரி 13 ஆம் தேதி இலங்கையின் தேசாதிபதி ஸேர் கொலின் கம்பெல் அவர்களால் அவரது நியமனம் விசேஷமாக உறுதிசெய்யப்பட்டது பற்றி இங்கு குறிப்பிடப்பட்டது.


இக் குடும்பத்தார் தங்கள் பரம்பரையை ஞானி செய்கு மஃரூபுல் கர்க்கீ அவர்களின் வழிவந்த தலைமைச் சோனக மனிதரான மஹ்மூது நெய்னு மரிக்கார் என்பா ருடன் தொடர்பு படுத்துகின்றனர்.

# எம். சி. சித்திலெப்பை

இலங்கைக் கரையோரங்களிற் குடியேறிய அறபிகள் தீவின் உட்பிரதேசங்களிலும் தமது வாணிபத்தைக் கொண்டு நடாத்தினர். அவர்களின் வியாபாரச் சரக்குக்கள் நாட்டு மக்களால் விரும்பி வாங்கப்பட்டன. சித்திலெப்பையவர்களின் மூதாதையர் அறபிகளாயிருந்தனர். அவர்கள் கண்டி மாவட்டத்துள் ஊடுருவியிருந்தனர். சித்திலெப்பையவர்களின் தந்தையான எம். எல். சித்திலெப்பை அவர்கள் இலங்கை வாசிகளில் முதலாவது புரக்டர்களில் ஒருவராவார். அத்துடன் அவர் 1833 இல் தலைமைச் சோனக மனிதராகவும் இருந்தார்.

சித்திலெப்பையவர்களின் மூத்த சகோதரர் அறபு மொழி கற்ற ஓர் ஆலிமாவார். அவரின் கீழேயே சித்திலெப்பையவர்கள் திருக் குர்ஆனை ஓதவும் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்கவும் செய்தார். வாலிபத்தையடைந்த சித்திலெப்பையில் இளமையின் புரட்சி எழுச்சியுறுவதை அவதானித்த அவரின் மூத்த சகோதரர் அவரைத் தம் மரணப்படுக்கையருகில் அழைத்து பின்வருமாறு அறிவுரை பகர்ந்தார்:

''என் அருமைச் சகோதரனே! நான் உன்னிலிருந்து பிரியும் நேரம் வந்துவிட்டது. நீயோ எல்லா விடயங்களிலும் ''காபிர்''களுடனேயே கருமமாற்றுகிறாய். உனது 'ஈமா'னைக் காப்பாற்ற திருநபி (ஸல்) அவர்கள் தலையிடுவார்களாக என நான் பிரார்த்திக்கின்றேன். இதுதான், எனது மறுமை வாழ்விலும் எனது நீங்காத பிரார்த்தனையாக இருக்கும்.'' இவ்வாறு கூறிக்கொண்டே அவர் இறையடி சேர்ந்தார்.



சித்திலெப்பையவர்களுக்கு அவர்தம் நண்பர்கள் சிறிது சிறிதாய்ப் புகட்டிய மாயவித்தை சம்பந்தமான ஆராய்ச்சியையோ, ஆவிகள் பற்றிய ஆராய்ச்சியையோ கைவிட முடியவில்லை. இந்த ஆராய்ச்சிகள் அவரை எங்கும் கொண்டு வந்து விடவில்லை. எனவே அவர் மத சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். அத்துடன் ஆங்கில மொழியிற் புலமை பெற்று 1862 ஆம் ஆண்டில் மாவட்ட நீதிமன்றப் புரக்டராகத் தகைமை பெற்றார். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அவர் உயர் நீதிமன்றப் புரக்டராக ஆனதோடு பகிரங்க நொத்தாரிசாகவும் தொழில் புரிந்தார்.

அறபு மொழியைக் கசடறக் கற்ற அவர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்), இப்னு அல் அறபி (ரஹ்), முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழி) ஆகிய பெரும் ஞானிகளினதும் ஏனைய முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பெரியார்களினதும் நூல்களைப் பெரிதும் வாசித்தார். அவர் உதுமா லெப்பை மரிக்கார் சேகாதி மரிக்கார் அவர்களின் பேரரான காஸி லெப்பை மரிக்கார் முகம்மது யூசுபு அவர்களின் மைத்துனியை மணமுடித்தார்.

சித்திலெப்பையவர்கள் அக்கால ஆலிம்களை விஞ்சியவராக விளங்கினார். முஸ்லிம்கள் உள்ளூர், இந்திய ஆலிம்களால் தப்பாக வழிநடாத்திச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என அவர் கருத்துக் கொண்டார். அவர்கள்

இஸ்லாமிய போதனைகளுக்குக் கொடுத்த விளக்கங்களை சித்திலெப்பையவர்கள் கண்டித்தார். எனவே, உலமாக்கள் ''குப்ர் பத்வாவை வழங்கினர்.

வாப்பிச்சி மரிக்கார் அவர்களுடன் அவர் கொழும்பில் ஆரம்பித்த கல்வி இயக்கத்துக்கு அவரது சேவை தொடர்ந்து தேவைப்பட்டதால் கொழும்பில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது. எனவே, அவர் கொழும்பில் தங்கி, இடையிடையே கண்டிக்குச் சென்று வந்தார். அவரது ''அஸ்ராருல் ஆலம்'' நூலில் அவர் வாப்பிச்சி மரிக்கார் அவர்களுக்குப் பெரியதொரு புகழுரை வழங்குகிறார். முஸ்லிம்களுக்கு அறிவு புகட்டுமுகமாக அவர் ''முஸ்லிம்'' எனும் ஒரு வார சஞ்சிகையை வெளியிட்டார். அஃது ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்தது. ''ஞான தீபம்'' எனும் ஒரு மாசிகையையும் அவர் வெளியிட்டார். இந்த இரு வெளியீடுகளிலும் அவர் இஸ்லாத்தின் போதனைகளை விளக்கினார். இஸ்லாத்தை அறிந்து கொள்வதற்கு முஸ்லிம்கள் அறபு மொழி கற்கவேண்டுமென வேண்டிக் கொண்ட அவர், ''ஹிதாயத்துல் காஸிமிய்யா'', ''துஃபத்துன்னஹ்வு'', ''சுறாத்துஸ் ஸலாஹ்'', அறபு மொழிப் பயிற்சி நூல், பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றை எழுதி வெளியிட்டார். அவரின் ஏனைய நூல்களாவன, தமிழ் ஆரம்ப நூல், ஹசன் பேயின் புதுமைக் கதை, துருக்கிய-கிரேக்க யுத்த வரலாறு, இலங்கைச் சோனகர் சரித்திரம் என்பனவாகும்.

முஸ்லிம்களுக்கு அறிவு புகட்டும் அவரது பரந்த திட்டம், இறுதியில் ஸாஹிராக் கல்லூரியாகப் பரிணமித்தது. வாப்பிச்சி மரிக்கார் அவர்களின் வரையா வள்ளற்றன்மையும் ஏனைய சோனக தனவந்தர்களின் பேருதவியும் அதன் ஸ்தாபகத்துக்குப் பெரிதும் துணை புரிந்தன. மத்திய மாகாணத்

தில் பல பகுதிகளில் அனேக தமிழ், அறபி பாடசாலைகளை அவர் நிறுவினார். அவைகளிற் சிலவற்றின் செலவை அவரே ஏற்று நிர்வகித்து வந்தார். கண்டியில் அவர் ஆரம்பித்த மகளிர் பாடசாலையில் அவரின் சகோதரி தலைமை ஆசிரியையாக விளங்கினார்.

இலங்கை முஸ்லிம்கள் அப்போதிருந்த பிற்போக்கான நிலையிலிருந்து தங்களை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு ஒருமித்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்களைத் தூண்டுவதில் சித்திலெப்பையவர்கள் தாம் புதினப்பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் மூலமும், நூல்கள் மூலமும் பொதுக் கூட்டங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மூலமும் பெருமுயற்சி செய்தார். அவரது முயற்சி வீண்போகவில்லை. அவரின் நண்பர்களும் ஆர்வலர்களும் அனேகராயினும் அவரை எதிர்ப்போர்களும் இல்லாமல் இருக்கவில்லை. கல்வி சம்பந்தமாகவும் தத்துவ ஞானம் சம்பந்தமாகவும் அவர் பதிப்பித்த நூல்கள் தமிழ் மொழியிலேயே இருந்தன. அவற்றில் இறுதியான நூல் ''அஸ்ராருல் ஆலம்'' என்பதாகும். இஸ்லாமிய மெஞ்ஞான நூலான இது அவரது இறப்புக்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் அச்சிலிருந்து வெளியேறியது. இந் நூலைச் சில ஆண்டுகளுக்குமுன் பிரபல இந்திய முஸ்லிம் எழுத்தாளரான ஆர். பி. எம். கனி அவர்கள் முற்றும் புதிய நடையில் தயாரித்து அதற்கு ''மெய்ஞ்ஞானப் பேரமுதம்'' எனப் பெயரிட்டு வெளியிட்டார்.

மனோதத்துவம், சூனியம் முதல் ஆன்ம சக்தி வரையுள்ள பல்வேறு சாதனங்களின் தராதரங்களையும் இஸ்லாமிய யோக மார்க்கத்துக்கும் அஷ்டாங்க யோகம் போன்ற சாதனங்களுக்கும் இடையிலுள்ள தாரதம்மியங்களையும் வான நூலின் அகமியங்களையும் இந்த நூலில் சித்திலெப்பை அவர்கள் விவரிக்கிறார். சைகுல் அக்பர் முஹ்யித்தீனுல் அறபி (ரஹ்) அவர்களின் ''புஸூஸுல் ஹிக்கம்'', ''புத்தூஹாத்துல் மக்கிய்யா'', இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் ''இஹ்யா உலூ முத்தீன்'', அப்துல் கரீம் ஜீலி (ரஹ்) அவர்களின் ''இன்ஸானுல் காமில்'', அப்துல் வஹ்ஹாப் ஷஃ-

ரானி (ரஹ்) அவர்களின் "யவாக்கிதுல் ஜவாஹிர்" போன்ற நூல்களிலுள்ள ஞானமுத்துக்களை அவர் இதில் சேர்த்துள்ளார்.

"ஆலம் கியால்" எனும் அத்தியாயத்தில் நாத்திகர்களினதும் அறியொணுமைக் கொள்கையினரதும் தத்துவங்களை அவர் கண்டிக்கிறூர். பிரபஞ்சத்தை இனம் பிரிக்கும் சக்தி, சடம் ஆகியவற்றில் முன்னையது தன்னிருப்பானதும் நிரந்தர யதார்த்தமானதுமாக இருப்பதோடு பின்னையது அதன் வெளிக்கோலம் மாத்திரமேயாகும் என்றும், இந்த யாதர்த்தமானது முஸ்லிம்கள் கருதும் இறை உள்ளியல்பு போன்றதே என்றும் அவர் நிரூபிக்க முனைந்தார். இந்த நூல் வெளியானவுடனேயே அதை ஆக்கியோனின் எதிர்ப்பாளர்கள் "சக்தி" பற்றி அவர் கூறிய கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு தங்கள் முழுப்பலத்தையும் திரட்டி வாத விவாதங்களிலும் ஈடுபட்டனர். தங்கள் எதிர்வாதி மரணத்தின் வாசலில் நிற்கிறூர் என்பதை அப்போது அவர்கள் அறியவில்லை. அவர்களில் உள்ளூர் வைத்தியரான முகம்மது லெப்பை மரிக்கார் என்பார் முன்னணியில் நின்றூர். அவர் அப்போது நோயில் வாடிக்கொண்டிருந்த இந் நூலின் ஆசிரியருக்கு—சித்தி லெப்பைக்கு—ஒரு கடிதம் எழுதினூர். சித்திலெப்பையவர்கள் தம் சுகயீனத்தையும் பொருட்படுத்தாது அக்கடிதத்துக்குப் பதில் வரைந்தார். எனினும், அப் பதிலால் திருப்தியடையாத முகம்மது லெப்பை மரிக்கார் அவர்கள் ஓர் எதிர்ப் பதிலை அனுப்பினூர். நோய் முற்றிய நிலையில் தேக நிலை மோசமாகிக் கொண்டிருந்த சித்திலெப்பையவர்களால் அக் கடிதத்தைக் கவனிக்க முடியவில்லை. அதற்குச் சில நாட்களுக்குப் பின்னர், அதாவது, 1898 பெப்ரவரி 5 ஆம் நாள் அவர் இறையடி சேர்ந்தார். அவரது மறைவு தீவெங்குமுள்ள முஸ்லிம்களைப் பெருந் துயரில் ஆழ்த்தியது. அவரது மறைவு அவரது நூலுக்கெதிரான குற்றச் சாட்டுக்களைக் களைந்தெறியும் என அப்போது கருதப்பட்டது. ஆனூல், அவரின் எதிர்ப்பாளர்கள் தங்கள் காரியத்தைத் தொடர்ந்தனர். முகம்மது லெப்பை மரிக்கார் அவர்கள் "தத்துவகாரக் கண்டனம்"

எனும் ஒரு நூலை வெளியிட்டார். அதிலே அவர் காலஞ் சென்ற நூலாசிரியரைச் சாடினார். அதன்பின், "அஸ்ராருல் ஆலம்", சமயக் கோட்பாட்டுக்கெதிரான விளக்கங்களைக் கொண்டிருப்பதால் அந்நூலை முஸ்லிம்கள் வாசிக்கக் கூடா தென உலமாக்களும் "பத்வா" வழங்கினர். "தஸவ்வுப்" (மெஞ்ஞான) விளக்கங்களிலேயேஇந்தக் கருத்து வேறு பாடு கள் ஏற்பட்டன.இவ்வித கருத்து வேறுபாடுகள் "தஸவ்வுப்" உலகில் எப்போதிருந்தோ நிலவி வரு வனவாகும்."நிலையற்ற உலகமானது "அஃறுழை" (பண்பை)மாத்திரமே கொண்டுள் ளது." மஃரூழ்" (யதார்த்தம்) ஆனதுஅதன் ஒரே சீரான, நிரந்தரப் பண்பில் "ஆலம்" எனும்வகையில் அடங்காது என சித்திலெப்பை அவர்கள் கருத்துக்கொண்டார்.

"அஸ்ராருல் ஆல"த்தில் சித்திலெப்பை அவர்கள் கூறுகிறார்:

> "இவையெல்லாவற்றையும் நான் நூல் வடிவில் தர வேண்டுமென நினைக்கிறேன். இந்த உலமாக்கள் எனக்கு எதிராக உள்ளனர். நான் எவருக்கும் பயப்படவில்லை. "இல்ம்" (அறிவு) உடைய மக்கள் எனது கைங்கரி யத்தை மதிப்பர். விலைமதிக்க முடியா மாணிக்கங்களை யெல்லாம் நான் சேகரித்து அவற்றை லாபமாகவும் கருத்துச் செறிவுடனும் தந்துள்ளேன். உலமாக்கள் எனது நூலை நன்னோக்கத்துடன் வாசிப்பார்களானால் அவர்கள் உண்மையைக் காண்பர். அவர்கள் எனது நூலை எதிர்ச்சார்பான மனநிலையுடன் நோக்குவார்களா னால் அது முற்றும் பிழையானதெனக் காண்பர். நான் அவர்களைப் பயப்படத் தேவையில்லை. கடந்த கால் நூற்றாண்டுகாலமாக எல்லா வகையினரான உலமாக் களும் பெருந்தொகையாகத் திரண்ட முஸ்லிம்களின் கூட்டமும் எனக்கெதிராக எழுந்த போதிலும் எனது கைங்கரியம் "ஸலாமத்" எனும் துறைமுகத்தில் வந் திறங்கியது.
>
> அறிவின் என் வித்துக்கள் நிலத்திற் பரவி, வளர்ந்து நல்ல பிரதிபலனைத் தருகின்றன. என்னை ஆதரிப்ப

வர்கள் என் நூல்களின் சிறப்பைக் காண்கின்றனர். என்னை எதிர்ப்பவர்கள் நான் இறந்து பல வருடங்களுக்குப் பின் என்மீது கண்ணீர் சிந்துவர். சித்தி லெப்பை நட்டிய வித்துக்கள் சுவைமிகு கனிகளைத் தருகின்றன என அவர்கள் பட்சாதாபப் படுவர். எனது கைங்கரியத்தின் பிரதிபலனை அவர்கள் காண்பர். நான் நட்டிய மரங்களுக்கு அவர்கள் கண்ணீர்கொண்டு நீர்ப் பாய்ச்சுவர். என் கருத்துக்கள் பரவும். நான் இறந்த பின் அவர்கள் என் நண்பர்களாகி விடுவர். என்னால் அவர்கள் நன்மையடைவர். என்னை எதிர்த்த அவர்கள் என்னை அன்புடன் நினைப்பவர். எனக்கு நன்றி கூறி எனக்காகப் பிரார்த்திப்பர். இப்போது நான் அவர்களுக்காகப் பிரார்த்திப்பதோடு அவர்களை மன்னிக்கவும் செய்கிறேன்."[1]

உலக முஸ்லிம்களிடையே பெரிதும் கருத்துவேறுபாடு நிலவிய விடயங்களிலும் கூட சித்திலெப்பை அவர்கள் தம் கருத்தைத் தெரிவிததுண்டு.

அவர் கருத்துத் தெரிவித்த மத தத்துவஞானம் சம்பந்தமான இன்னொரு விஷயம் ''ஹக்'', ''கல்க்'' பற்றியதாகும். பிரபஞ்சம் முழுவதும் மிகவிரிவான ஒரு கண்ணாடி போன்றதென்றும் அள்ளாஹ்வின் இயற்பண்புகள் (சிபாத்துக்கள்) அந்தக் கண்ணாடியில் பிரகாசிக்கின்றன என்றும் அவர் கூறினார். மரத்தின் நிழல் தண்ணீருக்குள் தெரிந்தாலும் தண்ணீருக்குள் ஒன்றுமில்லை என்பது போல, பிரபஞ்சமானது யதார்த்ததில் அப்படியே என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

சித்தி லெப்பை அவர்களின் ஞாபகார்த்தமாக இலங்கை அரசாங்கம் சமீபத்தில் ஒரு முத்திரை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

---

1. இப்பத்திகள் அஸ்ராருல் ஆலத்திலிருந்து நேரடியாக எடுக்கப்படவில்லை; அதில் சித்திலெப்பை அவர்கள் கூறிய கருத்துக்களின் பொழிப்பாகும்.

# மீரா லெப்பை பக்கீர் தம்பி

*இந்நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் பிரபல நகை, மாணிக்க வியாபாரியாக இருந்த பீ. ரீ. மீராலெப்பை மரிக்கார் என்பாரின் தந்தையான மீரா லெப்பை பக்கீர் தம்பி அவர்கள் நெப்போலியன் போனபாட் பேரரச ஆணைக் குழுத் தலைவரிடமிருந்து பின்வரும் "கௌரவக் குறிப்பு" (Honourable Mention) சான்றிதழைப் பெற்றார்:*

"Exposition universelle de 1855. Industrie Beaux Le Jury International Decerne La Mention Honorable a Mr. Lebbe Packier Tamby Colombo (Ile de CEILAN), auteur de'ime.

Collection de pierres precieus EXPOSIT DU ROYAUME UNI DE GRANDE BRETAGNE & D' IRLANDE Division de L'INDUSTRIE 1st Class No: PALAIS del' INDUSTRIE PARIS le 15th November 1855,

LE PRESIDENT DE LA COMMISSION IMPERIALE NAPOLEON BONAPARTE.

*"1855 இன் அகில உலகக் கண்காட்சி. கவின்கலைக் கைத்தொழிலில் ஒரு தொகையான பல்வின மாணிக்கக் கற்களைக் காட்சிக்கு வைத்தற்காக சர்வதேச ஜூரிகள், (இலங்கைத்தீவு) கொழும்பைச் சேர்ந்த மீராலெப்பை பக்கீர் தம்பி அவர்களுக்கு "கௌரவக் குறிப்பு" சான்றிதழை வழங்கியுள்ளது. இந்தக் கண்காட்சி, பெரிய பிரித்தானியாவினதும் அயர்லந்தினதும் ஐக்கிய ராச்சியத்தின் கைத்தொழிற் பிரிவு 1 ஆம் இலக்க கைத்தொழில் மாளிகைக்குச் சொந்தமானது.*


*பாரிஸ், 15 நவம்பர் 1855. நெப்போலியன் போனபாட் பேரரச ஆணைக்குழுத் தலைவர்."*

## முகம்மது காஸிம் அப்துர் ரஹ்மான்

அப்துர் ரஹ்மான் அவர்களின் பரம்பரை பெருமை வாய்ந்த ஒரு பரம்பரையாகும். அவரின் தாயார் பாத்திமா அவர்கள், வெலிகமையில் அடங்கியிருக்கும் புகழ்பெற்ற மறைஞானியான குத்துப் செய்கு இஸ்மாயில் யமனி அவர்களின் மகளாவார். அவரின் மனைவியான கதீஜா அவர்களும் மாத்தறையில் அடங்கியிருக்கும் மறைஞானியான குத்துப் செய்கு யஹ்யா அல் யமனி (ஹாஜியார் அப்பா) அவர்களின் தாய்வழி மாமனின் மகளாவார்.

அப்துர் ரஹ்மான் அவர்கள் ஒரு வர்த்தகராகவே தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். அவருக்குக் கொழும்புக் கோட்டையில் ஒரு புடவைக் கடையும் புறக்கோட்டையில் ஒரு பலசரக்குக் கடையும் இருந்தன. அவர் மளிகைச் சரக்குக்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் ஒருவராகவும் இருந்தார். அவரது நேர்மையான கொடுக்கல் வாங்கலானது பெருந்தொகையான வாடிக்கைக்காரர்களை அவர் பால் ஈர்த்தது. அவரது நேர்மையின் புகழ் அவரது கௌரவத்தை மென்மேலும் அதிகரித்தது. அவர் இறக்குமதி செய்த பொருட்களை ஏற்றிவர அவருக்குக் கப்பல்கள் இருந்தன. 'எஸ். எஸ். ரஹ்மானிய்யா' எனும் கப்பல் அவரின் பெயரால் அழைக்கப்பட்ட ஒன்றாகும். எவ்வளவுக்கெவ்வளவு உழைத்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அவர் வறியோர்க்கும் சிறந்த நோக்கங்களுக்கும் வாரி வழங்கினார்.

அவரின் நடவடிக்கைகள் புகழ் வாய்ந்தனவாகவும் போற்றப்பட்டனவாகவும் இருந்தன. உள்ளூர் சோனகரின்



நலன்களை ஊக்குவிக்குப் பொருட்டும் பேணும் பொருட்டும் அவர் 1876இல் கொழும்பு மாநகர சபையின் ஓர் ஆசனத்துக்கு நியமிக்கப்பட்டார். அங்கு அவர் பெற்ற அழியா இடமானது, மாநகர சபை உறுப்பினராக இருந்த அதே சமயம் அவரை உத்தியோகப் பற்றற்ற மாநகர நீதவானாகவும் நியமிக்கச் செய்தது. அக்கால இலங்கை வாழ் சோனகர், சட்டவாக்க சபையில் பிரதிநிதித்துவம் வேண்டி விடுத்த கோரிக்கைக்கிணங்க தேசாதிபதி கோர்டன் என்பவரால் அப்துர் ரஹ்மான் அவர்கள் முதல் முகம்மதிய உறுப்பினராக 1889 ஒக்ரோபர் 29 ஆம் தேதி நியமிக்கப்பட்டார். அவர் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியம் எவ்வளவுக்கு உணரப்பட்டதெனில் அவரது ஐந்து வருடகால எல்லை முடிவுற்றதும் தேசாதிபதி ஹவ்லொக் என்பாரால் அவர் மேலும் ஐந்து வருட காலத்துக்கு நியமிக்கப்பட்டார். எனினும் அவர் அவ்வளவு காலம் உயிர் வாழவில்லை.

அந்நாட்களில் நியமன உறுப்பினர்கள் பொதுவாக பிரித்தானியரின் கைப்பிள்ளைகளாகவே இருந்தனர். அவர்கள் தங்கள் ஆசனங்களில் ஏறக்குறைய மௌனிகளாகவே இருந்தனர். ஆனால், அப்துர் ரஹ்மான் அவர்களோ அதற்கு விதிவிலக்கானவராக இருந்தார். நாடு, அல்லது

[redacted] பிரேரணைகளிலும் விவா
[redacted] தெள்
[redacted]. அவரின் அக்கருத்துக்கள்
[redacted] பிரச்சினைகளில்
[redacted] இருந்தன. தமது சமூ
[redacted] அவர் சொரிந்த கருத்
[redacted] சட்டவாக்க சபை ஹன்
[redacted].

[redacted] சமூக, கல்வி சம்பந்தப்
[redacted] இருந்தனர். இத்துறையில்
[redacted] அப்துர் ரஹ்மான் அவர்
[redacted] பதிவு செய்வ
[redacted], 1888 இன் 2 ஆம்
[redacted] சட்டங்களுக்கு அவசிய
[redacted] அவர் ஆணித்
[redacted] அதுவரை கதீப்மாரின்
[redacted] முறையில் இருந்த
எழுத்திலான அத்தாட்சியாகும். ஆகவே, முஸ்லிம் விவா கங்களைச் சட்ட பூர்வமான முறையில் கட்டாயமாகப் பதியச் செய்தது அப்துர் ரஹ்மான் அவர்களின், கருத் துரையால் எழுந்த ஒரு திட்டமேயாகும். அதுமட்டு மன்று. அதற்கான குறிக்கப்பட்ட கட்டணத்தை அறவிட முடியாது போனால் அக்கட்டணம் கைவிடப்பட வேண்டு மெனவும் அவர் வற்புறுத்தினார். ஒரு சிறிய விஷயத்தை யும் அவர் விட்டு வைக்கவில்லை.

முஸ்லிம் பெண்கள் கல்வியானது இஸ்லாமிய முறைக்கு அப்பாற்பட்டதென அன்று பிழையாகக் கருதப்பட்டது. வயது வந்த பெண்களில் மிகவும் குறைந்த ஒரு தொகை யினர் ஏதோ ஒருவகையான கல்வியை அன்று "பிரத்தி யேக" பாடசாலைகள் என அழைக்கப்பட்ட பாடசாலை

களில் பெற்று வந்தனர். ஆனால், அங்கு பெற்ற கல்வியோ மிகவும் தரம் குன்றியதாக இருந்தது. சட்டவாக்க சபையில் பெண் கல்விப் பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, முஸ்லிம் பெண்களின் கல்விக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று அப்துர் ரஹ்மான் அவர்கள் வற்புறுத்தினார். முஸ்லிம் பெண்களின் தேவைகளைக் கவனிக்க பெண் வைத்தியர்களையும் பெண் கைகுத்துவோரையும் நியமிக்கச் செய்ததில் மூலகர்த்தாவாக விளங்கியவர் அவரே.

கொழும்பில் நிறுவப்பட்ட முதல் முஸ்லிம் பெண்கள் பாடசாலைக்கான கட்டடத்தின் அரைவாசிச் செலவை அவரது அயரா வற்புறுத்தலின் காரணமாக 1898 இல் குடியேற்ற நாட்டுச் செயலாளர் அரசாங்கக் கணக்கில் அங்கீகரித்தார்.

அப்துர் ரஹ்மான் அவர்கள் மக்கள் சேவையில் எவ்வளவு ஈடுபாடு உடையவராய் இருந்தாரெனின் தம் உடல் நிலை பற்றிக் கவனம் செலுத்த அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. நலிவுற்ற உடம்பினராயினும் பொலிவுற்ற ஆன்ம சக்தியோடு அவர் தமது முயற்சியைச் சுய தியாகத்தோடு தொடர்ந்தார். அவரது உளத்தில் பெண்கள் நலன் அதிகம் குடிகொண்டிருந்தது.

சட்டவாக்க சபையில் அவரது இரண்டாவது ஐந்து வருட கால எல்லையில் அரைவாசி முடிவதற்குள், அதாவது 1899 ஜூன் 12 ஆம் தேதி அவர் காலன் கைவசப்பட்டார்.

# அறபி பாஷா [1]

பிரபல அறபுமொழி எழுத்தாளர்களில் ஒருவரான மஃறிஸியின் கூற்றொன்றைச் சரித்திராசிரியர் ஜே. ஏ. வில் பெரேரா என்பார், புரக்டர் ஏ. ஸீ. எம். அப்துல் காதரின் "நிவ் ஸ்பியர்" எனும் வெளியீட்டின் பக்கங்களில் எடுத்தாள்கிறார். அது வருமாறு:

"682 முஹர்ரம் 14 (1283 ஏப்ரில் 14) இல் இந்தியாவின் ஒரு பகுதியான இலங்கை [2] ஆட்சியாளனிடமிருந்து தூதுவர் சிலர் எகிப்துக்கு வருகை தந்தனர். தூதுவர்களை அனுப்பிய இளவரசன் அபூ நிக்பாலிபாதஸ் [3] என அழைக்கப் பட்டான். அத் தூதுவர் 1¼ முழம் நீளமும் மூன்று விரல் அகலமுமுடைய ஒரு தங்கப் பேழையைத் தம்முடன் எடுத்து வந்தனர். அது எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பனையோலை போன்ற ஒரு பொருளைக் கொண்டிருந்தது. அதனைக் கெய்ரோவிலிருந்த எவரும் வாசிக்க முடியவில்லை. தூதுவர்களைக் கேட்டதன் பேரில் அந்தச் சுவடியானது மரபுமுறையான முகமனையும் நட்புறவையும் உள்ளடக்கியிருந்ததெனத் தெரிய வந்தது. சுல்தானுடன் நெருங்கிய இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு யமன் தேசத்து ஆட்சியாளருடன் தாம் நேசத் தொடர்பை முறித்துக் கொண்டுள்ளதாக அரசன் பிரகடனப்படுத்தியிருந்தான். தம்மிடம் யானை, மாணிக்கக்கற்கள் பெருமதிப்புள்ள பற்பல பொருட்கள் ஆகிய இன்னோரன்ன அளப்பரிய வளங்கள் இருப்ப

---

1. அறபிபாஷா அவர்கள் ஓர் இலங்கை முஸ்லிமல்லாவிடினும் அவர் இங்கிருந்தபோது இந் நாட்டு முஸ்லிம்களின் நலனுக்காக உழைத்து அவர்களது வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். எனவே எம்-மக்கள் மத்தியில் ஓர் இலங்கை முஸ்லிமாகவே அவர் கணிக்கப்படுகிறார்.

2. அன்று இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியென்றே சிலர் நினைத்தனர்.

3. புவனேகபாகு

தாகவும் சுல்தானுக்கு ஒரு வெகுமதி அனுப்பியுள்ள தாகவும் அவன் மேலும் அறிவித்திருந்தான். இக்கால கட்டத்தில் இலங்கை அரசு இருபத்தேழு அரண்களை யும் பெருமதிப்புள்ள செம்மணிக்கல் (ரூபி) உட்பட பலதரப்பட்ட மாணிக்கக்கற் சுரங்கங்களையும் கொண்டிருந்தது. கண்ணைக் கவர்வனவும் பேரொளி யிலும் விலைமதிப்பிலும் இணையற்றனவும் சுடர் வீசு வனவுமான எல்லாவித மாணிக்கக் கற்களாலும் அரச திறைசேரி நிரம்பி வழிந்தது.''

எவ்வாறாயினும் இலங்கையானது தொன்றுதொட்டே எகிப்திய சுல்தான்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஒரு நாடாகும். அறபிகள், 'செய்லான்' அல்லது 'செரந்தீப்' (அன்று இலங்கை அறியப்பட்ட பெயர்) பற்றி அறிந் திருந்தனர். எகிப்தியரும் அவர்களின் இந்திய, சீன கடற் பிரயாணங்கள் மூலம் இலங்கையை அறிந்திருந்தனர்.

மத்திய கிழக்கையும் ஆபிரிக்க வடகரையையும் உதுமா னிய துருக்கியர் தம் அதிகாரத்துள் வைத்திருந்த சமயம் எகிப்து, பெரிய பிரித்தானியாவின் ஆட்சிச் செல்வாக்கின் கீழ் இருந்தது. துருக்கிய சுல்தான், அல்பேனிய இளவர சன் ஒருவனின் வழித்தோன்றலை எகிப்தின் தேசாதிபதி யாக நியமித்திருந்தார். தேசாதிபதியோ தம்மை 'கதீவே' எனும் பெயரின் கீழ் எகிப்தின் ஆட்சியாளராக ஆக்கிக் கொண்டார். எகிப்தின் உள்ளூர்க் குடிமக்களோ தங்கள் தாய்நாட்டின் மீது பிரித்தானியரின் ஏகபோக ஆதிக்கத் துக்கு விரோதமாக செயற்படத் தொடங்கினர். சுதந்திரக் கோரிக்கை மூலம் எழுந்த தேசியவாதம் எனும் அலை நாடெங்கும் பரவத் தொடங்கியது. இச் சமயத்தில்தான் மும்முர தேசியவாதியான அறபி பாஷா, அம் மக்கள் மத்தியில் தேசியவாதக் கருத்தைப் பகிரங்கமாக எடுத் துரைக்கும் ஒரு தலைவராக விளங்கினார். அவர் எகிப்திய ரைப் பிரித்தானியருக் கெதிராக ஒரு பகிரங்கப் புரட்சி யில் ஈடுபடுத்தினார். எனினும், அப்போராட்டம் ஒரு சக்தி யற்ற ஆரம்பமாகவே அமைந்தது. படைபலம் கொண்ட

பிரித்தானியர் அப் புரட்சியை இலகுவாக அடக்கிவிட்டனர். அறபி பாஷா கைதுசெய்யப் பட்டார். சரணாகதியின் அடையாளமான வெள்ளைக் கொடியைக் கரவெண்ணத்துடன் பாவித்து, அலக்சாந்திரியாவில் தமது புரட்சியைத் தொடர்ந்து நாடாத்தும் நோக்கத்துடன் தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக அதைச் சாதமாக ஆக்கிக்கொண்டார் என அவர்மீது கொடுங்குற்றம் சாட்டப்பட்டது. அறபி பாஷாவும் அவருடைய சகாக்களும் மரணதண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படும் வரை சிறைவைக்கப் பட்டனர்.

இக் கால இடைவெளியில் பரபரப்பூட்டும் ஒரு புதுமைச் சம்பவம் நிகழ்ந்தது. ஐரிஷ் பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புக்களில் இச் சம்பவம் காணப்படுகின்றது. அதாவது, பிரித்தானிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒருவரான ஓடொனலைச் சேர்ந்த ஓடொனல் என்பார் ஆற்றிய சொற்பொழிவே அந் நிலையை ஏற்படுத்தியது. தமக்கு அறபி பாஷா பற்றியும் அவரது வழக்கு விசாரணை பற்றியும் அனுமதேயக் கடிதமொன்று கிடைத்துள்ளதாக அவர் அறிவித்தார். அக் கடிதம் வருமாறு:

> "அன்புள்ள ஐய! எங்கள் மதிப்பு வாய்ந்த மூதியவரின்[1] முகத்தை நேருக்கு நேர் நோக்கக் கூடிய துணிவு படைத்தவர் நீங்கள் என்பதை அறிந்திருப்பதனால், பகைவரை ஏமாற்றும் நோக்கத்துக்காக போர் நிறுத்த அடையாளக் கொடியை உபயோகிப்பது சம்பந்தமாக வூல்ஸ்லியின் படைவீரர் குறிப்புப் புத்தகத்தைப் பார்க்கும்படி நான் உங்களை மன்றாடுகிறேன். திரு. கிளாட்ஸ்டோன், இராணுவச் சட்டத்தை ஆராயும் சமயம் அவர் கண்டுபிடித்த அத்தாட்சியானது அவரது கவனத்திலிருந்து தப்பியிருக்கலாம்.
>
> உங்கள் உண்மையுள்ள,
> (ஒப்பம்) ஓர் அரசியல் எதிரி."

---

1. அப்போது பிரதமராயிருந்த திரு கிளாட்ஸ்டோன்.

தரைப்படை ஒழுங்கு விதிகள் பற்றிய இக் குறிப்புப் புத்தகத்தின் பிரகாரம், அறபிபாஷா அகப்பட்டுக் கொண்ட ஓர் இக்கட்டான சூழ்நிலை போன்ற ஒரு சூழ்நிலையில் போர் நிறுத்தத்துக்கான கொடியைப் பாவிக்க அனுமதியிருக்கின்றது.

மேலும் ஓடொனல், பாராளுமன்றத்தில் இதுபற்றிக் கேள்வி எழுப்பினர்:

> ''பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு – அறபி பாஷா தமது படைகளையும் துப்பாக்கிகளையும் அலக்சாந்திரியாவிலிருந்து வாபஸ் பெறும் பொருட்டு யுத்த நிறுத்தக் கொடியைப் பாவித்தது மன்னிக்க முடியாத கொடும் குற்றமென அவர் பிரகடனப் படுத்தியுள்ளதால், ஸேர் கார்னட் வூல்ஸ்லியின் ஆக்கமான 'படைவீரர் குறிப்புப் புத்தகம்' எனும் நூலை, அதிலே அறபி பாஷாவால் கையாளப்பட்ட இம் மோசமான செயல்முறை பிரித்தானிய இராணுவத்தால் உபயோகிக்கப்பட விதந்துரைக்கப்பட்டிருப்பதால், பிரித்தானிய இராணுவத்தின் புழக்கதிலிருந்து தடை செய்ய அவர் துரித நடவடிக்கை எடுப்பாரா?''

பரபரப்பூட்டும் இச் செய்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடையே ஒரு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியது. இந்தப் பிரச்சினை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படு முன்னரே மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த அறபி பாஷாவும் அவருடைய தோழர்களும் கொல்லப்பட மாட்டார்களென்றும் ஆனால், அறபி பாஷா கௌரவிக்கப்படும் ஓரிடத்துக்கு அவர்கள் எகிப்திலிருந்து நாடு கடத்தப்படுவார்களென்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. மரணதண்டனை மாற்றப்பட்டுவிட்டதென்ற பரபரப்பூட்டும் தகவலும் இலங்கைக்கு அவர்களை நாடு கடத்த எடுக்கப்பட்ட முடிவும் அறபி பாஷாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கலாம். ஏனெனில், இலங்கைத் தீவானது முதல் மனிதர் ஆதமின் பாதம் பதிந்த நாடு என்று

அன்று கருதப்பட்டது. அத்துடன் தொன்றுதொட்டு இலங்கைக்கும் அறபு நாடுகளுக்குமிடையே இருந்த தொடர்பும் உலகறிந்ததே.

1882 டிசம்பர் 26 ஆம் நாள் காலை அறபி பாஷாவும் அவரின் தோழர்களும் ''எம்ரியொட்ஸ்'' எனும் கப்பலில் அலக்சாந்திரியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். 1883 ஜனவரி 10 ஆம் நாள் அக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கையின் லெப்டினண்ட் கவர்னராக இருந்த ஜே. டக்லஸ் என்பார், அன்று மாலை டொக்டர் ஒபிரின் என்பாருடன் சென்று, அறபி பாஷாவும் அவரது குழுவும் அடுத்த நாள் காலை இறங்கவும் கொழும்பிலுள்ள' பிரேபுருக் ஹவுஸ், ஸ்டுரான் ஹவுஸ், லேக் ஹவுஸ் ஆகிய இடங்களில் தங்குவதற்காக அழைத்துச் செல்லப்படவும் ஒழுங்கு செய்ததோடு வேறு இல்லங்களையும் அவர்களின் உபயோகத்துக்காக ஒதுக்கிக் கொடுத்தனர். தேசாதிபதியின் கட்டளைப் பிரகாரம், மெஸர்ஸ் வொன் அன் கம்பனியைச் சேர்ந்த லெட்வட் என்பவரால் எல்லா இல்லங்களுக்கும் தளபாட வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

பிரித்தானிய அரசாங்கம் அறபி பாஷாவுக்கு 800 பவுனையும் ஏனையோருக்கு 400 பவுணிலிருந்து குறைவுபடும் ஒரு தொகையையும் வருடாந்தக் கொடுப்பனவாகக் கொடுத்தது. நாடு கடத்தப்பட்ட இக்குழுவில் ஐம்பத்தாறு பேர் இருந்தனர். அவர்களும் அவர்களின் குடும்பங்களும் தங்களைப் புதிய சூழ்நிலைக்கேற்ப சரிப்படுத்திக் கொண்டனர். வெளிநாடொன்றுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த நிலையிலும் அந்நாட்டு மக்களிடையே அமைவடக்கமானதும் கண்ணியமானதுமான ஒரு நிலையை அறபி பாஷா பெற்றிருந்தார். அவர்களின் முதல் ஆர்வம் ஆங்கில மொழியைக் கற்பதன் மேல் அமைந்திருந்தது வியப்பாகத் தோன்றலாம். இக் கைங்கரியத்தில் அவர்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

அறபி பாஷாவின் தலைமையில் அவருக்கு உற்ற துணையாட்கள் அறுவர் இருந்தனர். துல்பா பாஷா, முகம்மது பஹ்மி, முகம்மது ஸமீஉ, அலி பஹ்மி, அப்துல் ஆல், யஃகூப் ஆகியோரே அவர்கள். அவர்களில் அப்துல் ஆல் கொழும்பில் மரணமடைந்தார். அவரது உடல் குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. முகம்மது பஹ்மி, கண்டியில் மரணமடைந்தார். அவரது உடல் கண்டி மஹியாவ பள்ளிவாசல் வளவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அறபி பாஷாவின் பிள்ளைகளிற் சிலர் கண்டி கிங்ஸ்வுட் கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். கல்வியில் அவர்களுக்கிருந்த ஆர்வம் சிறப்பானது. அவரின் ஒரு மகன் பறங்கிப் பெண் ஒருவரை மணந்தது காரணமாக அது பாஷாவின் குடும்பத்துக்கும் இலங்கைக்குமிடையே குடும்பத் தொடர்பு ஏற்பட வழிகோலியது. அப்பெண் இஸ்லாத்தைத் தழுவி ஜமீலா என பெயர் கொண்டார். அவர்களுக்கு பிரட் அறபி எனப் பெயரிய ஒரு மகன் இருந்தார். உண்மையில் பரீத் அறபி என்பதன் ஆங்கில மரபுருவே அது. அவர் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் எகிப்துக்குத் திரும்பிவிட்டார்.

இலங்கை முஸ்லிம்கள் அறபி பாஷாவையும் அவரின் குழுவினரையும் திறந்த மனதுடன் வரவேற்றுக் கௌரவித்தனர். அவர்களுக்கிடையில் நெருங்கிய நேசமும் தொடர்பும் ஏற்பட்டன. இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட அம் மக்களை உள்ளூர் முஸ்லிம்கள் வரவேற்றுப் போற்றி, இங்கு அவர்கள் சௌகரியமாகத் தங்க எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தனர். அத்துடன் அவர்கள் தங்கள் பிறந்தகத்துக்குத் திரும்பும் திட்டத்துக்கும் தம்மாலான எல்லா உதவிகளையும் அளித்தனர்.

அறபி பாஷாவும் குழுவினரும் இலங்கை வந்தடைந்த சிறிது காலத்தில் ஹாஜி இஸ்மாயில் எபெண்டி எனப் பின்னர் அறியப்பட்ட இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆலிம் என்பாரின் தலைமையில் ஒரு குழு ஹஜ்ஜுக்குச் செல்ல

ஆயத்தம் செய்தது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அறபி பாஷா குழுவினர் எகிப்திலுள்ள தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கடிதங்களையும் வெகுமதிகளையும் அனுப்பி வைத்தனர். அறபி பாஷாவும் அரசினரிடம் மன்னிப்புக் கோரி மனுவொன்றை அனுப்பி வைத்தார். இம்மனு அந்த 'ஹஜ் யாத்திரிகர்களால் தலையணை உறையொன்றுள் பதுக்கப்பட்டு மிகக் கவனமாக எடுத்துச் செல்லப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக இந்த மனுவினால் எதுவித பயனும் ஏற்படவில்லை. ஏனெனில், நாடு கடத்தல் சம்பந்தமான பிரகடனம் வெளியிடப்பட்டு ஒரு சிறு காலமே கடந்திருந்ததனால் இப் பிரச்சினையைப் பற்றி ஆலோசிக்கக் கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரும்பவில்லை. இச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் தேசாதிபதியாக ஸேர் வில்லியம் கிரகரி இருந்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சியென்றே கூற வேண்டும். ஏனெனில், அவர் எகிப்திலிருந்த சமயம் அறபி பாஷாவுடன் தொடர்பு கொண்டவராக இருந்தார். அறபி பாஷா இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்த வேளை, தேசாதிபதியுடனான தொடர்பை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டாரெனினும் அவசரமாக மன்னிப்பைப் பெற்றுத் தமது தாய்நாட்டுக்குத் திரும்புவதற்குத் தேசாதிபதியாலும் எதுவும் செய்ய முடியாதென்று அவருக்குத் தோன்றியது.

உள்ளூர் முஸ்லிம்களுடன் சுதந்திரமாகக் கலந்துறவாடியதன் மூலம் அவர்களின் கல்வி, மத, சமூக நடவடிக்கைகளில் அறபி பாஷா கலந்து கொண்டார். அதனால் இரண்டு பகுதியினரும் எவ்வளவோ கற்றுக் கொண்டனர். சிறப்பாக அவர் முஸ்லிம்களின் கல்வி எழுச்சியில் தமது அயரா ஆதரவை ஸேர் ராஸிக் பரீத் அவர்களின் பாட்டனாரான வாப்பிச்சி மரிக்கார் அவர்களின் தலைமையில் நல்கினார். உண்மையில் வாப்பிச்சி மரிக்கார் அவர்களுடன் அறபி பாஷா எவ்வாறு இணைந்திருந்தாரெனின், அறபி பாஷா அவரை "அல்-வாப்பிச்சி" என்றே அழைத்தார். அவ்வாறு அழைத்ததற்குக் காரணம் தமது தோழமை உணர்ச்சியை எடுத்துக் காட்டுவதற்காகவாகும். ஸாஹிரா மத்ரஸா அதன் குழந்



தைப் பருவத்தில் இருந்த சமயம் அதன் பரிசளிப்பு விழாவில் தம்மைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டதை அறபி பாஷா தமக்களிக்கப்பட்ட ஒரு தனி கௌரவமெனக் கருதினார். இவ் வைபவத்துக்கு அவர் சமுகமளித்தமை அங்கு குழுமியிருந்த அனைவராலும் பெரிதும் உணரப்பட்டது. அத்துடன் அது ஸாஹிராவுக்கு ஒரு கௌரவத்தையும் கொடுத்தது.

அறபி பாஷா இலங்கையிலிருந்த சிறிது காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகியவர்களில் ஹாஜி இஸ்மாயில் எபெண்டி அவர்களும் ஒருவராவார். அவர் அறபு மொழியிலும், மத அறிவிலும் தமக்கிருந்த புலமை காரணமாக அறபி பாஷாவின் நெருங்கிய நண்பராக விளங்கியது மட்டுமன்றி அறபி பாஷா அவர்கள் வெளியிட நேரிட்ட எல்லாக் கருத்துக்களையும் அனேகமாக மற்றவர்களுக்கு மொழிபெயர்த்து அறிவிக்கும் ஒருவராகவும் விளங்கினார். அறபி பாஷாவினதும் ஏனைய பாஷாக்களினதும் சமுகத்தில் அவர் எந்நேரமும் கலந்துறவாடுபவராக இருந்தார். அவர்களும் அவரை அதிகம் விரும்பிப் போற்றினர்.

ஸாஹிரா மத்ரஸாவில் நடைபெற்ற விசேட விளையாட்டுப் போட்டி வைபவமொன்றில் அறபி பாஷா கலந்து கௌரவித்தார். இவ் வைபவத்தின்போது அவர் ஒரு தென்னங் கன்றை ஞாபகார்த்தமாக ஸாஹிரா மத்ரஸா வளவில் நட்டினார். அது சில ஆண்டுகளுக்கு முன் வரை நிலைத்திருந்தது. அம் மரம், வாப்பிச்சி மரிக்கார் அவர்களால் அன்பளிப்

புச் செய்யப்பட்ட கட்டடத்தை நோக்கி வளைந்திருந்ததனுல் அது அக் கட்டடத்துக்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடும் என ஸாஹிரா அதிபர், மரதானைப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அறிவித்ததன் பேரில் அம்மரம் வெட்டப்பட்டது. எனினும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்மரத்தின் ஒரு காயை எடுத்து அம் மரம் இருந்த இடத்துக் கருகில் அவர்கள் நட்டுவித்தனர்.

1901ஆம் ஆண்டு உதயமானதும் அறபி பாஷா அவர்களுக்கு அளிக்கப்பட்ட மன்னிப்பும் வந்து சேர்ந்தது. அவரின் தோழர்களும் தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். இச் செய்தியை அறபி பாஷா அவர்கள் ஆனந்தத்தாலும் கண்ணீராலும் வரவேற்ருர். தாயகம் திரும்பக் கிடைத்த பேறு ஆனந்தத்தையும் நண்பர்களை விட்டுப் பிரியும் துயரம் கண்ணீரையும் வரவழைத்தன.

அறபி பாஷாவுக்கும் அவரின் தோழர்களுக்கும் ஒரு மாபெரும் பிரிவுபசாரம் நடைபெற்றது. ஹமீதியாப் பாடசாலை வளவில் நடந்த அக்கூட்டத்தில் அறபுத் துதிப் பாடல்களும் சுகமே தாயகம் போய்ச் சேர்வதற்கான பிரார்த்தனைகளும் இடம் பெற்றன. நாடு கடத்தப்பட்ட அவர்களிற் சிலர் காலத்துக்குக் காலம் மன்னிப்பு வழங்கப்பட்டதன் பேரில் முன்னரேயே இந்நாட்டை விட்டுச் சென்றிருந்தனர். எனினும், கடைசிக் குழுவிலேயே அறபி பாஷா சென்ருர். அவரது பிரிவு அங்கு கூடியிருந்த முஸ்லிம்களின் இதயத்தைப் பிழிந்தது.

அறபி பஷா இத் தீவிலிருந்து இறுதியாகச் சென்றது கரீம் ஜீ ஜிபர்ஜீ அவர்களின் இல்லமான பம்பளப்பிட்டியவிலிருந்த ''ஈஸா விலா'' விலிருந் தாகும். அங்கு அறபி பாஷா அவர்கள் அன்னுரின் விருந்தினராக இருந்தார்.

1901 செப்ரெம்பர் 18ஆம் நாள் அறபி பாஷா அவர்கள் அவரின் நண்பர்கள் மத்தியிலிருந்து ஸலாத்துடனும் ஆனந்தக் கண்ணீருடனும் இத்தீவின் கரையை விட்டகன்ருர்.

★



# ஐ. எல். எம். அப்துல் அஸீஸ

கொழும்பைச் சேர்ந்த புகழ்பெற்ற ஒரு சோனக குடும்பத்தில் அப்துல் அஸீஸ் பிறந்தார். அவரின் பாட்டனார் உதுமா லெப்பை மரிக்கார் செய்கு அப்துல் காதிர் மரிக்கார் (சேகாதி மரிக்கார்) ஆவார். அவர் சோனகரின் ஒரு பிரதான பிரிவுத் தலைவராக விளங்கினார். அவரின் தந்தை ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் அவர்கள் காசாளர் பதவி வகித்தவர். ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் மீது நம்பிக்கை கொண்ட அரசாங்கம் அவரை 1879 இல் குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியின் நம்பிக்கைப் பொறுப்பாளர் மூவரில் ஒருவராக நியமித்து அதனை அவருக்குக் கையளிக்கவும் செய்தது,

அப்துல் அஸீஸ் அவர்கள் பிறந்தது 1867 ஒக்ரோபர் 27 ஆம் தேதியாகும். அவர் அவரின் தந்தையின் கீழ் குர் ஆனையும் தமிழையும் கற்ருர். ஆங்கில அறிவைப் புறக் கோட்டை அரசாங்க ஆண்கள் பாடசாலையில் பெற்ருர். மத அறிவை நன்கு பெற்ற அவர் தமிழிலும் பாண்டித் தியம் பெற்றதோடு அனேக ஆங்கில நூல்களையும் படித் தார். 1888 இல் அல் ஜாமிய்யத்துல் இஸ்லாமிய்யாக் கழ கத்தில் செயலாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். வைத்தியசாலையிலிருந்து முஸ்லிம்களின் சடலங்களை அடக் கத்தின் பொருட்டு பெற்றுக்கொள்வது இக்கழகத்தின் நற்பணிகளில் ஒன்ருகும். அறிஞர் சித்திலெப்பை அவர்கள் ஆரம்பித்த "முஸ்லிம் நேசன்" எனும் பத்திரிகையின் பதிப்பாசிரியர் பதவியை 1889 இல் அவர் ஏற்றுக்கொண் டார். ஏ. எம். வாப்பிச்சி மரிக்கார் அவர்களின் பொரு ளுதவியுடன் சித்திலெப்பை அவர்கள் ஆரம்பித்த கல்வி இயக்கத்துக்கு அப்துல் அஸீஸ் அவர்கள் தமது முழு ஆதரவையும் வழங்கினர். இந்த இயக்கம் கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகத்தை ஸ்தாபித்து ஸாஹிராக் கல் லூரியை நிறுவியது. இக்கழகத்தின் செயலாளராக அப்துல் அஸீஸ் அவர்கள் விளங்கினர். ஸாஹிராக் கல் லூரியின் முகாமையாளராக விளங்கிய வாப்பிச்சி மரிக் கார் அவர்கள் வழங்கிய நற்சான்றுரையே அப்துல் அஸீஸ் அவர்கள் அளித்த மகத்தான உதவியை எடுத்துக் காட்டுவதாக விளங்குகின்றது. "இக் கைங்கரியத்தில் எனக்கு துணிவுடன் உதவிய குழு உறுப்பினர்களுக்கு, சிறப்பாக ஐ எல். எம். அப்துல் அஸீஸ் அவர்களுக்கு அவர் அளித்த அறிவுரைக்காக என் மனமார்ந்த நன்றி உரித்தாகும்" என்று அவர் கூறினர்.

வழக்கறிஞரான ஏ. ஸி. முகம்மது என்பார் ஸாஹிராக் கல்லூரி பரிசளிப்பு விழாவொன்றில் அப்துல் அஸீஸ் அவர்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "இக்கல்வி நிலையத்தின் தெம்புகோலே அவர் தாம்" என்ருர்.

1900 இல் "சோனகர் சங்கம்" எனும் ஒரு சங்கத்தைச் சோனகர்கள் ஸ்தாபித்து அதன் தலைவராக அப்துல் அஸீஸ் அவர்களைத் தேர்ந்தெடுத்தனர். விக்டோரியா ராணியினதும் ஏழாவது எட்வட் மன்னரினதும் மறைவை யொட்டி அவர் அனுதாபத் தந்திகளை அனுப்பி வைத்தார். துருக்கி அரசாங்கக் கொன்சல் அத்தாவுள்ளாஹ் பே என்பார் கொழும்பைத் தாண்டி சிங்கப்பூர் சென்ற சமயம் அப்துல் அஸீஸ் அவர்கள் அவருக்கு வாழ்த்துரை யொன்றை வாசித்தளித்தார். முதல் முஸ்லிம் அட்வகேட்டான அப்துல் காதர் அவர்களுக்கு அவர் ஒரு வாழ்த்துரையை வழங்கினார். டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான் அவர்களைச் சட்டவாக்க சபைக்கு ஓர் முகம் மதிய உறுப்பினராக நியமித்ததற்காக தேசாதிபதி ஸேர். வெஸ்ட் ரிட்ஜ்வேக்கு ஒரு நன்றித் தீர்மானத்தையும் அவர் நிறைவேற்றினார்.

"மறுமை வாழ்க்கை பற்றிய முஸ்லிம்களின் கொள்கை" எனும் விடயம் பற்றி சோனக சங்க மண்டபத்தில் அப்துல் அஸீஸ் அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். மறுமை வாழ்க்கை பற்றிய அவரது விளக்கமானது இமாம் கஸ்ஸாலி (ரஹ்), மிர்ஸா குலாம் அகமது ஆகியோரது விளக்கத்தின் மீது அமைந்திருந்தது. இந்தச் சொற்பொழிவு இந்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. அது பலரின் பாராட்டுதலைப் பெற்றது.

1898 இல் அப்துல் அஸீஸ் அவர்கள் "அஸ்ஸவாப்" எனும் ஓர் அறபுத் தமிழ்ப் பத்திரிகையை வெளியிட்டார். அது கல்லச்சில் வெளிவந்தது. 1901 இல் "முஸ்லிம் காடியன்" எனும் ஒரு தமிழ்ப் பத்திரிகையை அவர் ஆரம்பித்தார், பின்னர் அது ஒரு தமிழ்-ஆங்கில சஞ்சிகையாக வெளிவந்தது. முஸ்லிம் விவாகங்களைக் கட்டாயம் பதிவு செய்யச் சட்டம் இயற்றப்படல் வேண்டுமென இச்சஞ்சிகை மூலம் அவர் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தார். கிறிஸ்மஸ் வெளியீடொன்றில் பிரசுக்கப்பட்ட,

குடியேற்ற நாட்டுச் செயலாளரான ஸேர் ஹியூ கிளிபட் என்பாரின் இஸ்லாத்துக்கு விரோதமான கண்டனங்களுக்கு அவர் சிறந்த பதிலடி கொடுத்தார். 1907இல் "அல்-முஸ்லிம்" எனும் ஓர் ஆங்கில-தமிழ் பத்திரிகையை அவர் பிரசுரித்தார். சட்டவாக்க சபையில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் பற்றியும் முஸ்லிம் கல்வி பற்றியும் அவர் இந்நாட்டுப் பத்திரிகைகளுக்கு வழங்கிய கருத்துரைகள் பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

முதல் முஸ்லிம் அட்வகேட்டான அப்துல் காதர் அவர்கள் துருக்கித் தொப்பி அணிந்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன் தோன்றுவது தடுக்கப்பட்ட பொழுது அப்துல் அஸீஸ் உட்பட முஸ்லிம்களின் தூது கோஷ்டியொன்று பிரதம நீதியரசர் ஸேர் சீ. பீ. லயாடை அவரது இல்லத்தில் சந்தித்து தங்களது முறையீட்டைச் சமர்ப்பித்தனர். அதனால் எதுவித பலனும் கிடைக்காததால் முஸ்லிம்கள் 1905 டிசம்பர் 31 ஆம் தேதி மரதானைப் பள்ளிவாசல் முற்றவெளியில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தைக் கூட்டினர். மாட்சிமை தங்கிய மன்னரிடம் நிவாரணம் வேண்டி அப்துல் அஸீஸ் அவர்கள் அங்கு ஒரு பிரேரணையைப் பிரேரித்தார்.

சட்டவாக்க சபையில் தமிழ் பேசும் மக்களை ஒரு தமிழ் உறுப்பினர் பிரதிநிதித்துவம் செய்தார். 1880 ஆம் ஆண்டளவில் முஸ்லிம்கள்—அவர்களிற் பெரும்பான்மையினர் சோனக இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்—சட்டவாக்க சபையில் தாங்கள் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரால் பிரதிநிதித்துவம் செய்யப்படல் வேண்டுமென அடிக்கடி வேண்டுகோள் விடுத்து வந்தனர். அப்போது சோனகர், தமிழ்பேசும் மக்களெனவும் அவர்கள் தமிழினத்திலிருந்து இஸ்லாத்துக்கு மதம் மாற்றப்பட்டவர்கள் எனவும் கூறி, அந்த அடிப்படை

யில் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அதனை எதிர்த்தார். சோனகர் தமக்கென்று ஓர் உறுப்பினரைச் சட்டவாக்க சபையில் கொண்டிருக்க வேண்டுமென்று சித்திலெப்பை அவர்கள் முன்னின்று நடாத்திய போராட்டத்தை அப்துல் அஸீஸ் அவர்கள் தொடர்ந்தார். சோனகரின் வேண்டுகோளை இராமநாதன் அவர்கள் சட்டவாக்க சபையில் எதிர்த்ததோடு, அரச ஆசிய கழகக் கூட்டத்தில் "Ethnology of the 'Moors' of Ceylon" (இலங்கைச் சோனகர் இன வரலாறு) எனும் ஓர் ஆய்வுக் கட்டுரையையும் வாசித்தார். அதிலே அவர், சோனகர் தமிழரின் பரம்பரையினர் எனும் தமது வாதத்தை நிரூபிக்க முயன்றார். அப்துல் அஸீஸ் அவர்கள் சோனகர் சங்கத்தின் ஆதரவின் கீழ் இராமநாதனது இந்த ஆய்வுக் கட்டுரைக்கான திறனாய்வொன்றை வெளியிட்டார். அந்த நூலிலே அவர், இலங்கைச் சோனகர் ஒரு புறம்பான இனம் என்றும் அவர்கள் இலங்கையில் குடியேறிய அறபியரின் சந்ததியினர் என்றும் நிரூபித்தார். இந் நூல் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

1903 இல் அப்துல் அஸீஸ் அவர்கள் மரதானைப் பள்ளிவாசலின் முகாமை நம்பிக்கைப் பொறுப்பாளராக ஐந்து வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக் காலவரையறை முடிவில் மேலும் ஐந்து வருடங்களுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது ஜமாஅத்தின் ஒரு பிரிவினரால் எதிர்க்கப்பட்டு இறுதியில் "பிரிவி கவுன்ஸில்" வரை போயிற்று. "பிரிவி கவுன்ஸில் அவரது தேர்வை அங்கீகரித்தது.

முகம்மது மாக்கன் மாக்கர் எபெண்டி அவர்கள் துருக்கிய கொன்சலாக நியமிக்கப்பட்ட பொழுது அளிக்கப்பட்ட

இராப் போசன விருந்துக்கு அப்துல் அஸீஸ் அவர்கள் தலைமை தாங்கினார். 1911 ஆம் ஆண்டில் குடிசன புள்ளி விவர அறிக்கைக்கு அவர் "சோனகர், குழந்தைப் பிறப்பில் கையாளும் வழக்கங்களும் அவர்களின் சாமத்தியச் சடங்குகளும்" எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வழங்கினார்.

1905 இல் சட்டவாக்க சபையில் அப்துர் ரஹ்மான் அவர்களின் பிரதிநிதித்துவ காலம் முடிவடைந்தபோது அந்த இடத்துக்கு அப்துல் அஸீஸ் அவர்கள் நியமிக்கப்படல் வேண்டுமென்று முஸ்லிம்கள் அரசாங்கத்துக்கு மனுவொன்றை அனுப்பினர். எனினும், முன்னையவரின் காலம் நீடிக்கப்பட்டது, 1906 இல் அப்துல் அஸீஸ் அவர்கள் முகம்மதிய விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் வரைந்தார். இஸ்லாமிய சட்டங்களிலிருந்து விலகாமல் முஸ்லிம் பெண்கள் சமூக, அறிவியல், ஆத்மீகத் துறைகளில் இஸ்லாத்தின் பொற்காலப் பெண்கள் போல் முன்னேற "பர்தா" விஷயத்தில் சீர் திருத்தங்களை அவர் சமர்ப்பித்தார்.

மார்க்க அறிவைப் பெறும் விஷயத்திலும் அவர் சீர் திருத்தங்களை வேண்டினார். குர்ஆன், ஹதீஸ், மௌலூது ஆகியவற்றை அறபு மொழியில் ஓதுவதால் நன்மை கிடைக்கும் என்று உலமாக்கள் கூறுவது மட்டும் போதாது என அவர் கருத்துக் கொண்டார். உண்மையிலே தேவைப்படுவது, மார்க்க கிரந்தங்களின் மொழிபெயர்ப்பும் விளக்கமும் தாம் என அவர் கருத்துத் தெரிவித்தார். "பப்டிஸ்ட்" இளைஞர் கழகம் அதனது மண்டபத்தில் இஸ்லாம் பற்றி ஒரு சொற்பொழிவாற்ற அவருக்கு வாய்ப்பளித்தது.

1912 இல் அப்துல் அஸீஸ் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து ஆங்கு ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் ஒரு மார்க்க சொற்பொழிவாற்றினார். யாழ்ப்பாண முஸ்லிம்கள், கதீப்மார்களைக் கொண்டு ஜும்ஆப் பிரசங்கங்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டுமென்று அவர் வேண்டினார், அதன் பின்னர் அறபு மொழியில் மாத்திரம் "குத்பா" ஓதும் வழக்கம் நின்றுவிட்டது.

சித்திலெப்பை அவர்கள் தமது "அஸ்ராருல் ஆலம்" எனும் நூலில் நாஸ்திகரின் வாதத்தைத் தவறென நிலை நாட்டி, விஞ்ஞானிகள் கூறும், காரணங்களுக்கெல்லாம் முடிவான காரணமான "சக்தி"யானது, முஸ்லிம்கள் கூறும் விவேகமுள்ள, எல்லாவற்றிலும் ஊடுருவிப் பரவும் உணர முடியா "ஸாத்" ஆகும் என நிருபிக்க முயன்ருர். தமது கோட்பாடு சரியானது என வாதித்த நிலையில் சித்திலெப்பை அவர்கள் காலன் கைவசப்பட்டார். அப்துல் அஸீஸ் அவர்கள் தமது "சத்தின் ஞானுர்த்தம்" எனும் நூலிலே சித்திலெப்பை அவர்களின் கருத்தை ஆதரித்து இவ் வாதத்தைத் தொடர்ந்தார். ஸேர் ஸெய்யிது அமீர் அலி, பீ. ஸீ., எல்.எல்.டீ. அவர்கள் அப்துல் அஸீஸ் அவர்களுக்குப் பின் வருமாறு எழுதினுர்:

> "உங்கள் 1898 டிசம்பர் 18 ஆம் தேதிய கடிதம் கிடைத்தது. அதிலே, ஸ்பென்ஸர் என்பாரின் கருத்துப் படி, வரம்பற்றதும் நிலைபேறுடையதும் எதிலிருந்து எல்லாப் பொருளும் வெளியாகின்றதோ அதுவுமான மூலசக்தி அல்லது ஆற்றலானது இயல் கடந்த சொற் கருத்தில் முஸ்லிம்களாகிய நாம் "இறை" எனக் கூறும் "ஸாத்" ஆகுமா எனக் கேட்டிருந்தீர்கள். நான் அதை விளங்கிக் கொண்ட வகையில், எல்லா இயல் கடந்த கருத்துக்களைப் பொறுத்த வரையிலும் அவை ஒன்றே யாம் எனக் கூற விரும்புகின்றேன்."

சிலுவைக்கும் இளம் பிறைக்குமிடையிலான மோதல் சம்பந்தமாக அப்துல் அஸீஸ் அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினுர். அது நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்கள் 1915 செப்ரெம்பர் 11 ஆம் தேதி இறையடி சேர்ந்தார். அவரின் ஒரே மகன் ரிஷாத் ஏ. அஸீஸ் ஆவார். நாபிக் புர்ஹான், எம். மர்ஸூக் புர்ஹான் ஆகியோர் அவரின் பேரர்களாவர்.

# ஏ. எம். வாப்பிச்சி மரிக்கார்

கி. பி. 1016 ஆம் ஆண்டளவில் சில அறபிகள் இலங்கையில் குடியேறினர். அவர்களுள் வைத்திய வல்லுநர்களும் திறமைமிக்க கொத்தர்களும் இருந்தனர். அவ்வறபிகளில் ஒருவர் செய்கு பரீதாவார். அவ்வறபிகள் இங்கு வரவேற்கப்பட்டதோடு பற்பல தொழில்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர். ஏறக்குறைய 1770 ஆம் ஆண்டு வரை அவர் தனது வரலாறு வாய்வழி வந்த வரலாருகவே அமைந்தது. 1770 ஆம் ஆண்டுக்கான அரசாங்க பதிவேடான 'தோம்பில்' பரீது எனும் ஒருவரைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. தங்கள் வம்சாவளி மூதாதையரின் பெயரை மேற்கொள்வது முஸ்லிம்களின் வழக்கமாக இருந்தபடியால் பரீது எனும் இப் பெயரும் செய்கு பரீதிலிருந்து வரப்பெற்ற பெயராகும்.

பரீது எனும் அவரின் வழிவந்த பணக்காரச் சீமாட்டி ஒருவருக்கு கொழும்பில் அம்பகஹவத்த எனும் இடத்தில் ஒரு விசாலமான காணி இருந்தது. அச்சீமாட்டி மறைந்ததும் அவரது சொத்துக்கு வாப்பிச்சி மரிக்காரும் வாரிசானுர். தம் பங்கைப் பெற்றுக் கொண்ட வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் ஏனைய பங்குகளையும் உரியவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டார். அக் காணியில் ஒரு பகுதியைப் பள்ளிவாசலுக்கென ஒதுக்கி அதனை அன்பளிப்புச் செய்த அவர், பின்னர் அதில் ''பரீத் தக்கியா'' எனும் பள்ளிவாசலைக் கட்டினுர்.

கட்டட நிர்மாண வல்லுநர்களின் கீழ் வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் தொழில் கற்றுக்கொள்ளும் ஒருவராய் இருந்தார். அவரைப் போன்ற கட்டடக் கலைஞர்கள், கிரனடா மாளிகைகளை உருவமைத்து உருவாக்கிக் கொடுத்த திறமைசாலிகளின் வழிவந்தோராவர். கட்டடங்களுக்கு ''மூரிஷ்'' சிற்பக் கலைத் திறனைக் காட்டும் மேல் வளைவுகள் அமைப்பதும் கைத்திறனைக் காட்டும் வகையில் அவற்றுக்குச் சாந்தடிப்பதும் திறமைமிக்க இந்த மூரிஷ் கொத்தராலேயே



செய்யப்பட்டது. தம் தொழிலில் வல்லுநரான வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் கட்டடங்களைத் தனியாகவே நிர்மாணிக்கும் பணியில் இறங்கி ஓர் ஒப்பந்தக்காரராக விளங்கினார். கொழும்பு பிரதம தபால் கந்தோர், கொழும்பு நூதனசாலை, கொழும்பு சுங்கம், புறக்கோட்டையிலுள்ள பழைய கொழும்பு நகர மண்டபம், கொழும்பிலுள்ள கோல்பேஸ் ஹோட்டல், விக்டோரியா ஆகேட், பின்லே மொயர் கட்டடம், மணிக்கூட்டுக் கோபுரம், பட்டன்லேக் பட்டரி, பழைய கண் ஆஸ்பத்திரி ஆகியவற்றைக் கட்டியெழுப்பியவர் அவரே என அவற்றின் செங்கல்லும் காரையும் நின்று நிலவும் அத்துணை காலமும் அவரது பெயர் நினைவு கூரப்படும். புறக்கோட்டையிலுள்ள பழைய நகர மண்டபத்தை அவர் 689 பவுனுக்கு ஒப்பந்தம் செய்து கட்டிக் கொடுத்தார்.

1877 ஜனவரியில் கொழும்பு நூதனசாலை, தேசாதிபதி கிரகரி என்பவரால் திறந்து வைக்கப்பட்டபோது அங்கு கலந்து கொண்ட பெருந்திரளான மக்கள் கூட்டத்தில் அனேக முஸ்லிம்களும் இருந்தனர். திறப்பு விழா முடிவுற்றதும் ''நீங்கள் என்ன கௌரவத்தை விரும்புகின்றீர்கள்'' எனும் கேள்வி தேசாதிபதியிடமிருந்து வாப்பிச்சி மரிக்காரை நோக்கி எழுந்தது. அதே கேள்வி, அக்கட்டட மரவேலையில் வாப்பிச்சி மரிக்கார் அவர்களுக்கு உதவி புரிந்த தச்சரிடமும் கேட்கப்பட்டது. அவர் ஒரு கௌரவப் பட்டத்தை விரும்பி நின்றார். அது அவ்வாறே வழங்கப்பட்டது. வாப்பிச்சி மரிக்கார் அவர்களோ பற்றுறுதியுள்ள ஒரு முஸ்லிமாவார். அங்கு திரண்டிருந்த முஸ்லிம்களைக் கண்ணுற்ற அவர், வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆவுக்குப் போகாமல் முஸ்லிம்கள் நூதனசாலையில் காலத்தைக் கழிப்பாரோ எனப் பயந்தார். எனவே, நூதன சாலையை வெள்ளிக் கிழமைகளில் மூடிவிடும் கௌரமே தமக்குப் போதும் என அவர் வேண்டிக் கொண்டார்.

கண்டி மன்னனின் சிம்மாசனம் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்ட சமயம், பார்வை நாட்களில் வெள்ளிக் கிழமையும் குறுக்கிட்டது. வெள்ளிக்கிழமை நூதன சாலை

மூடப்பட வேண்டிய நாளானதால் குறுக்கிட்ட அச் சில வெள்ளிக் கிழமைகளில் நூதன சாலையைத் திறந்து வைக்க அப்போதைய பிரதமர் டீ. எஸ் சேனநாயக்க அவர்கள் வாப்பிச்சி மரிக்காரின் பேரரான ஸேர் ராஸிக் பரீத் அவர் களின் விருப்பத்தைப் பெறவேண்டி இருந்தது.

செல்வம் வரப் பெற்றதும் வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் தமது சமூகத்தின் சமய, பொருளாதார, சமூக, கல்வி நலன் களைப் பற்றி எண்ணலுற்றார். மரதானைப் பள்ளிவாசல் வள வான "மரக்கலப் பள்ளிய வத்தை"யின் சுற்றுப் புறத்தில் அவர் அப்போது வாழ்ந்தார். அப் பள்ளிவாசலுக்கு அவர் தமது ஆதரவை அளித்தார். அவரது குடும்ப வாசஸ்தலம் ரெயில்வே விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட போது அவர் வொக்சோல் வீதியில் ஒரு வீடு கட்டிக் குடியமர்ந்தார். அங் கிருந்த வேளையிலும் அவர் மரதானைப் பள்ளிவாசல் நலனில் அக்கறை செலுத்தினார். பின்னர் அம்பகஹவத்தையில் ஒரு புது வீடு கட்டி அதிற் குடியேறினார். மரதானைப் பள்ளிவாசல் ஜமாஅத்தில் அவர் ஒரு முக்கிய உறுப்பினராக விளங்கினார். சித்திலெப்பை அவர்கள் "அஸ்ராருல் ஆலம்" எனும் நூலில் வாப்பிச்சி மரிக்கார் பற்றிக் குறிப்பிடும்போது, 'எனக்குக் கொழும்பில் இரு நண்பர்கள் இருக்கின்றனர்; ஒருவர், பாடசாலைகளை ஆரம்பித்தும் தமது பணத்தைத் தாராள மாகச் செலவு செய்தும் கல்வி சம்பந்தமாகப் பெரிதும் அக் கறையெடுக்கும் வள்ளலான அரசி மரிக்கார் வாப்பிச்சி மரிக்கார் ஆவார். அவர் எல்லா நல்ல நோக்கத்துக்காகவும் செலவு செய்ய முன்வருகின்ற ஒருவர். மற்றவர் தஞ்சாவூரைச் சேர்ந்த குலாம் முஹியத்தீன் ஸாஹிப் பஹாவுத்தீன் ஆவார்" எனக் கூறுகிறார்.

தமது கல்வி இயக்கத்துக்காக வாரி வழங்கக் கூடிய ஒரு வரை சித்திலெப்பை அவர்கள் வாப்பிச்சி மரிக்காரிற் கண் டார். சித்திலெப்பை அவர்களும் வாப்பிச்சி மரிக்கார் அவர் களும் பாடசாலையொன்றை நிறுவத் தகுந்த இடமொன்றை தேடிக் கொண்டிருந்த போது, மரதானைப் பள்ளிவாசல் வள வில் கைவிடப்பட்டிருந்த ஒரு பகுதி அந்நோக்கத்தை நிறை

வேற்றும் எனக் கண்டனர். மரதானைப் பள்ளிவாசல் பரி பாலன குழுவின் துணைத் தலைவராக வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் விளங்கிய சமயம் அது. இவ்விருவரும் அக்காணியை, பாடசாலையொன்றை அமைக்கக் குத்தகைக்கு விடுமாறு பரி பாலனக் குழுவிடம் வேண்டினர்.

''ஜம்மிய்யத்துல் இஃதிகானுல் உலூம்'' எனும் கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் தமது சொந்தச் செலவில் பாடசாலைக்கான ஒரு கட்டடத்தைக் கட்டி அதன் பராமரிப் புக்காக நான்கு வீடுகளையும் கட்டிக் கொடுத்தார். அது சம யம் கொழும்பு நான்காம் குறுக்குத் தெருவில் கரீம் ஜீ ஜபர் ஜீ என்பவருக்காக 'மஸ்ஜிதே கரீம்' பள்ளிவாசலை அவர் கட்டிக் கொண்டிருந்தார். எனவே, அவர் ஜபர் ஜீ அவர்களை அணுகி விடுத்த வேண்டுகோளுக் கிணங்க ஜபர் ஜீ அவர்களும் முஸ் லிம்களின் கல்வி நலனுக்காக மரதானைப் பள்ளிவாசல் வள வில் மேலதிக கட்டடமொன்றுக்காக நிதியுதவி அளித்தார்.

குப்பியாவத்தை மையவாடி முஸ்லிம்களுக்குக் கையளிக் கப்பட்ட போது (1879, 8, 18 ஆம் தேதிய முடிக்குரிய கொடை 3325), அன்றிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அம் மையவாடியைச் சுற்றி மதில் கட்ட வேண்டுமென அரசாங் கம் ஒரு நிபந்தனை விதித்திருந்தது. ''போரா'' இனத்தினருக் காக அம் மையவாடியில் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ள கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்கள் வாப்பிச்சி மரிக்கார் அவர்களை அணுகினர். ''முஸல்மான் ஐக்கிய பேரவை''யிடம் அப் போது போதிய நிதி இருக்கவில்லை. வாப்பிச்சி மரிக்கார் அவர்களும் ''போரா'' இனத்துக்கென அந்நிலத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி, அதற்குப் பகரமாக அவர்களைக் கொண்டு மையவாடியைச் சுற்றி மதில் கட்டுவித்தார்.

கொழும்பு கெட்டவலமுல்லையில் வதிந்த முஸ்லிம் களுக்கு பள்ளிவாசலொன்றின் அவசியம் உணரப்பட்ட போது அவர்கள் வாப்பிச்சி மரிக்காரை அணுகினர். அவர் டெப் என்பாரிடமிருந்து கிளிப்டன் ஒழுங்கையில்

ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அதைப் பள்ளிவாசலாக மாற்றினார். அதற்கு எதிர்ப்புறத்தில் வாழ்ந்த ஏ. எல். எம். மீரலெப்பை மரிக்கார் என்பாரை அப் பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமித்தார்.

மரதானைப் பள்ளிவாசல் வளவில் கட்டப்பட்ட பாடசாலை வேலை முடிவடைந்ததும் மத்ரஸத்துல் ஸாஹிரா இயங்க ஆரம்பித்தது. அதன் பராபரிப்புக்காகக் கட்டப் பட்ட வீடுகள் 1906 இல் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டன. பின்னர், அரசாங்கத்தால் கிடைக்கப்பெற்ற நஷ்ட ஈட்டைக் கொண்டு இப்போதைய ரீ. பி. ஜாயா வீதியான டார்லி வீதியில் வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் பல வரிசை வீடுகளைக் கட்டினார்.

கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகத்தின் முகாமையாளரும் பொருளாளருமாக வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் இருந்தார். 1907 இல் அட்வகேட் அப்துல் காதர் அவர்கள் கொழும்பில் தொழிற் பயிற்சி செய்து கொண்டிருந்த சமயம், வாப்பிச்சி மரிக்கார் அவர்களை முகாமைப் பளுவில் இருந்து விடுவிக்க எண்ணிய கல்விக் கழகம், அப்துல் காதர் அவர்களை ஸாஹிராக் கல்லூரியின் முகாமையாளராக நியமித்தது. சில மாதங்களுக்குப் பின் அவர் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குத் தமது வதிவிடத்தை மாற்றிக் கொண்டதால் அப்பதவியிலிருந்து நீங்க நேரிட்டது.

1907 இல் கொழும்புச் சோனக மக்களால் வாப்பிச்சி மரிக்கார் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாழ்த்துரை வருமாறு:

"அரசி மரிக்கார் வாப்பிச்சி மரிக்கார் அவர்கள்
கொழும்பு முகம்மதிய ஆண்கள் மரதானைப்
பாடசாலையின் முன்னைய முகாமையாளர்
(மத்ரஸத்துல் ஸாஹிரா)

ஐய,

கடந்த பதினான்கு ஆண்டு காலமாக முகம்மதிய ஆண்கள் மரதானைப் பாடசாலையை ஆர்வத்துடனும் சுறுசுறுப்

புடனும் பரிபாலித்ததன் மூலம் தாங்கள் ஆற்றிய சேவைக்காக எங்கள் மனமார்ந்த பாராட்டுதலைச் சமர்ப் பிப்பதில் கொழும்பு முஸ்லிம் கல்விக் கழக உறுப்பினர் களாகிய யாம் மகிழ்ச்சியடைகிறோம். அத்துடன், மேற் சொன்ன முகாமைப் பதவியிலிருந்து தாங்கள் இளைப் பாறும் இச் சந்தர்ப்பத்தில், தங்களின் இக் கைங்கரியத் திற்காகவும் இந்நாட்டின் முகம்மதிய இளைஞர்களுக்கு மதக் கல்வியையும் லோகாயதக் கல்வியையும் அளிக்கும் பொருட்டு மேற்சொன்ன பாடசாலையை நிறுவுவான் வேண்டி தாங்கள் தாராளமாக உவந்தளித்த பண உத விக்காகவும் எங்கள் சார்பிலும் கொழும்பு முகம்மதிய சமூகத்தின் சார்பிலும் எமது உளங்கனிந்த நன்றியறி தலையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், அதன் பராமரிப்புக்காகத் தாங்கள் அளித்த தாராள அறக் கொடைக்காகவும் மேற்சொன்ன கல்வி நிலையத்தின் கருமங்களை இதுகாலவரை யாம் சீர்படுத்தவும் கொண்டு நடாத்தவும் உதவிய தங்களது உற்சாகமான ஒத்துழைப் புக்காகவும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரி வித்துக் கொள்ளுகின்றோம். இக்கழகத்தின் உறுப்பின ரும் பொருளாளரும் என்ற முறையில் எதிர்காலத்தில் அலுவல்களை நடாத்த எங்களுடன் இணைந்து நீண்ட காலம் ஒத்துழைக்க சரீர சுகமும் வலிமையும் தாங்கள் பெறுவீர்கள் என யாம் நம்புவதோடு, உங்கள் முயற்சி யினால் இப்பொழுது கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மத்ரஸாப் புதிய இறகின் மேன்மாடியில் (இஃது எதிர் காலத்தில் முஸ்லிம் வாசிக சாலை அல்லது நூனிலைய மாகவும் சொற்பொழிவு மண்டபமாகவும் இருக்கும்) பாரியதான தங்கள் புகைப்படமொன்றைத் தங்கள் அற ஆர்வச் செயல்களின் நினைவுச் சின்னமாக வைக்க வும் யாம் தீர்மானித்துள்ளோம்.

இறுதியாக, எல்லாம் வல்ல அள்ளாஹ் தங்களுக்கு நீண்ட ஆயுளையும் சிறந்த உடனலத்தையும் சந்துஷ்டியையும் செல்வ வளத்தையும் தந்தருள்வாளுக எனப் பிரார்த்திக்கின்ருேம்.

தங்கள் அன்பாதரவுள்ள,
காஸிம் லெப்பை செய்கு அப்துல் காதர் மரிக்கார்,
(தலைவர், கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகம்)

1. முகம்மது இஸ்மாயில் அப்துல் ரஹ்மான் முதலியார்
2. எம். அப்துல் காதர், அட்வகேட், யாழ்ப்பாணம்
3. கொலந்தர் மரிக்கார் மீரா லெப்பை மரிக்கார்
4. ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் அப்துல் அஸீஸ்
5. சுலைமான் லெப்பை நூஹு லெப்பை
6. இஸ்மாயில் லெப்பை மரிக்கார் முகம்மது யூஸுப் ஆலிம்
7. உதுமா லெப்பை மரிக்கார் அகமது லெப்பை மரிக்கார் ஆலிம்
8. வாப்பூ மரிக்கார் அப்துல் ஜப்பார்
9. அஸனு லெப்பை மஹூல்லம் சேகு லெப்பை
10. அபூபக்கர் லெப்பை மரிக்கார் உதுமா லெப்பை மரிக்கார்."

மரதானைப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் இறந்தபோது, அவர் தமது இறுதி நாட்களில் கொழும்புக் கோட்டையிலுள்ள அப் பள்ளிவாசலின் ஒரு சொத்தை அவருடைய மருமகனுக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தது தெரிய வந்தது. அதற்குக் காரணம், அவரது கூற்றுப்படி பள்ளிவாசல் அவருக்கு ஐநூறு ரூபா கடன்பட்டிருந்ததாகும். வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் அந்தத் தொகையைச் செலுத்தி குத்தகை ஒப்பந்தத்தை விடுவித்தார்.

வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் தாம் பாடசாலைக்காகக் கட்டிய முதற் கட்டடத்துக்கு ஒரு விஸ்தரிப்பாக தமது செலவில் 1909 இல் ஒரு மேன்மாடிக் கட்டடத்தைக் கட்டி

ளூர். கல்விக் கழகத்தின் ஒரு பிரிவினர் 12,750 ரூபாவைத் திரட்டி இப்போதைய நிவ் ஒலிம்பியாப் படமாளிகையின் பக்கத்தில் அமைந்துள்ள வீடுகளைக் கட்டும் பொருட்டு அத் தொகையை வாப்பிச்சி மரிக்கார் அவர்களிடம் ஒப் படைத்தனர். கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகத்தின் செயல்திறன் நீண்டகாலம் நீடிக்கவில்லை. வாப்பிச்சி மரிக் கார் அவர்கள் அக் கழகத்தின் ஏக உறுப்பினராக இருந்து ஸாஹிராக் கல்லூரியைத் தனியாகத் தமது செலவில் பரி பரிபாலிப்பவரானூர். அவ்வப்போது முஸ்லிம் பெருங்குடி மக் களிற் சிலர் நிதியுதவி அளித்து வந்தனர்.

டார்லி வீதியில் அமைந்திருந்த கட்டடங்களின் வாட கையிலிருந்து கிடைக்கும் வருமானம் ஸாஹிராக் கல்லூரி யின் பாரமரிப்புக்குப் போதாதெனக் கண்ட வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் வெள்ளவத்தையிலிருந்த தமது சொத் துக்களின் வருமானத்தை அதற்காக உவந்தளித்தார். 1921 அளவில், முகாமையாளர் என்ற வகையில் ஸாஹிராக் கல் லூரியின் அலுவல்களை நடாத்த அவரால் நாள்தோறும் செல்ல முடியவில்லை. அவரது உடல் வலு குன்றியிருந்தது. எனவே, அவர் அப்போது செயலற்றுப் போயிருந்த கொழும்பு கல்விக் கழகத்தின் உறுப்பினர் இருவரை அழைத்து ஸாஹிராக் கல்லூரியின் நிர்வாக நிலையை விளக்கினூர். பின்னர் அவர் அக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை மரதானைப் பள்ளிவாசலிடம் ஒப்படைத்தார்.

வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் பயபக்தி நிறைந்த ஒரு முஸ்லிமாவார். அவர் பள்ளிவாசல்களுக்கு உதவினூர். அவற்றை நிர்மாணித்தார். மார்க்க அறக் கொடைகளுக்கு வாரி வழங்கும் வள்ளலாக விளங்கினூர். அவர் வியாங் கொடை கஹட்டோவிட்டவில் அடங்கியிருக்கும் செய்கு அப்துள்ளாஹ் இப்னு உமர் பாத்தீப் அல் யமனி அவர் களின் முரீதாவார்.

''உமது சட்டையைத் துணிக்கேற்ப வெட்டிக்கொள்.'' இதுதான் வாப்பிச்சி மரிக்கார் அவர்களின் பொன்மொழி. 1925 மே 14 ஆம் தேதி தமது மிக முதிர்ந்த வயதான 96 ஆவது வயதில் அவர் இறையடி சேர்ந்தார். கௌரவ டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான் அவர்கள் அவரின் ஒரே மகனூவார்.

## ஏ. எம். சரீபு


கிழக்கு மாகாணம் முஸ்லிம் பெருங்குடி மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். அம் மக்கள் அறபு மொழி பயில்வதையே அன்று "இல்ம்" எனக் கருதினர். அவர்களது தாய்மொழி தமிழ். எனவே, அங்கு ஆங்கிலம் கற்றவர்கள் ஒருசிலரே இருந்தனர். அவர்களில் காத்தான் குடியைச் சேர்ந்த ஏ. எம். சரீபு அவர்களும் ஒருவராவார். அறபு, தமிழ் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற அவர் ஆங்கில மொழியையும் நன்கு கற்று நீதிமன்றப் புரக்டராகத் திகழ்ந்தார்.

1890 இல் கொழும்பில் முஸ்லிம் வழக்கறிஞர்களின் தேவை உணரப்பட்டது. எனவே, கொழும்பில் வந்து குடியேறுமாறு சரீபு அவர்கள் வேண்டப்பட்டார். அவரும் அவ் வேண்டுகோளை ஏற்று கொழும்பில் குடியேறினார். 1899 இல் சட்டவாக்க சபையில் முகம்மதிய ஆசனம் காலியானது. அச்சமயம் மலாயரான இஸட். எச். மந்தாரா அவர்கள் ஒரு புரக்டராகவும் பி. டபிள்யு பாவா அவர்கள் ஓர் அட்வகேட்டாகவும் தொழில்புரிந்து வந்தனர். முஸ்லிம்கள் மூன்று பிரிவினராகப் பிரிந்து மேற்கூறிய மூவரையும் சட்டவாக்கசபை ஆசனத்துக்காக ஆதரித்தனர். பி. டபிள்யு. பாவா அவர்கள் காலியைச் சேர்ந்த அகமது பாவாவின் மகனாவார். அகமது பாவா அவர்கள் கேகாலை, வதுளை நீதி மன்றங்களில் புரக்டராகத் தொழில் நாடாத்தி வந்தார். அவர் சோனகரின் விவாக வழக்கங்கள் பற்றி அரச ஆசிய கழக வெளியீட்டுக்கு ஆய்வுக் கட்டுரையொன்றை அனுப்பிவைத்தார். அதிலே அவர், "மணமகன் மணவறைக்கு அழைத்துச் செல்லப்படும் வரை எப்படிப் பட்டவளை மணக்கப் போகிறோம் என்று சோனகர் அறியார் என்றும் அவர்களிடையே காதல் திருமணம் என்பது இல்லையென்றும்" குறிப்பிட்டார்.

பி. டபிள்யு. பாவா அவர்களின் தாயார் ஓர் ஐரோப்பிய மாதுவாகும். எனவே, பி. டபிள்யு. பாவாவுக்கு சட்டவாக்கசபை முகம்மதிய ஆசனத்துக்காக முழு ஆதரவு கிடைக்கவில்லை. இலட்: எச். மந்தாரா அவர்களுக்கு எதிராக எழுப்பப்பட்ட வாதம் யாதெனில், அவர் அப்போதுதான் முன்னேறி வரும் ஓர் இளம் புரக்டர் என்பதும் அத்துடன் மிகவும் சிறுபான்மை இனமான மலாய் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதுமாகும். ஏ. எச். சரீப் அவர்களோ தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்ததோடு அவரது அறபு மொழி அறிவும் அறபு தெரிந்த ஆலிம்களினதைவிட தரத்தில் அதிகம் உயர்ந்திருந்தது. அவர் பலவிதத்திலும் அறிஞர் சித்திலெப்பை அவர்களுக்கு இணையாக இருந்தார். முற்கால பிரபல முஸ்லிம் மத அறிஞர்களினதும் முஸ்லிம் சட்ட வல்லுநர்களினதும் அறபு நூல்களை அவர் வாசித்திருந்தார். கெய்ரோ, பஞ்சாப்பிலுள்ள காதியான் ஆகிய இடங்களிலிருந்து வந்த வெளியீடுகளோடு அவருக்குத் தொடர்பிருந்து வந்தது. கொழும்பு பழைய சோனகத் தெருவிலிருந்த் செய்கு அப்துல் காதிர் (பகலா சாகிப்) அவர்களுடைய இல்லத்தில் அவர் மார்க்க வகுப்புக்களை நடாத்தி வந்தார். சட்டவாக்க சபையில் காலியான முகம்மதிய ஆசனத்துக்கு சரீபு அவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாக இருந்தது. எனவே, அரசாங்கம் அவரை நியமித்தது.

கொழும்பு பணக்கார முஸ்லிம் சமூகம் அவருக்கு கிராண்ட்பாஸில் ஒரு பெரும் இல்லத்தையும் சட்டவாக்க சபைக் கூட்டங்களுக்கும் வேறு உத்தியோகபூர்வ அலுவல்களுக்கும் செல்வதன் பொருட்டு இரு குதிரைகள்—சில சமயங்களில் நான்கு குதிரைகள்-இழுத்துச் செல்லகூடிய ஒரு வண்டியையும் ஏற்பாடு செய்து கொடுத்தனர். மோசமான தேகநிலை காரணமாக அவர் கொழும்பிலிருந்த அலுவல்களை விட்டுவிட்டு 1900 இல் மட்டக்களப்புக்குத் திரும்பினார்.

# எம். எல். எம். ஸெய்னுதீன் ஹாஜியார்



புறக்கோட்டையில் பிரபல வியாபாரியாக விளங்கிய ஐ. எல். முகம்மது லெப்பை என்பாரின் மைந்தரே ஸெய்னுதீன் ஆவார். கிராண்ட்பாஸில் வாழ்ந்த அவர் ஆங்கிலக் கல்வியை வெஸ்லி கல்லூரியில் பெற்றார். அவரும் அவரின் சகோதரரான இஸ்மாயில் என்பாரும் அவர்களின் தந்தையின் வாணிக நிலையத்தில் சேர்ந்து வியாபாரம் நடத்தினர். அவர்களின் தந்தை அப்போது தரகு வணிகராகவும் பொது வர்த்தகராகவும் விளங்கினார். 1880 இல் அவரது விற்பனைப் பொருட்காட்சி அறைகள் புறக்கோட்டைப் பிரதான வீதியிலிருந்த ஹமீதியாக் கட்டடத்தில் இருந்தன.

1883 இல் எஸ். டீ. இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆலிம் (பின்னர் ஹாஜி இஸ்மாயில் எபெண்டி என அழைக்கப்பட்டார்) என்பாரின் தலைமையில் ஸெய்னுதீன் அவர்களும் வேறு சில முஸ்லிம்களும் முஸ்லிம் நாடுகளுக்கு விஜயம் செய்தனர். அப்போது எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தவர்களான அறபி பாஷாவினதும் அவரின் தோழர்களினதும் மனுவொன்றை ''கதீவே''வுக்கு அவர்கள் எடுத்துச் சென்றனர்.

ஸெய்னுதீன் அவர்களும் குழுவும் எகிப்தில் பரவலாகப் பயணம் செய்து ஹஜ்ஜுக்காக மக்காவுக்குச் செல்ல முன்னர் கொன்ஸ்தாந்திநோபிளுக்குச் சென்றனர். செய்னுதீன் அவர்கள் இலங்கை திரும்பியதும் அவர் ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தாம் அறிமுகம் செய்துகொண்ட வியாபார நிறுவனங்களுக்கு இலங்கையின் விளைபொருட்களான கொக்கோவா, சோளம், தேங்காய் போன்றவற்றோடு தோல், தும்பு, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றையும் பெருமளவில் ஏற்றுமதி செய்தார்.

*1900* இல் அவர் கொழும்பு மாநகர சபைக்குப் புறக்கோட்டை வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். *1900* ஒக்ரோபர் *10*ஆம் தேதிய "லிவர்பூல் கிரசண்ட்" எனும் பதிப்பில் வெளியான இத்தேர்தல் பற்றிய விவரம் வருமாறு:

"சென்ற ஓகஸ்ட் 24ஆம் தேதி சனிக்கிழமை புறக்கோட்டை வட்டாரத்துக்கு நகர உறுப்பினர் ஒருவரின் தேர்வு நகர மண்டபத்தில் நடைபெற்றது.முதலில் தேர்தற் களத்தில் இரு அபேட்சகர்கள் இருந்தனர். ஜனுப் ஸெய்னுதீனும் திரு. ஜோன் க்ளோவிஸ் டி சில்வாவுமே அவர்களாவர்.பின்னவர் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்.குறித்த நேரமான மு.ப.8.00 மணிக்கு தேர்தல் நடந்தது. பதில் மேயரும் தலைவருமான திரு. ஹேபட் வைட் தலைமை தாங்கினர். அத்துடன் அவ் வட்டாரத்தைச் சேர்ந்த சில முஸ்லிம், சிங்கள குடியிருப்பாளர்களும் அங்கிருந்தனர்.

புறக்கோட்டை வட்டாரத்துக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட ஜனுப் எம். எல். எம். ஸெய்னுதீன் தகுதியானவரும் உகந்தவருமென, கோட்டை பிரபல வர்த்தகரான திரு. சீ. பீ. புரோடி மரபு முறையாகப் பிரேரித்தது கொண்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. ஜனுப் ஐ. எல். எம். இஸ்மாயில் மரிக்கார் அப் பிரேரணையை அனுவதித்தார். அதன்

பின்னர் மாநகரசபை உறுப்பினரான திரு. பீ. பீ டயஸ், அபேட்சகருக்குச் சார்பாக 850 பெயர்களைக் கையளித்தார். தலைவர் அந்தப் பட்டியலை ஆராய்ந்த தன் பின்னர் ஜனாப் ஸெய்னுதீன், புறக்கோட்டை வட்டாரத்துக்கான மாநகர சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளதாகப் பிரகடனப்படுத்தினார். ஜனாப் ஸெய்னுதீன், சுருக்கமாக நன்றி தெரிவித்துவிட்டு, தலைவருக்கு ஒரு நன்றியுரையையும் வழங்கினார். தலைவரும் சுருக்கமாக அதற்குப் பதில் நன்றியுரை வழங்கினார். சனிக்கிழமை முழுவதும் ஜனாப் ஸெய்னுதீன் அவரின் இல்லத்துக்கு அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்க வந்த பெருந் தொகையான நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் சிற்றுண்டி வழங்கினார்.''

இலங்கை வாழ் முஸ்லிம்கள், மற்றும் உலக முஸ்லிம்களுடன் சுல்தான் அப்துல் ஹமீத் கானின் வெள்ளிவிழாவைப் பள்ளிவாசல்களையும் இல்லங்களையும் மின் விளக்குகளாலும் மற்றும் அலங்காரங்களாலும் அலங்கரிப்பது கொண்டு விமரிசையாகக் கொண்டாடினர். இது நடந்தது ஸெய்னுதீன் அவர்கள் மாநகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட நாளுக்கு முதல் நாளாகும். ஸெய்னுதீன் அவர்களின் இல்லத்துக்கு அருகே இருந்த முஸ்லிம்கள் இந்த அலங்காரங்களைத் திருப்பிச் செய்வது கொண்டு அவரது வெற்றியைக் கொண்டாடினர்.

ஸெய்னுதீன் அவர்கள் புறக்கோட்டை வட்டாரத்துக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டு 1907 வரை உறுப்பினராகச் சேவை புரிந்தார். அவரது வாழ்க்கை வரலாறு 1907 இல் பதிப்பிக்கப்பட்ட ''இம்ப்ரஷன் ஒப் சிலோனில்'' வெளியிடப்பட்டது.

# ஐ. எல். எம். நூர்தீன் ஹாஜியார்

நூர்தீன் ஹாஜியார் அவர்கள் யூசுப் லெப்பை ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் ஹாஜியார் அவர்களின் மகனாவார். ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் ஹாஜியார் வர்த்தகரும் நிலச்சுவாந்தாருமாவார். அவர் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்ததோடு புறக்கோட்டையில் ஒரு பெறுமதி மிக்க நிலத்தை அப் பள்ளிவாசலுக்காக அன்பளிப்புச் செய்தார்.

அவரின் ஆண்வழி மூதாதையர் வருமாறு: யூசுப் லெப்பை (ஜெம்மி), உதுமா லெப்பை, ஐதுரூஸ் லெப்பை, இஸ்மாயில் லெப்பை. அவரின் மூதாதையர் வெலிகாமத்திலிருந்து கொழும்புக்குக் குடிபெயர்ந்து வந்தவர்களாவர். யூசுப் லெப்பை அவர்களுக்கு நான்கு ஆண் மக்களும் ஒரு பெண் மகவும் இருந்தனர். அவர்களாவோர்: ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் ஹாஜி, முகம்மது லெப்பை மரிக்கார் ஹாஜி, சின்ன லெப்பை மரிக்கார் ஹாஜி, மரிக்கார் ஹாஜி, திருமதி வாப்பு மரிக்கார் ஹாஜி.

ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் ஹாஜியாருக்கு அவரின் முதல் மனைவியான பாத்துமுத்து நாச்சியா மூலமாக இரு ஆண்மக்களும் ஒரு பெண் மகவும் பிறந்தனர். நூர்தீன் ஹாஜியார்(சாப்பு வாப்பா),முஹ்யித்தீன் ஹாஜியார்,ஸாலிஹா என்போரே அவர்கள். அவரது இரண்டாவது விவாகம் எஸ். எம். அஸனா நாச்சியா என்பவருடன் நிகழ்ந்தது. அவர் மூலமாக அவருக்கு ஆண்மக்கள் நால்வரும் பெண் மக்கள் இருவரும் கிடைத்தனர். அவர்களாவோர்: ஸாலிமான் லெப்பை ஹாஜி, யூசுப், அப்துல் ரஹ்மான், அப்துல் ஹமீது, அம்ஸா, ஸபியா.

1900 இல் ஐ. எல். எம். நூர்தீன் ஹாஜியார் அவர்கள் அவரின் தந்தைக்குப் பின் பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராக ஆனார். அவர் ஹல்ஸ்டோபில்

ஒரு நிலத்தைப் பள்ளிவாசலுக்கு அன்பளிப்புச் செய்தார். அவர் அவரது சொந்தச் செலவில் பெரிய பள்ளிவாசல் வளவில் ஹமீதியாப் பாடசாலைக் கட்டடத்தைக் கட்டி அதற்குத் துருக்கி சுல்தானுன சுல்தான் அப்துல் ஹமீதின் பெயரை இட்டார். துருக்கித் தொப்பி போராட்டக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராவார். முதலாவது உலக மகாயுத்த காலத்தில் (1914-18) அவர் டரற் வீதியில் அவர்தம் மருமகனுன எஸ். எல். நெய்னு மரிக்கார் ஹாஜியாரின் இல்லமான ''மூயிர்பார்னில்'' வாழ்ந்து வந்தார். அப்போதெல்லாம் அவர் தமது அலுவலக அறையில் தொங்கவிடப் பட்டிருந்த ஐரோப்ப – ஆசிய வரைபடத்தில், யுத்த களத்தில் துருக்கியின் வெற்றி தோல்விகளைக் குறித்து வருவார். நூர்தீன் ஹாஜியார் அவர்களுக்கு யூனுனி வைத்திய அறிவு ஓரளவிருந்தது. அவ் வைத்திய முறையை அவர் தம் குடும்பத்தாரிற் கையாண்டு வந்தார். செவ்வரித்தைப் பூவால் அவர் வடித்த ஒருவகைக் குடிநீர் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக இருந்தது. அது குழந்தைகளுக்கு அடிக்கடி கொடுக்கப்பட்டது.

நூர்தீன் ஹாஜியார் அவர்கள் கோட்டாறைச் சேர்ந்த காதிரிய்யா செய்கு அவர்களின் சிறந்த ஒரு முரீதாவார். அவர் மார்க்க விடயத்தில் அவரின் மக்களுடனும் பேரப் பிள்ளைகளுடனும் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொண்டார். அவர்கள் குர்ஆன் ஓதுவதில் மிகவும் சிறந்தவர்களாக விளங்கினர். அவரின் மூத்த மகன் எச். என். எச். ஜலாலுத்தீன் ஹாஜியார் அவர்கள் ''ஹாபிழ்'' களான (திருக்குர்ஆனை மனனம் செய்தோர்) இலங்கைச் சோனகர் ஒருசிலரில் ஒருவராவார். அவர் அவரின் தந்தையான நூர்தீன் ஹாஜியார் அவர்களுடன் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றச் சென்ற சமயம் புனித மதீனுவைத் தரிசித்து அங்கு மஸ்ஜிதுந் நபவியில் பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கண்மையில் நின்றவாறு ஒரே மூச்சில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனமாக ஓதி முடிக்கும் அரிய பேற்றைப் பெற்றார். ஜலாலுத்தீன ஹாஜியார்

அவர்கள் ஹாஜி முகம்மது மாக்கன் மாக்கர் எபெண்டி அவர்களின் அத்தியந்த நண்பராய் விளங்கியதோடு, தமது சுகயீனத்தையும் கருதாது 1924 இல் சட்டவாக்க சபைக்கு அகில இலங்கை முஸ்லிம் ஆசனத்துக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட மும்முரமாகப் பாடுபட்டார்.

நூர்தீன் ஹாஜியார் அவர்களின் மூத்த மகளான ஸொஹரா உம்மா, எஸ். எல். நெய்னுமரிக்கார் ஹாஜியாரை மணந்ததோடு இளைய மகளான உம்மு நபீஸா, என். டீ. எச். அப்துல் கபூர் ஹாஜியாரை மணந்தார். மற்ற ஒரு மகளான உம்மு ஸுலைஹா, ஐ. எல். எம். அப்துல் காதரை மணந்தார். அவரின் இளைய மகனான முஹ்யித்தீன் என்பவர் பீ. ரீ. மீராலெப்பை அவர்களின் மகளான ஹஸனு உம்மாவை மணந்தார்.

நூர்தீன் ஹாஜியார் அவர்கள் அவரது மரணத் தறுவாயை அறிந்திருந்தார். அவர் வுழூச் செய்து இரு ரக்அத்துக்கள் தொழுதுவிட்டு கஃபாவை முன்னோக்கித் தமது கட்டிலில் படுத்துக் கொண்டார். ''அல்லாஹு அக்பர்'' என்று கூறி ''தக்பீர்'' கட்டியவுடன் அவரது இறுதிமூச்சு பிரிந்தது.

அவரின் சகோதரரான ஐ. எல். எம். முஹ்யியத்தீன் ஹாஜியார் அவர்களும் கொடை வள்ளலாகவும் மார்க்க பக்தி நிறைந்தவராகவும் விளங்கிய ஒருவர். வர்த்தகரான அவர் பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் விளங்கினார். அவர் சேகாதி மரிக்கார் காஸி லெப்பை மரிக்கார் முதலியார் அவர்களின் பேத்தியான ஸபியா உம்மா என்பவரை மணந்தார்.

## அகமது லெப்பை மரிக்கார்.
## ஹஸன் மீரா லெப்பை மரிக்கார்

அகமது லெப்பை மரிக்கார் ஹஸன் மீரா லெப்பை மரிக்கார் அவர்கள் அவரின் மருமகனை அகமது லெப்பை மரிக்கார் ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் அவர்களுக்கு மரதானைப் பள்ளிவாசலின் அபிவிருத்திக்காக ஒரு தொகைப் பணத்தை வழங்கிச் சென்றார். 1842 இல் அவர் மரதானைப் பள்ளிவாசலுக்காக நிலமொன்றை வாங்கவும் ஒருதொகைப் பணத்தை வழங்கினார்.

பகிரங்க நொத்தாரிசு ஜோன் டிரிபேக்ஸால் உறுதிப் படுத்தப்பட்ட 1855.11.1 ஆம் தேதிய 8545 ஆம் இலக்க உறுதி மூலம் (புதிய சோனகத் தெரு மையவாடியை விசாலிப்பதற்காக) அவர் உமர் லெப்பை மரிக்கார் உதுமா லெப்பை மரிக்கார் என்பாரின் பின்வளவை 130 பவுனுக்கு வாங்கினார். அதில் 73 பவுனை அவர் தம்கணக்கில் செலுத்தினார். மிச்சப் பணம் ஜமாத்அத்தாரால் சேகரிக்கப்பட்டது.

## மீரா லெப்பை மரிக்கார்
## முகம்மது உதுமா நெய்னா மரிக்கார்

மீரா லெப்பை மரிக்கார் முகம்மது உதுமா நெய்னா மரிக்கார் 1870 இல் முஸல்மான் ஐக்கிய பேரவையின் செயலாளராக இருந்தார். ஏறக்குறைய அந்த ஆண்டிலேயே அந்தப் பேரவை, வைத்திய சாலையில் மரணமடையும் முஸ்லிம்களின் சடங்களை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்ய ஒரு மதகுருவுக்குக் கொடுக்க அரசாங்கத்துடன் ஏற்பாடு செய்தது.

குப்பியாவத்தையில் முஸ்லிம்களுக்கென ஒரு மையவாடியைப் பெற இப் பேரவையின் செயலாளர் என்ற முறையில் நெய்னா மரிக்கார் அவர்கள் அரசாங்கத்துடன் ஏற்பாடு செய்தார். அம் மையவாடியின் ஆரம்ப நம்பிக்கைப் பொறுப்பாளர் மூவரில் அவரும் ஒருவராவார்.

# கரீம் ஜீ ஜபர் ஜீ

இலங்கையில் ஷியா வகுப்பைச் சேர்ந்த பிரபல்ய முஸ்லிம்கள் இருவர் இருந்தனர். அவர்கள் 'போரா' வர்த்தகர்கள் என அழைக்கப்பட்டனர். ஒருவர் ஜபர் ஜீ என்பாரின் மகனை கரீம் ஜீ ஜபர் ஜீ ஆவார். மற்றவர் குலாம் ஹுசைன் செய்கு தையிப் ஆவார். இவ்விருவரும் உள்ளூர் முஸ்லிம்களுடன் அன்னியோன்யமாகக் கலந்துறவாடியதுடன் உதவியும் புரிந்தனர்.



மத்ரஸத்துல் ஸாஹிரா வுக்குத் தேவையான தளபாடங்களை நல்கியது கொண்டு இவ்விருவரும் வாப்பிச்சி மரிக்கார் அவர்களின் கல்வி இயக்கத்தை ஆதரித்தனர். குப்பியாவத்தை மையவாடி உள்ளூர் முஸ்லிம்களுக்காகக் கொடுக்கப்பட்ட பொழுது மூன்று வருடங்களுக்குள் முழு மையவாடியையும் சுற்றி மதில் அமைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையும் இருந்தது. ஷியா வகுப்பினருக்காக அம் மையவாடியில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டு இவ்விருவரும் தங்கள் செலவில் அம் மையவாடியைச் சுற்றிமதிலெழுப்பிக்கொடுத்தனர். ஸாஹிராப் பாடசாலையின் பராமரிப்புக்காக 1906 இல் வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் கட்டிய வீடுகளில் ஒன்றின் செலவை கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்கள் வழங்கினர். அவர் கொழும்பு நான்காம் குறுக்குத் தெரு

வில் கட்டடமொன்றையும் நிலத்தையும் "மஸ்ஜிதே கரீம்" என அழைக்கப்படும் ஷியாப் பள்ளிவாசலுக்காக அன்பளிப்புச் செய்தார். ஆட்டுப்பட்டித் தெருவில் வதிந்த சோனகரின் அறபு, தமிழ், ஆங்கிலக் கல்விக்காக அவர் "செய்மா பாயிஸ்" பாடசாலையை ஆரம்பித்தார்.

1900 இல் முழு முஸ்லிம் உலகமும் துருக்கி சுல்தான் அப்துல் ஹமீது கானின் வெள்ளி விழாவைக் கொண்டாடிய பொழுது கரீம் ஜீ அவர்களும் அதிற் பங்கு கொண்டார். அவருக்கு இந்தியாவிலும் ஆபிரிக்காவிலும் மாலைத்தீவிலும் பரவலான வியாபாரம் இருந்ததோடு பலவகையான பொருட்களும் அங்கு விற்கப்பட்டன.

இலங்கையில் 'போரக்'களை ஒரு முக்கிய ஸ்தானத்துக்கு கொண்டு வந்தவர் கரீம் ஜீ ஜபர் ஜீ எனக் கூறலாம். அவர் விளைத்த பயிரின் பலனை இன்று 'போரா'க்கள் அனுபவிக்கின்றனர் என்று சொல்ல வேண்டும்.

1895 ஜனவரியில், முஸ்லிம் பெண்களினதும் பிள்ளைகளினதும் உபயோகத்துக்கென ஒவ்வொன்றும் ஆறு கட்டில்களைக் கொண்ட இரண்டு "வோட்கள்" லேடி றிட்ஜ்வே வைத்தியசாலைக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவற்றிலொன்று கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்களால் அவர்தம் காலஞ்சென்ற பாரியாரின் ஞாபகார்த்தமாக கட்டிக் கொடுக்கப்பட்டது. மற்றது முஸ்லிம் பொதுமக்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது.

எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்த அறபி பாஷாவும் அவரது குடும்பமும் அவர்கள் மீண்டும் எகிப்துக்குச் செல்லமுன் கடைசி சில வாரங்களைக் கரீம் ஜீ ஜபர்ஜீ அவர்

களின் இல்லமான "ஈஸா விலா"விலேயே கழித்தனர். அங்கிருந்துதான் அறபி பாஷா 1901 செப்ரெம்பர் 18 ஆம் நாள் எகிப்துக்குப் பயணமானார்.

1905 இல் துருக்கித் தொப்பி விவகாரம் உள்ளூர் முஸ்லிம்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்த பொழுது கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்கள் அவரின் நண்பரான பம்பாயில் பாரிஸ்டராகத் தொழில் புரிந்து கொண்டிருந்த மௌலவி ரபீயுத்தீன் அகமது அவர்களை முஸ்லிம்கள் கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரையாற்ற வரவழைத்தார். ஜனாப் அப்துல் காதர் அவ கள் துருக்கித் தொப்பி அணிந்து உயர் நீதி மன்றத்தில் ஆஜ ராவதைத் தடுத்ததை எதிர்த்து அந்தப் பொதுக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அக் கூட்டத்தில் கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்களைப் பற்றி மௌலவி ரபீயுத்தீன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இங்கு வரவேண்டுமென்ற உங்கள் அழைப்பை நான் முதலில் பெற்றதும் அதனை ஏற்றுக் கொள்வதில் சிறிது தயக்கம் காட்டினேன் என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில், அலிகாரில் இந்திய முகம்மதிய ரின் வருடாந்த தேசிய சம்மேளனத்தில் உரையாற்று வதற்காக நான் அங்கு சமுகமளிக்க வேண்டிய ஓர் உடன்பாடு ஏற்கெனவே இருந்தது. ஆனால், பம்பா யில் எங்கள் மத்தியில் எவ்வளவு பிரபல்யமாயிருந் தாரோ அவ்வளவு பிரபல்யத்துடன் உங்கள் மத்தியில் விளங்கும் என் சிறந்த நண்பர் கரீம் ஜீ ஜபர் ஜீ அவர் களிடமிருந்து வலுக்கட்டாயப்படுத்தும் ஒரு தந்தி கிடைத்ததும் உங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானிப்பதற்கு எனக்கு அதிக நேரம்

செல்லவில்லை. ஏனெனில், அவ்விதம் செய்ய என்னைத் தூண்டிய இரண்டு பிரதான வலுவான இணைப்புக்கள் இருந்தன. முதலாவது இணைப்பு யாதெனில், இஸ்லாமிய சகோதரத்துவமாகும். அது இந்த உலகம் என்றும் காணாத அதி உன்னத சகோதரத்துவமாகும். நாம் நிலத்தாலோ, நீராலோ எவ்வளவுதான் பிரிக்கப் பட்டிருந்தாலும் எமது பரஸ்பர நேசத் தொடர்புக்காகவும் சகோதர உணர்ச்சிக்காகவும் எல்லாத் தேசிய வரலாறுகளிலும் நாம் பிரித்தும் காட்டப்பட்டுள்ளோம். மற்ற இனங்கள் என்னதான் நினைத்தாலும் சகோதரப் பெருமக்களே! முகம்மதியர்களாகிய நாம் முகம்மதியர்களாகப் பிறக்கவும் வாழவு ம்கிடைத்ததானது இவ்வுலகில் நாம் பெற்ற மாபெரும் அருட் பாக்கியம் என்றே நம்புகிறோம். அது மாத்திரமல்ல. எமது அன்றாட வாழ்வில் நாம் உணவு கொள்ளும் எல்லாச் சமயத்திலும் எவ்விதம் நாம் எங்கள் ரட்சகனுக்கு நன்றி செலுத்துகிறோம்? எம் நாளாந்த உணவைத் தந்ததற்காகவும் எங்களை முகம்மதியர்களாக ஆக்கி, முகம்மதியர்களாகவே வாழச் செய்ததற்காகவும் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம் அல்லவா?"

கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்கள் உண்மையிலே ஒரு பெரிய மனிதர். ஒரு வர்த்தக அரசன் என்ற முறையில் அவர் பெரிதும் கௌரவிக்கப்பட்டது மாத்திரமல்ல; அவரது சிறந்த மனமொத்த செயல்களுக்காகவும் அவர் பெரிதும் நேசிக்கப் பட்டார். இலங்கை மக்கள் அவரது நாமத்தைக் கௌரவிப்பதுடன் அவரது ஞாபகார்த்தத்தையும் மனதில் வைத்துப் பாதுகாப்பர்.

# எஸ். எல். நெய்னு மரிக்கார்

சோனகர்களில் ஒரு கூட்டம் பேருவலையிலிருந்து பாணந்துறைக்குக் குடிபெயர்ந்து கொழும்பில் வர்த்தக நிலையங்களை நிறுவியது. வியாபாரம் வளர்ந்ததும் அவர்கள் நிரந்தரமாகவே கொழும்பில் தங்கினர். இக் குடும்பங்களில் ஒருவரான சாகிப் துரை முகம்மது லெப்பை மரிக்கார் என்பவர் 1817இல் மீரா லெப்பை ஸுலைமா லெப்பை குமாஸ்த்தர் என்பாரின் மூன்றுவது மகளான அசன் கண்டு நாச்சியா என்பாரை மணந்தார். அவர்களுக்குப் பிறந்த மகனை ஸுலைமா லெப்பை என்பவருக்கு 1868 இல் ஒரு மகன் பிறந்தார். அவர் தான் நெய்னு மரிக்கார்.



நெய்னு மரிக்கார் அவர்கள் அறபுக் கல்வியை வீட்டிலும் தமிழை ஓர் இராப் பாடசாலையிலும் ஆங்கிலக் கல்வியை வெஸ்லிக் கல்லூரியிலும் பெற்ருர். அக் கல்லூரி பழைய சோனகத் தெருவில் இருந்த அவரது இல்லத்துக்கு அடுத்து இருந்தது. அன்றிருந்த வழக்கப்படி பாடசாலை இல்லாத நேரங்களில் அவர் தம் தகப்பனாரின் கடைக்குச் சென்று வியாபார முறைகளைக் கற்றுக் கொண்டார்.

1892 இல் அவரின் தகப்பனார் இறக்கவே அவர் புறக்கோட்டை பிரதான வீதியிலிருந்த தகப்பனாரின் வியாபாரத்

தைக் கொண்டு நடாத்தினர். அப்போது புதிய சோனகத் தெரு 43 ஆம் இலக்க இல்லத்தில் வசித்து வந்த அவர் 1900 இல் டரற் வீதியில் ''முயிர்பெர்ன்'' என அழைக்கப் பட்ட ஒரு விசாலமான இல்லத்தை விலைக்கு வாங்கினர். அவ் வீட்டின் விசாலமான முற்றவெளியில் அவர் ''விக்டோரியா டிரப்பரி ஸ்டோர்ஸ்'' என்ற கடையை நிறுவினர். அவர் ஓர் 'இன்டெண்டிங் ஏஜண்டாக' இருந்து ஐரோப்பாவிலிருந்து சரக்குகளை வரவழைத்து இலங்கையிலுள்ள வியாபாரிகளுக்கு விநியோகம் செய்தார். அவரது வர்த்தகக் கையிருப்பு பல இலட்சம் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டது.

தற்பொழுது கொழும்பு பேஸ்லைன் வீதியிலிருக்கும் வெஸ்லிக் கல்லூரிக் கட்டடத்தைக் கட்டுவதற்காக நெய்னு மரிக்கார் அவர்கள் நன்கொடை வழங்கினர். அக் கல்லூரி யின் பிரதான வாசலுக்கருகில் உள்ள தகட்டில் ஏனையோரின் நன்கொடையுடன் அவரின் நன்கொடையும் நன்றியுடன் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வாப்பிச்சி மரிக்கார் அவர் களின் கல்வி இயக்கத்தில் அவர் மும்முரமாக ஈடுபட்டு ஸாஹிராக் கல்லூரிக்கு உதவி வழங்கினர். அவரின் மனைவி யின் தகப்பனரான ஐ. எல். எம். எச். நூர்தீன் ஹாஜியார் அவர்கள் ஹமீதியாப் பாடசாலைக்கு உதவி வழங்கினர்.

அப்பொழுது வழக்கிலிருந்த இலங்கை முஸ்லிம்களின் விவாகங்களைப் பதிவு செய்யும் முறையானது, சீதனம் முத லியன பற்றிய பிரச்சினைகள் எழும்பொழுது சம்பந்தப் பட்டவர்களுக்கு உதவுவதாக இருக்கவில்லை. அன்று சீதனத் தொகை 'கடுத்தத்தி'லேயே பதியப்பட்டது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த கிழக்கு மாகாணத்திலே இவ்வித பூசல்களைத் தீர்த்து வைப்பது மிகவும் கஷ்டம் என அரசாங்கம் கண்டது. முஸ்லிம் விவாகப் பதிவுக் கட் டளைச் சட்டம் முஸ்லிம்கள் மீது வலுக்கட்டாயமாகப் பிர யோகிக்கப் படாமல் இருந்ததால் அரசாங்க அதிபரான திரு. லுஷிங்க்டன், 1907 இல் நெய்னு மரிக்கார் அவர் களுக்கு இதுபற்றி எழுதினர். ஏனெனில், அன்று கொழும்பு முஸ்லிம்களின் தலைவர் அவரே என்று கருதப்பட்டது.

நெய்னு மரிக்கார் அவர்கள் உலமாக்களையும் பொது மக்களையும் கொண்ட ஒரு கூட்டத்தை அவரது இல்லத்தில் கூட்டி, விவாகப் பூசல்களைத் தீர்ப்பதில் அரசாங்கத்துக்குள்ள கஷ்டங்களை விளக்கினுர். அதன் பின்னரும் பல கூட்டங்கள் கூட்டப்பட்டன. இறுதியில் முஸ்லிம்களின் விவாகங்களைப் பதிவது கட்டாயமாக்கப்படல் வேண்டுமென அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

1886 இல் முஸ்லிம் விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம் யாக்கப்பட்ட நாளிலிருந்து புதிய சோனகத் தெரு பள்ளிவாசல் ஜமாஅத்தார் அதனை எதிர்த்தே வந்தனர். எனினும், அக்கட்டளைச் சட்டம் எல்லா முஸ்லிம்கள் மீதும் கட்டாயமாக்கப்பட்டிருக்கவில்லை. அது சம்பந்தமாக நெய்னு மரிக்கார் அவர்களின் ஆலோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக எம். ஐ. முகம்மது அலீ, ஜே. பீ. அவர்களின் தலைமையில் அப் பள்ளிவாசலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தின் நிகழ்ச்சிகள் லிவர்ப்பூலில் பிரசித்தி பெற்ற முஸ்லிமான செய்கு அப்துள்ளாஹ குல்லியம் அவர்களின் "கிரசன்ட்"டில் வெளியிடப்பட்டன:

"முகம்மதிய விவாகங்களைப் பதிவு செய்தல் சம்பந்தமாகக் கலந்துரையாட 1907 ஜூலை 12 ஆம் தேதி இரவு 8 மணிக்கு புதிய சோனகத் தெரு பள்ளிவாசலில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கான் பகதூரும் பாரசீக கொன்சலும் சமாதான நீதவானுமான ஜனுப் முகம்மது இஸ்மாயில் முகம்மது அலீ தலைமை தாங்கினுர். ஜனுப் ஏ. கே. உதுமான் ஹாஜியார் செயலாளராகக் கடமையாற்றினுர். ஆலிம்களையும் முல்லாக்களையும் உள்ளடக்கிய பிரபல முகம்மதியர்களைக் கொண்டதாக அக் கூட்டம் அமைந்தது. இப்பதிவுக் கட்டளைச் சட்டம் முகம்மதிய மார்க்கத்துக்கு முரணுனதாலும் அதனுல் எதுவித பயனும் இல்லாததாலும் அது கொண்டுவரப் படக் கூடாதென அங்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அக் கூட்டம் ஏறக்குறைய ஐயாயிரம் பேரைக் கொண்டிருந்தது."

எனினும், முகம்மதிய விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்துக்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, முஸ்லிம் களின் விவாகப் பதிவு கட்டாயமாக்கப்பட்டது.

நெய்னு மரிக்கார் அவர்களின் மூதாதையர் மரதானைப் பள்ளிவாசல் ஜமாஅத்தின் உறுப்பினராக இருந்தனர். பள்ளிவாசலுக்காக 1840 இல் ஒரு சொத்தை வாங்க அவர்கள் பண உதவி வழங்கினர். நெய்னு மரிக்கார் அவர்கள் 1899 இல் மரதானைப் பள்ளிவாசலுக்காக ஒரு கட்டடத்தை—இரண்டு ஹவுல்களை-க் கட்டினார். அந்த "ஹவுல்" கள் பற்றி திரு. ஆர். எச். பஸட், சீ. சீ. எஸ். குறிப்பிடுகையில், "ஸாஹிராப் பள்ளிவாசலின் 'வுழு' எடுக்கும் இடம், அதன் வட்டவடிவமான வளை முகட்டினூடாகப் பார்க்கும் பொழுது அளவு கடந்த வனப்புடையதாக விளங்குகின்றது" என்றார்.

ஸாஹிராக் கல்லூரியின் வருமானத்துக்காக வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்பட்ட செலவான 12,750 ரூபாவில் அவர் இரண்டாயிரம் ரூபாவை வழங்கினார். வாப்பிச்சி மரிக்கார் அவர்கள் ஸாஹிராவுக்காகக் கட்டிய இரண்டாவது கட்டடத்துக்கான தளபாடங்களுக்காக அவர் 250 ரூபாவை வழங்கினார்.

மரதானைப் பள்ளிவாசல் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் என்ற வகையில் அவர் பலமுறை பொருளாளராகத் தெரிவு செய்யப் பட்டார். ஹமீதியாப் பாடசாலையைப் பரிபாலித்த ஜம்மிய்யத்துல் ஹமீதிய்யாவின் பணஉதவி புரியும் உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

ஸேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அவரது "ரயட் அன் மார்ஷல் லோ ஒப் சிலோன், 1915" (1915 இல் இலங்கையில் நடந்த கலகமும் படையாட்சிச் சட்ட

மும்) எனும் நூலில் நெய்னு மரிக்கார் அவர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:

''உதாரணமாக கொழும்பு முகம்மதியர்களில் பெரும் தனவந்தர்களில் ஒருவரான ஜனுப் எஸ் எல். நெய்னு மரிக்கார் என்னிடம் பின்வருமாறு கூறினார்: அதாவது, முகம்மதியர்களுக்கெதிராக ஒரு மரணப் படுகுழி தோண்டப்பட்டிருப்பதாகத் தோன்றியதும், பொலிஸாரால் எதுவித பயனும் இல்லையென்றானதால் அவர் விக்டோரியாப் பூந்தோட்டத்துக் கெதிரே இருந்த அவரது இல்லத்தின் வாயிற் கதவுகளை மூடும்படி கட்டளையிட்டுவிட்டு தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக சில துப்பாக்கிகளையும் சுழல் துப்பாக்கிகளையும் பெற்றுக் கொண்டார். இரவு அண்மியதும் அவரின் தோட்ட வேலையாள் ஓடோடி வந்து சிங்களவர் ஐம்பதின்மர் மட்டில் வந்து ஐம்பது ரூபா உடனே தரவேண்டுமென்று கோருவதாகவும் இல்லாவிடில் வாயிற் கதவு பலாத்காரமாகத் திறக்கப்பட்டு வீடும் கொள்ளையடிக்கப்படுமென்று கூறுவதாகவும் அறிவித்தான். அவர்கள் வீட்டுத் தோட்டத்துள் நுழைந்தால் சுடப்படுவர் என ஜனுப் நெய்னு மரிக்கார் அறிவித்ததும் அவர்கள் மெதுவாக அவ்விடத்தை விட்டகன்றனர். அவரின் மகளின் கணவரான துருக்கிக் கொன்சல் ஜனுப் ஓ. எல். எம். மாக்கன் மாக்கரும் நகரக் காடையர்களின் அச்சுறுத்தல் பற்றியும் வன்செயல்கள் பற்றியும் இதுபோன்ற சம்பவங்களை என்னிடம் கூறினார்.''

உதுமா லெப்பை மரிக்கார் அகமது லெப்பை மரிக்கார் ஆலிம் பெருந் தனவந்தர்களில் ஒருவர். அவர் பரவலான இரும்பு வியாபாரம் செய்ததுடன் அனேக நிலையான சொத்துக்களையும் கொண்டிருந்தார். அவருக்கு அனேக ஆண்மக்கள்

இருந்தனர். அவர்கள் அவரது வியாபாரத்தின் ஒவ்வொரு பிரிவையும் நிர்வகித்தனர். 1917 இல் அவர் காலம் சென்ற பொழுது அவரது ஆதனம் இருபது இலட்ச ரூபா அள [redacted] மரண சாசனம் நிதிமன் [redacted] அவரின் மரபுரிமையாளர் [redacted] அவர் உயில் நிருபிக்கப் [redacted] திரம் எழுதாமலே இறந்த [redacted] கியது. மேன்முறையீட்டை [redacted] தால் 'பிரிவி கவுன்சி' லுக்கு [redacted] தங்கள் செய்யப்பட்டன. [redacted] சிலர், வழக்குத் தொடர் [redacted] க்கு சொத்தைப் பங்கிட்டு [redacted] கு அறிவுரை பகர்ந்தனர். [redacted] அவ் விவகாரத்தில் எஸ்.எல். [redacted] ர்களை நடுவராகக் கொள்ள [redacted] பங்கீடு செய்தது இறுதி [redacted] டது.

[redacted] அவரது பிந்திய வயதில் இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டார். அவருடைய வியாபார நிறுவனம் கொழும்பு புறக்கோட்டை கெய்சர் வீதி 188 ஆம் இலக்க இல்லத்தில் இருந்தது. அதற்கு முன்னர் அவர் 1920 இல் "வீரப்பாஸ்" எனும் ஸ்தாபனத்துடன் சேர்ந்து மோட்டர் வாகன வியாபாரத்தில் ஈடுபட்டு பிரித்தானியாவிலிருந்தும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்தார்.

அவர் 1926 டிசம்பர் 24 ஆம் தேதி இறையடி சேர்ந்தார். அவர் ஆண்மக்கள் மூவரதும் பெண்மக்கள் ஐவரதும் தந்தையாவார்.

# டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான்

கௌரவ டபிள்யு. எம். [redacted]
அப்துர் ரஹ்மான், ஏ. எம் [redacted]
வாப்பிச்சி மரிக்கார் அவர் [redacted]
களின் மகனுவார். கொழும் [redacted]
பில் 1868இல் பிறந்த அவர் [redacted]
காஸ்வேக் வீதி அரசாங்க [redacted]
பாடசாலையிலும் அதன் [redacted]
பின்னர் வெஸ்லி கல்லூரி [redacted]
யிலும் கல்வி பயின்றார். [redacted]
1888 இல் தம் தகப்பனுரு [redacted]
டன் கட்டடத் தொழிலிற் [redacted]
சேர்ந்தார். 1900இல் சட்ட [redacted]
வாக்க சபைக்கு முகம்மதிய [redacted]
உறுப்பினராக அவர் நிய [redacted]
மிக்கப்பட்டார். அவரைக் [redacted]
கௌரவிக்கு முகமாக ஐ. [redacted]
எல். எம். அப்துல் அஸீஸ் [redacted]
அவர்கள் தலைமையில் [redacted]
சோனகர் சங்கம் ஓர் இராப் போசனம் வழங்கியது. அவர் சட்டவாக்க சபையில் பல குழுக்களில் கடமையாற்றியிருக்கிறார்.

குற்றவாளிகளை எவ்வாறு நடத்த வேண்டுமென்பது பற்றி ஆராய 1902 நவம்பர் 14 ஆம் தேதி சட்டவாக்க சபையின் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஏ. ஜே. லஸ்ஸெல்ஸ் (அற்றேனி ஜெனரல்), லூஸ், எச். எச். கமரொன், எச். எல். க்ரோபோட், எஸ். பொயிஸ், அப்துர் ரஹ்மான் ஆகியோர் அதில் அங்கம் வகித்தனர்.

கங்கவரி திருத்தச் சட்டமூலத்தைப் பரிசீலனை செய்வதற்காக 1903 ஜனவரி 23 அம் தேதி நியமிக்கப்பட்ட குழு

வில், அற்றேனி ஜெனரல், கணக்காய்வாளர் மா அதிபதி, ஐரோப்பிய உறுப்பினர், வாணிக உறுப்பினர், பிரதம சுங்கத் திரட்டாளர் ஆகியோருடன் முகம்மதிய உறுப்பினரான அப்துர் ரஹ்மான் அவர்களும் அங்கம் வகித்தார்.

1903 பெப்ரவரி 10 ஆம் தேதி சட்டவாக்க சபையில் கௌரவ அப்துர் ரஹ்மான் அவர்கள் சட்ட நிறைவேற்று சபை விஸ்தரிப்பை ஆதரித்தார். காப்புவரி வசதிச் சட்ட மூலத்தைப் பரிசீலனை செய்ய 1905 டிசம்பர் 15 ஆம் தேதி அற்றேனி ஜெனரல் அவர்களால் பின்வருவோரைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்படல் வேண்டுமென்ற ஒரு பிரேரணை சட்டவாக்க சபையில் பிரேரிக்கப்பட்டது: அற்றேனி ஜெனரல், கணக்காய்வாளர் மா அதிபதி, பிரதம சுங்கத் திரட்டாளர், கௌரவ ஜே. பேகுஸன், கௌரவ எம். எப். வோக்கர், கௌரவ அப்துர் ரஹ்மான்.

1906 நவம்பர் 22 ஆம் தேதி, மேன்மை தங்கிய தேசாதிபதியின் உரைக்கு நன்றியுரை வழங்க நியமிக்கப்பட்ட குழுவில் பொருளாளர், மராமத்து பணிப்பாளர், பதிவாளர் மா அதிபதி, கீழ்ப் பிரதேச சிங்கள உறுப்பினர், தோட்டத் தொழில் உறுப்பினர், ஐரோப்பிய உறுப்பினர் ஆகியோருடன் அப்துர் ரஹ்மான் அவர்களும் அங்கம் வகித்தார்.

ஏரித் திட்டத்துக்காக கடன்களிலிருந்து பெருந்தொகைப் பணம் செலவழிக்கப்படுவதை அப்துர் ரஹ்மான் அவர்கள் 1909 பெப்ரவரி 10 ஆம் தேதி சட்டவாக்க சபையில் எதிர்த்தார். எத்தனையோ அவசர வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கும் ஒரு கட்டத்தில் அவ்வித ஒரு பொருட் செலவு அவசியமில்லையென அவர் கூறினர்.

அரசாங்க சேவையிலுள்ள தக்க ஊழியர்களை போட்டிப் பரீட்சையின்றி சில உயர் பதவிகளுக்கு நியமிக்க தேசாதிபதிக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்று 1909 பெப்ரவரி 25 ஆம் தேதி சட்டவாக்க சபையில் அப்துர் ரஹ்மான் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். பாடசாலையிலிருந்து வெளியேறும் இளைஞர்களுடன் அரசாங்க சேவையிலுள்ளவர்களைப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென்று கேட்பது நியாயமல்லவென்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாய கழகம், ஓரியண்ட் கிளப், சிலோன் டேர்ப் கிளப், லிபரல் லீக் ஆகியவற்றில் அவர் உறுப்பினராக இருந்தார். சமூக சீர்திருத்தக் கழகத் துணைத் தலைவராக வும் விளையாட்டுக்களை ஆதரிக்கும் ஒருவராகவும் அவர் இருந்ததுடன் மரதானைப் பள்ளிவாசல் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராகவும் இலங்கை முஸ்லிம் கல்விக்கழகத் தினதும் முஸ்லிம் ஆன்மீக கழகத்தினதும் 'மோர்ஸ் ஸ்போட் கிளப்' பினதும் தலைவராகவும் அவர் விளங்கினார்.

இலங்கை முஸ்லிம்களின் தலையணியாய் இருந்த துருக் கித் தொப்பி அணிந்து எம். சி. அப்துல் காதர் அவர் கள் நீதிமன்றத்தில் வழக்காட முனைந்த நேரத்தில் அதற்கு இடமளிக்க மறுத்ததைத் தொடர்ந்து 1905 இல் முஸ்லிம் களின் மாபெரும் கூட்டமொன்று மரதானைப் பள்ளிவாசல் முற்றவெளியில் நடைபெற்றது. அதற்கு அப்துர் ரஹ்மான் அவர்களே தலைமை தாங்கினார்.

அதன்பின்னர் குடியேற்ற நாட்டுச் செயலாளரிட மிருந்து துருக்கித் தொப்பி விவகாரம் பற்றி பின்வரும் கடிதம் அப்துர் ரஹ்மான் அவர்களுக்குக் கிடைத்தது:

"குடியேற்றநாட்டுச் செயலாளர் அலுவலகம்,
கொழும்பு, 22 ஜூன் 1906,

ஐய,

தலையில் துருக்கித் தொப்பி அணிந்து தீவின் உயர் நீதிமன்றத்தில் ஆஜராக இடமளிக்க வேண்டுமென இறைஞ்சி இலங்கை முகம்மதியர்களிடமிருந்து கிடைத்த மகஜர் மன்னர் முன் வைக்கப்பட்டதென்றும் மாட்சிமை தங்கிய அவர் அம் மகஜரைப் பெற்றார் எனினும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம் மனுதாரர்களின் திருப் திக் கேற்றுங்கு ஏற்கெனவே தீர்க்கப்பட்டிருப்பதாகத் தாம் அறிவதாக அவர்களுக்கு அறிவிக்கும்படி ஆணையிட் டுள்ளார் என்றும் குடியேற்ற நாடுகளின்அரச செயலா ளரிடமிருந்து ஒரு கடிதம் மேன்மை தங்கிய தேசாதி

பதிக்குக் கிடைத்துள்ளதாக உங்களுக்கு அறிவிக்கும்படி நான் அவரால் பணிக்கப்படுகிறேன்.

இங்ஙனம், ஐய,
உங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியன்,
ஜே. ஸ்மித்,
குடியேற்ற நாட்டுச் செயலாளருக்காக.''

துருக்கித் தொப்பி விவகாரத்தில் பின்வருமாறு தீர்வு காணப்பட்டது. ''உயர் நீதிமன்றத்தின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு: 1905.9.19 ஆம் தேதிய கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதாவது, வழக்கமான வழக்கறிஞர் அங்கியுடனும் கழுத்துக் கரைப்பட்டியுடனும், முகம்மதிய மக்கள் வைபவ வேளைகளில் வழக்கமாக அணியும் நீண்ட கறுப்பு மேலங்கியும் அணியப்படின் முகம்மதிய வழக்கறிஞர்கள் தாங்கள் விரும்புமிடத்து முகம்மதிய மக்களால் வழக்கமாக அணியப்படும் சிவப்புநிறத் துருக்கித் தொப்பி அணிந்து உயர் நீதிமன்றத்தில் ஆஜராக அனுமதிக்கப்படுவர்.

1906 மார்ச் 16

ஒப்பம்:

அல்பிரட் லஸ்கல்ஸ்.
எச். எல். வெண்ட்.
ஜே. பி. மிடில்டன்.
ஏ. வுட்ரண்டன்,''

துருக்கி சுல்தானுல் ஆளப்பட்ட திரிப்போலியின் மீது இத்தாலியின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க 1912 இல் கூடிய முஸ்லிம்களின் மாபெருங் கூட்டத்துக்கு அப்துர் ரஹ்மான் அவர்கள் தலைமை தாங்கினர்.

1917 இல் ''சிலோன் இண்டிபெண்டெண்ட்'' நிருபருக்கு அவர் அளித்த பேட்டியொன்றில், டென்ஹாம்

என்பார் அவரது சொற்பொழிவில் சமர்ப்பித்த கருத்துரை களுக்குத் தமது பூரண கருத்தொருமிப்பு உள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும் அப்பேட்டியில் பின்வருமாறு குறிப் பிடப்பட்டது:

''முஸ்லிம்களிடையே ஆங்கிலக் கல்வி அதலபாதாளத் திலேயே இருக்கின்றது. சனத் தொகையைக் கருத்திற் கொண்டால் அவர்களிடையே படித்தவர்களின் விகிதா சாரம் மிகவும் சிறிதாகவே உள்ளது. என் தந்தையா ரால் ஏறக்குறைய இருபத்தாறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ஸாஹிராக் கல்லூரி எங்கள் மத்தி யில் உள்ளது. அதன் கட்டடத்தை விசாலிக்கவும், விஞ்ஞான ஆய்வுகூடமொன்றை நிறுவுவதன் மூலமும் கூடிய தொகையான திறமையான ஆசிரியர்களை நிய மிப்பதன் மூலமும் அப் பாடசாலையை முன்னேற்றவும் எல்லாவித சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன.........
.........இவ்வாறு சட்டவாகக் சபை முன்னாள் முகம் மதிய உறுப்பினரான அப்துர் ரஹ்மான் அவர்கள் குறிப்பிட்டார்.

இலங்கை முஸ்லிம்களின் நிலை பற்றிக் கூறும்போது அப்துர் ரஹ்மான் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

'அது மிகவும் வருந்தத் தக்க மோசமான நிலை. எம் முஸ்லிம் மக்களின் வெளிப்படையான வாழ்வு வளத்துக்குக் காரணம், அவர்கள் தங்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்த ஆதனங்களைக் கொண்டு கஷ்டமின்றி வாழ்கின்றனர் என்பதாகும். இப்பொழு தெல்லாம் வர்த்தகத்தில் பெரும் போட்டி ஏற்பட்டுள் ளது. சோனகரின் கையிலிருந்த வர்த்தகம் இப்பொழுது மற்றவர்களாலும் பங்குகொள்ளப் படுகின்றது. கடந்த

ஏழு அல்லது எட்டு ஆண்டுகளாக முஸ்லிம் இளைஞர் களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் உத்தியோகங்களிலும் எழுதுவினைஞர் சேவையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அத்துடன் ஆங் கிலக் கல்வியிலும் அதிக அக்கறை காட்டுகிறார்கள். இந் நடவடிக்கை முழு மூச்சுடன் தொடரப் படா விடில் இன்னும் இருபது அல்லது முப்பது வருடங் களில் முஸ்லிம்கள் அடிமை ஊழியம் செய்பவர்களாக ஆகிவிடுவர் என அஞ்சுகிறேன்.''

மரதானைப் பள்ளிவாசல் முகாமைக் குழுவைக் கூட் டிணைப்பதற்கான ஒரு சட்டமூலத்தை என். எச். எம். அப்துல் காதர் 1924 இல் சட்டவாக்க சபையில் சமர்ப்பித்த பொழுது அப்துர் ரஹ்மான் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து, 'மரதானையில் நிரந்தரக் குடியிருப்பாளர்களா யிருக்கும் ஜமா அத்தார்களின் நன்மைக்காக அதில் சில காப் புரிமைகள் சேர்க்கப்படல் வேண்டுமென கருத்துத் தெரி வித்தார். அவரின் ஆலோசனைகள் அச் சட்டமூலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

அப்துர் ரஹ்மான் அவர்கள் 1933 ஏப்ரில் 6 ஆந் தேதி இறையடி சேர்ந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை யாவார். அவர்களில் ஒருவர் ஸேர் ராஸிக் பரீத் அவர்களா வார். மற்ற இருவரும் பெண்கள்.

# பூதென் பூதில் உம்பிச்சி

பூதென் பூதில் உம்பிச்சி அவர்கள் கொழும்பில் வதிந்த வர்த்தகச் சீமானுவார். அவர் தமது வாழ்க்கையை ஓர் எளிய முறையிலேயே ஆரம்பித்தார். அவர் மலபாரிகளில் ஒருவாரயினும் தமது செல்வத்தை இந்நாட்டு நலனுக்காக, சிறப்பாக முஸ்லிம்களுக்காக வாரி வழங்கினுர்.

ஸாஹிராக் கல்லூரியின் அறபு ஆசிரியரும் பின்னர் மரதானைப் பள்ளிவாசல் கதீபாகவும் இருந்த எச். எஸ். இஸ்ஸதீன் ஹாஜியார் அவர்கள் உம்பிச்சி அவர்களிடம் சென்று பள்ளிவாசல் காணியில் ஸாஹிராக் கல்லூரிக்காக சில கட்டடங்களைக் கட்டி வழங்கும்படி வேண்டினுர். அதற்கிணங்க அவர் 25,000 ரூபா செலவில் பாலர் வகுப்புக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தார்.

புதிய சோனகத் தெரு 156 ஆம் இலக்கத்திலுள்ள ஜிப்ரிய்யத்துல் அலவிய்யாத் தக்கியாக் கட்டடத்தை வாங்க அவர் பெருந்தொகையான பணத்தை உதவினுர். புறக்கோட்டையிலுள்ள நபீஷிய்யா, மிஸ்ரிய்யா என்னும் இரு பெரும் கட்டடங்களையும் அவர் அறக்கொடைகளாக வழங்கினுர். அவற்றின் வருமானம் புனித ரமழான் மாதத்தில் உள்ளூர் முஸ்லிம் கைம்பெண்களுக்கும் அனுதைகளுக்கும் உதவி தேவைப் படுபவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப் படுவதாயிருந்தது.

அவர் ஆட்டுப்பட்டித் தெருவில் பள்ளிவாசலொன்றைக் கட்டி அதன் பராமரிப்புக்காக வருமானம் பெறக் கூடிய வகையில் அதனேடு சேர்த்து சில கட்டடங்களையும் கட்டினுர். அவரின் அறச் செயல்களைக் கருத்திற் கொண்டு அவருக்கு சமாதான நீதவான் பட்டமும் வழங்கப்பட்டது.

அவரது உடல் அவர் கட்டிய பள்ளிவாசல் முற்றத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

# என். டீ. எச். அப்துல் கபூர்



இலங்கையின் கரையோரங்களில், சிறப்பாக பேருவலையில் குடியேறிய அறபிகள் மாணிக்கக் கற்களைப் பற்றிய தனித்திறமை வாய்ந்த அறிவுடையோராய் விளங்கினர். அவர்கள் நாட்டின் மாணிக்கக் கற் சுரங்கங்கள் அமைந்துள்ள இடங்களுக்குச் சென்று மாணிக்கக் கற்களை அகழ்ந்தெடுக்கும் வேலையில் பெரிதும் ஈடுபட்டனர். அப்துல் கபூர் அவர்களின் மூதாதையரும் அவ்வேலையில் ஈடுபட்டனர். அவர்களுக்குக் கிடைத்த மாணிக்கக் கற்களை அவர்கள் கொழும்புக்கு எடுத்து வந்தனர். கொழும்பில் அமைந்திருந்த ''முஅர்ஸ்'' என பின்னர் அறியப்பட்ட 'யொான்' அல்லது 'யோனகர்'களின் களஞ்சியங்களிலிருந்துதான் அன்று திறமைவாய்ந்த அறபுக் கடலோடிகள் இலங்கை விளைபொருட்களை வாங்கிச் சென்றனர்.

அப்துல் கபூர் அவர்களின் மூதாதையர் படிப்படியாக கொழும்பைத் தங்கள் நிரந்தர வதிவிடமாக ஆக்கிக்கொண்டு பஸ்துன் கோறளையைச் சேர்ந்த எஹெலியகொடைப் பிரதேசத்தில் மாணிக்கக் கல் அகழும் தொழிலைத் தொடர்ந்தனர்.

அப்துல் கபூர் அவர்களின் மூதாதையர் ஒருவரின் பெயர் காணப்படும் முதல் தஸ்தாவேஜு, 1840 இல் மரதானைப் பள்ளிவாசலுக்காக சொத்து ஒன்றை வாங்க உதவிய எழுபத்தினொன்கு பேர்களின் பெயர் காணப்படும் ஒரு பட்டியலாகும். அதிலே சம்ஸுதீன் லெப்பை காஸி லெப்பை என்பவரின் பெயர் காணப்படுகிறது. காஸி லெப்பை அவர்களுக்கு ஆண் மக்கள் பலர் இருந்தனர். அவர்களாவோர்: நூர்தீன் ஹாஜியார், கொழும்புக் கச்சேரியில் ஷுரொப் முதலியாக இருந்த சம்ஸுதீன், ரஹ்மத்துள்ளாஹ் அல்லது பெரிய தம்பி, அப்துர் ரஹ்மான் ஆகியோரே அவர்கள்.

காஸி லெப்பை அவர்களின் ஆண் வழி மூதாதையர் முறையே, சம்ஸுதீன் லெப்பை, பஹாவுதீன், நூர்தீன், ரஹ்மத்துள்ளாஹ், அப்துர் ரஹ்மான் ஆகியோராவர்.

உதுமா லெப்பை மரிக்கார் சேகாதி மரிக்கார் அவர்களின் மகளான உம்மு ஹானி எனும் விதவையை காஸி லெப்பை அவர்கள் மணந்தார். உம்மு ஹானி, எஸ். எம். காஸி லெப்பை மரிக்கார் முதலியாரின் இளைய சகோதரியாவார்.

நூர்தீன் ஹாஜியார் அவர்கள் தமது சொந்த வியாபாரத்தைக் கொண்டு நடத்தியதோடு, சோலைவரி அறவிடப்படுவதற்காக கொழும்பிலுள்ள ஆதனங்களை மதிப்பீடு செய்ய கொழும்பு மாநகர சபையால் தெரிவு செய்யப்பட்ட ஆணையாளர்களில் ஒருவராகவுமிருந்தார்.

அவரின் சகோதரரான சம்ஸுதீன் ஷ்ரொப் முதலியார் அவர்கள் தோற்றத்தில் ஓர் அறபியைப் போன்றிருந்தார். எவ்வளவுக்கெனில், தேசாதிபதி கிரகரியும் ஸ்டான்லி பிரபுவும் அவரது தோற்றத்தைக் கொண்டு அவர் ஓர் இலங்கை வாசி என்பதைச் சந்தேகித்தனர். அவரின் இன்னொரு சகோதரரான சீ. எல். ரஹ்மத்துள்ளாஹ் அல்லது பெரியதம்பி என்பார் மாணிக்கக் கல் வியாபாரியாக விளங்கினார். அவரது வியாபார நிறுவனத்தில்தான் அப்துல் கபூர் அவர்கள்

மாணிக்கக் கல் வியாபாரம் பற்றிக் கற்றுக் கொண்டார். என். டீ. எச். அப்துல் ஹமீது, கபூர் ஆகியோர் நூர்தீன் ஹாஜியார் அவர்களின் ஆண் மக்களாவர்.

கபூர் அவர்கள் 1894 இல் கொழும்பு பிரிஸ்டல் ஹோட்டல் கட்டடத்தில் தனது மாணிக்கக்கல், நகை வியாபாரத்தை ஆரம்பித்தார். கப்பல்களுக்குச் சென்று மாணிக்கக் கற்களையும் நகைகளையும் விற்க அவருக்கு விசேஷ அனுமதி இருந்தது. 1901 இல் வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் இங்கு வருகை தந்தபோது அவர்களுக்காக கண்டி காட்சி மாடத்தில் முத்து, வைரம், நீலமணிக் கல், செம்மணிக் கல், கலைத்திறப் பொருட்கள் முதலியவற்றைக் காட்சிக்கு வைக்க அவருக்கு விசேட கட்டளை மூலம் அனுமதி வழங்கப்பட்டது. 1924 இல் வெம்ப்ளி பொருட்காட்சியில் அவரது விற்பனைச் சாவடிக்கு ஒரு முக்கியத்துவ இடம் கொடுக்கப்பட்டது. இங்கிலாந்தின் மேரி மகாராணி அவ் விற்பனைச் சாவடிக்குத் தாமே சென்று பொருட்களையும் வாங்கினார். அவரது வெற்றிக்குக் காரணம் தெள்ளத்தெளிந்த அவரது நாணயமாகும்.

அவர் தமது சொந்தச் செலவில் உலகப் பொருட்காட்சிகளில் பங்குகொண்டார். அது அவரது புகழை மேலோங்கச் செய்ததுடன் இலங்கைக்கும் பிரசித்தியைத் தேடிக் கொடுத்தது. 1903 இல் ஐக்கிய அமெரிக்காவில் நடந்த செனு லூயிஸ் பொருட்காட்சி, 1912 இல் நடந்த அகில இலங்கைப் பொருட்காட்சி, 1924 இல் நடந்த பிரிட்டிஷ் எம்பயர் பொருட்காட்சி, 1925 இல் நடந்த பிலடெல்பியா பொருட்காட்சி ஆகியவை அவர் பங்கெடுத்துக்கொண்ட சில பொருட்காட்சிகளாகும். ஐக்கிய அமெரிக்காவில் அதுவரை காட்சிக்கு வைக்கப்பட்ட மாணிக்கக் கற்களில் அவரின் கற்கள் மிகச் சிறந்த சேர்ப்பு எனக் கருத்துக் கொள்ளப்பட்டது. வெம்ப்ளி பொருட்காட்சி முடிந்து அவர் இலங்கை திரும்பியபோது அப்போதைய இலங்கைத் தேசாதிபதி "அவர் செய்த மிகச் சிறந்த வேலை" க்காக அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.



Noor Deen Hajiyar Abdul Hameed
Abdul Gaffoor
N H M. Abdul Cader

அவரது வள்ளற்றன்மையால் பலன்பெற்ற அனேக நிறுவனங்களில் ஸாஹிராக் கல்லூரியும் ஒன்ருகும். அவர் கல்லூரிக்காக பதினுறு வகுப்பறைகளைக் கட்டிக் கொடுத்தது மாத்திரமன்றி ஒரு பூரண விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் கட்டிக் கொடுத்து அதற்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கினுர். மேலும், ஸாஹிராக் கல்லூரி மாணவர் விடுதிக்காக ஒரு கட்டடத்தை நிறுவ அவர் ஓரிலட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்தார். அத்துடன் மகரகமையில் பதினெட்டு ஏக்கர் காணியைப் பயிற்சி நெறிப்பாடசாலைகளுக்கென அன்பளிப்புச் செய்தார். ஸாஹிராக் கல்லூரியின் கிளைப் பாடசாலைகளும் அவரது தாராளத் தன்மையிலிருந்து தப்பவில்லை. அதேபோன்று இலங்கை முழுவதிலுமுள்ள அனேக பள்ளிவாசல்கள், ரத்மலானை செவிடர் குருடர் பாடசாலை, மகரகமை ஆண்கள் கைத்தொழிற் பாடசாலை ஆகியவையும் அவரது வள்ளற்றன்மையினுல் பயனடைந்தன. கொழும்பு மெசஞ்சர் வீதியிலுள்ள மஸ்ஜித் முஹ்யியத்தீன் பள்ளிவாசலைக் கட்டியெழுப்புவதற்கான செலவில் பெரும் பகுதியை அவரே ஏற்றுக் கொண்டார். அப் பள்ளிவாசல் மனங்கவர் மினுராக்களுடனும் குதிரை லாட வடிவான மேல்வளைவுகளுடனும் ஸரஸனிய சிற்பக் கலையை எடுத்துக்காட்டா நிற்கின்றது.

அறபுமொழிக் கல்விக்காக மகரகமையில் கபூரிய்யா அறபிக் கல்லூரி எனும் இஸ்லாமிய மத நிறுவனத்தை அவர் நிறுவினுர். அதன் பராமரிப்புக்காக அவர் கிராண்ட் பாஸில் அறக்கொடையாக வழங்கிய கட்டடத்தின் அன்றைய பெறுமதி ஐந்து லட்சம் ரூபாவாகும். முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டிற்காக "கபூர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி" நிறுவப்பட்டது. அதற்கு அறக்கொடையாக அவர் கொழும்புக் கோட்டையில் வழங்கிய கட்டடத்தின் அன்றைய பெறுமதி நாற்பது இலட்சம் ரூபாவாகும்.

1949 மார்ச் 1 ஆம் தேதி ஸாஹிராக் கல்லூரியில் அப்துல் கபூர் அவர்களின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்து மகா தேசாதிபதியான ஸோர்

ஹென்றி மூர் பேசிய பொழுது, "இந்த உருவப்படம் காலஞ் சென்ற அல்ஹாஜ் என். டீ. எச். அப்துல் கபூர் அவர்களின் வாழ்க்கைப் பணிக்கு என்றும் நின்று நிலவக் கூடிய நினைவுச் சின்னம் என்பது மாத்திரமல்ல, அது மற்ற வர்களும் அவரை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட உதவும் ஓர் ஊக்கப்பாடுமாகும்" என்ருர். அவர் மேலும் கூறியதாவது: "அவர் எங்கு சென்ருலும் தமது வியாபா ரத்தின் நற்பெயரைக் காப்பாற்றினர். அங்கெல்லாம் அவர் இலங்கையின் நலனைக் கருத்திற்கொண்டார். அவரது வியா பாரத் திறமையும் அவர் அடைந்த செல்வத்தின் அளவும் மிகப் பெரியனவாயினும் அவர் ஓர் எளிய வாழ்க்கையை வாழ்ந்தார். அவ் வாழ்க்கை ஒரு முஸ்லிம் பக்திமானின் வாழ்க்கையாகவே இருந்தது. அவர் எப்பொழுதும் அவரது செல்வத்தை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்வதில் இன்பம் கண்டார்."

ஸாஹிராக் கல்லூரியின் அன்றைய அதிபரான ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் அப்துல் கபூர் அவர்களைப் பற்றிக் குறிப் பிடுகையில் பின்வருமாறு கூறினர்: "அவரது தருமம் உள் நாட்டு, அல்லது பேரரச கௌரவப் பட்டங்களைப் பெறுவதற் காக அமையவில்லை; அல்லது ஆட்சிபீட சபைகளில் இடமெ டுக்கும் ஒன்ருகவும் இருக்கவில்லை. அவரது தருமத்தில் வெளிப்பகட்டு இடம்பெறவுமில்லை; பாராட்டும் புகழும் வேண்டப்படவுமில்லை. ஒரு முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய பண்பேபோல், அவர் எவ்வளவுக்கு தாம் செய்த தருமத்தை மறைமுகமாக வைத்திருந்தாரென்ருல் அவரது வலக்கரம் கொடுத்ததை இடக்கரம் அறியவில்லை."

கார்னெஜீஸுடனும் ரொக்பெலருடனும் அவரை ஒப் பிட்ட அஸீஸ் அவர்கள், மேலும் கூறினர்: "அவர் தமது வாழ்நாளில் மட்டும் வரையாது வழங்கவில்லை. தமது மறைவுக்குப் பின்னரும் வாரி வழங்கக் கூடிய அறக்கொடை களையும் அளித்துச் சென்ருர்."

அப்துல் கபூர் அவர்களின் நேர்மையை நிரூபிக்கத் தமது வாழ்நாளில் நடந்த ஒரு சம்பவத்தை அன்றைய பிரதிநிதிகள் சபைச் சபாநாயகரான ஏ. எப். மொலமுரே அவர்கள் ஸாஹிராக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு எடுத்துக் கூறினார்: "ஒரு வியாபாரி என்ற முறையில் நேர்மையில் அவருக்குச் சமமான ஒருவரைக் காண்பதரிது. ஏனெனில், என் தந்தை அவருக்கு ஓர் இரத்தினக் கல்லைக் கொடுத்து அதற்கு நாற்பத்தையாயிரம் ரூபா வேண்டுமெனக் கேட்டார். ஆனால், அப்துல் கபூர் அவர்களோ அதன் சரியான பெறுமதியை, அதாவது அறுபத்தையாயிரம் ரூபாவை என் தந்தைக்குக் கொடுத்தார்."

இலங்கைச் சோனகர் சங்கம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி அரச ஆணைக்குழுவின் தலைவருக்கும் உறுப்பினர்க்கும் சமர்ப்பித்த மகஜரொன்றில் அப்துல் கபூர் அவர்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "இலங்கைச் சோனகர் ஒருவர் கொழும்பு நகரின் மையமான ஓரிடத்தில் நாட்டுக்காக ஐம்பதிலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான அறக்கொடைச் சொத்தொன்றை வழங்கியதானது இத்தீவின் வரலாற்றிலேயே இதற்கு முன் நிகழ்ந்திராத ஒரு சம்பவமாகும்."

1945 இல் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் வைத்திய கலாநிதி டபிள்யு. பாலேந்திர அவர்கள் அப்துல் கபூர் அவர்கள் பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறினார்: "நீங்கள் இந்நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து வருகிறீர்கள். இந்நாட்டுத் துறைமுகத்தைக் கப்பல்கள் வந்தடையும்பொழுது நீங்கள் காண்பது என்ன? நான் பலதடவையும் அவைகளில் வந்துள்ளேன். நீங்கள் காண்பது, துறைமுகத்தை நோக்கி வானோங்கி நிற்கும் "ஜெம் பலஸ்"—ஜெம் மியுஸியம்-ஆகும். துறைமுகத்தை விட்டு நீங்கி காலிமுக மைதானம் வழியே போகும் போது என்ன காண்கிறீர்கள்? சோனகரின் நேர்மையான வர்த்தகத்தின் பயனாக எழுந்த கட்டடத் தொடர்களாகும். ஆனால், "ஜெம் பலஸில்" ஏதோ விசேஷம் காணப்படுகிறது.

"இதோ இங்கே இருக்கிறார் இந்நாட்டின் பிரஜை ஒருவர். பட்டை தீட்டப்படாத இரத்தினக் கற்களைக் கொண்டு செல்வத்தை உருவாக்குகிறார். அவற்றைத் தூர இடங்களான நியூயோர்க், பாரிஸ், மற்றும் உலகில் ஏனைய பாகங்களுக்கு எடுத்துச் செல்கிறார். அதன் மூலம் இந் நாட்டுக்கு ஏராளமான செல்வத்தை எடுத்து வந்து கட்டடங் களை எழுப்புகிறார். அவை இந்நாட்டிலுள்ள மிக உயரமான கட்டடங்களிற் சிலவாக அமைந்துள்ளன: ஆனால், அவர டைந்த செல்வங்களில் ஒரு பகுதியை அவரது சகோதர மக்களின் நன்மைக்காக வழங்குகிறார். அவ்வித மனிதர் ஒருவரை உருவாக்கக்கூடிய ஒரு நாகரிகம் உண்மையிலேயே மிக உயர்ந்த ஒரு நாகரிகமாகும்.

அந் நாகரிகம் உலகின் ஏனைய நாகரிகத்தை விட வித்தியாசமானது. அது மறுமையை எதிர்நோக்கும்படி கூறும் ஒரு நாகரிகமாகும். அது நாட்டின் செல்வ வளத் தை, அழகுப் பொருட்களை, மனிதனுக்கு உபயோகமான வற்றைப் பயன்படுத்தும்படி அறிவுரை நல்கும் அதே சமயம் அவற்றைத் தன் சொந்த உபயோகத்துக்கு மாத்தி ரம் வைத்துக் கொள்ளாது ஏனையவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி கூறும் ஒரு நாகரிகமாகும். உண்மையில் அது மிக உயர்ந்த ஒரு நா ரிகமே."

அப்துல் கபூர் அவர்களிடம் மாணிக்கக் கற்களினதும் நகைகளினதும் ஒப்புவமையற்ற ஒரு சேகரிப்பு இருந்தது. 1929 இல் அவர் கொழும்புக் கோட்டை சேர்ச் வீதியில் "ஜெம் மியுஸிய"த்தை நிறுவினார். அதனைத் திறந்துவைத்து உரையாற்றிய அன்றைய தேசாதிபதி ஸேர் ஹேபட் ஸ்டான்லி அவர்கள், தென் கென்சிங்டன் பேரரச நிறு வனத்தில் நிரந்தர கண்காட்சிக்காக பெறுமதி வாய்ந்த

இலங்கை மாணிக்கக் கற்களை வழங்கியதற்காக அப்துல் கபூர் அவர்களை வெகுவாகப் பாராட்டினர்.

மதத்தில் அவருக்கிருந்த பக்தி மிக ஆழ்ந்ததும் உணர்ச்சி மிக்கதுமாகும். கடுங் கூதிர் காலத்திலும் பிரயாணம் செய்ய நேர்ந்த போதெல்லாம் அவர் ஐங்காலத் தொழுகையைத் தவறவிட்டது கிடையாது. அவரது முழு வாழ்க்கையும் பக்திமேலிட்ட ஒன்றாக இருந்தது. அவர் உலகின் பல பாகங்களுக்கும் பரவலாகப் பிரயாணம் செய்துள்ளார். மக்கா, மதீனா, டமஸ்கஸ் பக்தாத், கெய்ரோ, இந்தியா ஆகிய இடங்களிலுள்ள இஸ்லாமிய முக்கியத்துவம் வாய்ந்த தலங்களையும் அவர் தரிசித்துள்ளார். அனேக "சாதாத்" மார்களும் "செய்கு"மார்களும் கொழும்பில் தங்கிய போதெல்லாம் அப்துல் கபூர் அவர்களின் அதிசிறந்த விருந்தோம்பலிலிருந்து தப்பவில்லை. "ஐவிக்கல் ஹோல்" (இப்போதைய ஸ்ரீ கொத்த) அவரது பிற்காலத்தைய வாசஸ்தலமாகும்.

அப்துல் கபூர் அவர்கள் அவரின் ஏனைய சேவைகளோடு சிறப்பாக அவரது வள்ளற்றன்மைக்காக என்றும் நினைவு கூரப்படுவார். அவரது பெயர் அனேக வெளிநாடுகளில் பிரபல்யம் பெற்று விளங்குகிறது. அவரது இறுதி மூச்சு அவரது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் 73 ஆவது வயதில் அடங்கியது, மரதானைப் பள்ளிவாசல் வளவில் அடக்கம் செய்யப்படக் கூடிய கௌரவத்தை அவர் பெற்றார்.

அவரின் மூத்த மகன் நகரசபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் பளீல் ஏ. கபூர் ஆவார்.

# என். எச். எம். அப்துல் காதர்

என். எச். எம். அப்துல் காதர் அவர்கள் என். டி. எச். அப்துல் கபூர் அவர்களின் இளைய சகோதரராவார். வெஸ்லி கல்லூரியில் கல்வி பயின்ற அவர் 1907 இல் புரக்டராகவும் பகிரங்க நொத்தாரிசாகவும் ஆனார்.

அப்துல் காதர் அவர்கள் [redacted] அவர் காலத்தில் [redacted] புரக்டர்களில் [redacted] ஒருவராக [redacted] சட்டவாக்க சபையில் [redacted] ஐந்து வருடம் [redacted] களைப் பிரதிநிதித்துவம் [redacted] த்தார். அவர் உலகை [redacted] டுப் பிரிந்த [redacted] கொழும்பு மாநகர [redacted] யில் சிரேஷ்ட [redacted] ராக இருந்தார். [redacted] முஸ்லிம் லீக்கின் [redacted] றில் மிக [redacted] ஒரு சந்தர்ப்பத்தில் [redacted] தலைவர் பதவியை [redacted] வகித்தார். வர்த்தகர் [redacted] முறையில் [redacted] திரைப்படத் [redacted] ஆரம்பித்தவர்களில் [redacted] ரும் ஒருவராவார்.

சட்டவாக்க சபையில் டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான் அவர்களின் இடத்துக்கு அப்துல் காதர் அவர்கள் 1915 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டார். முஸ்லிம் சமூகம் சம்பந்தப்பட்ட எல்லா அலுவல்களிலும் அப்துல் காதர் அவர்கள் ஒரு நடுநாயகமாக விளங்கினார். களத்தில்

குதிக்க அவர் எப்போதும் தயாராக இருந்ததோடு எதைக் கூறவேண்டுமோ அதைப் பயமின்றிக் கூறினார்.

*1908* இல் புறக்கோட்டை வட்டாரத்தின் உறுப்பினராக கொழும்பு மாநகர சபையில் பிரவேசித்த அவர் தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக அதன் உறுப்பினராகத் திகழ்ந்தார். இறுதி பதவிக்காலம் தவிர்ந்த மற்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் போட்டியின்றியே தெரிவுசெய் [redacted] த்தக்கது. அங்கு அவ [redacted] ஸர் ஜேம்ஸ் பீரிஸ், ஆதர் [redacted] ரீ. எல். விலீஸ், சீ. பீ [redacted] ன்ற பிரபலஸ்தர்களாவர்.

[redacted] களுக்கு அளிக்கப்படுவது [redacted] ளுக்கும் சமமாக அளிக்கப் [redacted] ாடினார். கல்வியின்றி முன் [redacted] து அவர் ஏற்றுக்கொண்ட [redacted] பிள்ளைகள் வர்த்தகத்தில் [redacted] ம் பிள்ளைகளைக் கல்வியில் [redacted] ல் இறந்த அவரின் மூத்த [redacted] க் ஏ. காதர், இங்கிலாந் [redacted] கியதோடு காது, மூக்கு, [redacted] வத்திய வல்லுநராகவும்

[redacted] ர் அவர்கள் முஸ்லிம் லீக்கின் தலைவராக இருந்தபோது அவரது தலைமைப் பதவி ஒருபோதும் எதிர்ப்புக்குள்ளாகவில்லை. அரசியலமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக அரசாங்கத்துடனும் ஏனைய சமூகங்களுடனும் நடந்த பேச்சுவார்த்தைகளில் அவர் போன்ற ஒருவரின் தலைமையில் இயங்கிய முஸ்லிம் லீக்கின் கருத்துரைகளுக்கு கௌரவமளிக்கப்பட்டது.

மரதானைப் பள்ளிவாசல் நிறைவேற்றுக் குழுவின் தலைவராக அவர் இருபத்தைந்து வருட காலம் கடமையாற்றினார். 1921 இல் அவர் ஸாஹிராக் கல்லூரியின் முகாமையாளரானார். அக் கல்லூரி அவரது சிறந்த நிர்வாகத்தின் கீழும் ரீ. பி. ஜயா அவர்களின் தலைமையின் கீழும் வெகு விரைவாக முன்னேறியது.

முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் அன்று அரசாங்கத்தின் சிறு உதவியையே பெற்றுக் கொண்டிருந்தன. எனவே, முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் 1,50,000 ரூபாவை அரசாங்கம் வழங்க வேண்டுமென அப்துல் காதர் அவர்கள் சட்டவாக்க சபையில் ஒரு பிரேரணை கொண்டு வந்தார். கே. பாலசிங்கம் அவர்கள் அந்தப் பிரேரணையை அனுவதித்தார். ஆனால், பிரேரணை தோல்வியுற்றது. எனினும், கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்கு அரசாங்கத்திடமிருந்து 25,000 ரூபா கொடையாகக் கிடைக்கும் அளவுக்கு அந்தப் பிரேரணை வெற்றி கண்டது.

சட்டவாக்க சபையில் அப்துல் காதர் அவர்கள் 1915 இலிருந்து 1931 வரை முஸ்லிம்களின் பிரதிநிதியாக இருந்தார். முஸ்லிம்களின் நலனை அவர் மிக நுணுக்கமாகவும் கரிசனையுடனும் கவனித்து வந்தார். அத்துடன் நாட்டு நலனைப் பொறுத்த வரையில் தான் ஆற்ற வேண்டிய பங்கை அவர் அதிகமாகவே செய்து வந்தார்.

சட்டவாக்க சபையில் அவர் ஒரு பிரபல உறுப்பினர். உறுதியானதும் சுதந்திரமானதுமான பேச்சு, விடாப்பிடியாக நின்று கருமம் சாதிக்கும் ஆற்றல், கருத்துக்களைக் கூறுதல் ஆகியவற்றுக்குப் பேர் போனவர். முஸ்லிம் விவாகக் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப் படுவதற்கு அவரே பிர

தான காரணியாக இருந்தார். கல்வி, மத விடயங்களில் அவர் முஸ்லிம் சமூகத்துக்கு ஓர் அரணாக அமைந்தார்.


கரவின்றிப் பேசுகின்ற அவரது தன்மை சில சமயங்களில் அவரைப் பிரச்சினைகளிலும் மாட்டச் செய்தது. ஒருமுறை ஒரு முஸ்லிம் டொக்டருக்கு அநீதி இழைக்கப் பட்டதாகத் தாம் கருதிய ஒரு விடயம் சம்பந்தமாக அவர் ஓர் உயர் அதிகாரியைச் சட்டவாக்க சபையில் குற்றம் கூறினார். அதற்காக அவர் மீது அவதூறு வழக்குத் தொடரப்பட்டது. குடியேற்றநாட்டுச் செயலாளராயிருந்த ஸேர் ஆதர் பிளச்சர் அதிலே தலையிட்டு அதனை ஒரு தீர்வுக்குக் கொணரும் வரை அப்துல் காதர் அவர்கள் அந்த வழக்கை வாதாடினார். அந்த வழக்கைத் தொடர்ந்து, சபையில் ஆற்றப்படும் எல்லா உரைகளுக்கும் கூற்றுக்களுக்கும் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து விலக்களிக்கச் செய்யும் ஒரு சட்டமூலத்தை ஸேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் சட்டவாக்க சபையில் சமர்ப்பிக்க வேண்டி ஏற்பட்டது.

/ என். எச். எம். அப்துல் காதர் அவர்கள் தாம் செய்த எல்லாக் கருமங்களிலும் உறுதியையும் முன்னறிவையும் கடைப்பிடித்தார். திரைப்படத் தொழிலில் தம் ஆண்மக்களுக்குச் சிறந்த ஓர் எதிர்காலம் உண்டென்பதை ஏற்கெனவே அவர் கண்டுகொண்டார். அந்த நம்பிக்கை பொய்யாகவில்லை.

அப்துல் காதர் அவர்கள் 1917 இல் "சிலோன் இண்டிபெண்டன்ட்"னுக்கு அளித்த பேட்டியொன்றின் மூலம் அவரது சிறப்பியல்பை அறிந்துகொள்ளலாம்:

"முகம்மதியர்கள் மத்தியில் விரும்பத்தகாத ஒரு தர்ம முறை நிலவுகின்றது. அதாவது, கந்தூரிச் சாப்பாடு

# எம். ரீ. அக்பர்



இந்நாட்டின் கல்வி, நீதி ஆகிய துறைகளில் நீதியரசர் எம். ரீ. அக்பர் அவர்கள் ஆற்றிய தொண்டு குறிப்பிடத் தக்கது. பணக்கார தென்னந்தோட்டச் சொந்தக்காரரான எம்.எஸ் ஜே. அக்பர் என்பாரின் புதல்வரான அவர் கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்களிடையே திறமைசாலியாக விளங்கியதோடு அனேக பரிசில்களையும் பெற்றார். லண்டன் மெட்ரிகுலேஷன் பரிட்சையில் முதலாம் பிரிவில் சித்திபெற்ற அவர் 1897 இல் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் சேர்வதற்காகப் புலமைப் பரிசில் ஒன்றையும் பெற்றார். அங்கே அவர் ஒரு பொறியிலாளராகத் தகைமை பெற எந்திரவியல் கற்றார் எனினும் பின்னர் சட்டத்துறையில் தகைமை பெற்று "கிரேஸ் இன்" வழக்கறிஞர் மன்ற வழக்கறிஞரானார்.

1905 இல் அவர் இலங்கை திரும்பிய பின் வழக்கறிஞர் தொழிலை நடாத்திக் கொண்டிருந்த அதே சமயம் இலங்கைச் சட்டக் கல்லூரியில் குற்றவியல் நீதிமுறைச் சட்டத்திலும் நடவடிக்கைகளிலும் முஸ்லிம் நீதிமுறைச் சட்டத்திலும் விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் கடமை

கொடுத்தலாகும். அதனால் எதுவித நன்மையான பயனும் ஏற்படுவதில்லை. உண்மையிலேயே ஏழைகளுக்கு உணவளித்தால் அது தர்மமேயாம். ஆனால், இந்தச் சாப்பாடுகளில் நடப்பது அதுவன்று. என்னைப் போன்ற பணக்காரர்கள்தாம் உபசரிக்கப் படுகின்றனர். ஏழை [redacted] ன் எள்ளளவேனும் மறுத் [redacted] ருமம் என்று சொல்லிக் [redacted] சாப்பாடுகளில் சிறிதே [redacted] கள் ஏழைகள் என்பதே [redacted] ச் சாப்பாடுகளுக்குச் செல [redacted] பகுதியைக் கல்விபோன்ற [redacted] செலவிடலாம். அதுவே [redacted]

[redacted] பின் 1938 ஒகஸ்ட் 30 ஆம் [redacted] ரது எதிர்பாராத மறைவு [redacted] பரதிர்ச்சியாகவிருந்தது.

[redacted] ர் அவர்கள் பன்னிரண்டு [redacted] ம் தந்தையாவார். ஆண் [redacted] றகளில் பிரசித்தி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு மாநகர மேயராக இருந்து இப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஜாபிர். ஏ. காதர் அவர்கள் அவர்களில் ஒருவராவார்.

யாற்றினார். அவர் அரசாங்க வழக்கறிஞர் மன்றத்தில் சேர்ந்து 1907 இல் முடிக்குரிய வழக்கறிஞரானார். பின்னர் தகுதி அடிப்படையில் அவர் முறையே சொலிசிட்டர் ஜெனரலாகவும் மாவட்ட நீதிபதியாகவும் ஆனதோடு அற்றோனி ஜெனரலான சீ.எச். எல்பிஸ்டன் அவர்கள் நீண்ட விடுமுறையில் சென்ற சமயம் பதில் அற்றோனி ஜெனரலாகவும் கடமையாற்றினார்.

அக்பர் அவர்கள் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவராகச் செயலாற்றினார். அவரது சிபார்சின் பேரில், இலங்கைப் பல்கலைக்கழகமானது ஒருமைப் பல்கலைக் கழகமாகவும் மனைப் பல்கலைக் கழகமாகவும் அமையவேண்டுமென்றும் அது கண்டி தும்பரப் பள்ளத்தாக்கில் நிறுவப்படல் வேண்டுமென்றும் 1928 இல் சட்டவாக்க சபை தீர்மானித்தது.

அக்பர் அவர்கள் தமது வாக்குச் சாதுர்யத்தால் தாம் தலைமை தாங்கிய பல்கலைக்கழக ஆணைக்குழுவின் சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளும் தீர்மானத்தைச் சட்டவாக்க சபையில் திறமையாக வழிநடாத்தினார். அவர் அவ்விடயத்தில் அப்போதைய பெரும் சூரர்களான ஸேர் ஜேம்ஸ் பீரிஸ், ஸேர் பொன்னம்பலம் இராமநாதன், திரு ஜீ. ஏ. வில் போன்றோரின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டி இருந்தது. அக்பர் அவர்கள் அவ்விடயத்தில் மிக உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிருந்தார். தாம் குறிப்பிடும் பல்கலைக் கழகம் முழு ஆசியாவிலும் அரும் பெரும் கல்வி நிலையமாக அமைய வேண்டுமென்பதே அவரின் அவாவாக இருந்தது.

பல்கலைக்கழக அதிகாரிகள் ஓரளவு காலம் கடந்தும் அனேகமாக விருப்பக் குறைவோடும் பல்கலைக் கழகத்தின்

மணிமண்டபம் ஒன்றின் அரைப் பகுதியை "அக்பர் மண்டபம்" எனப் பெயரிட்டனர்.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் குழாமை அலங்கரித்த முதல் முஸ்லிம் அக்பராவார். "மன்னரின் வழக்குரைஞர்" (கே. சீ.) என்ற தரத்துக்கு உயர்த்தப்பட்ட முதல் இலங்கை முஸ்லிமும் அவராவார். அவர் இளைப்பாறும் சமயம் மிக சிரேஷ்ட "புஸின் ஜட்ஜ்" ஆக இருந்தார்.

இந்நாட்டின் முஸ்லிம் நீதிமுறைச் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் அக்பர் அவர்கள் தலைசிறந்த பணியாற்றினார். முஸ்லிம் சொத்துரிமைச் சட்டம், 'வக்ப்' சட்டம் ஆகியவை சம்பந்தமாக சட்டமியற்றப்பட்ட போது அக்பர் அவர்கள் அதிற் பிரதான பங்குகொண்டார். அதுகால வரை விதவை, அநாதை இளைப்பாற்று நிதியின் ஏற்பாடுகளுக்குள் வராமல் தடுக்கப்பட்டிருந்த முஸ்லிம் அரசாங்க ஊழியர்க்கு அவ்வுரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு காரணமாக இருந்தவர் அக்பர் அவர்களேயாவார்.

கல்வித் துறையில் முஸ்லிம்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதை உணர்ந்த அவர் இலங்கை முஸ்லிம் கல்விக் கழகத்தில் பல ஆண்டுகள் ஆரம்ப செயலாளராகக் கடைபுரிந்து ஹுஸைனீ ஆண்கள் பாடசாலையையும் பாத்திமா பெண்கள் பாடசாலையையும் நிறுவுவதில் வெற்றி கண்டார். ஜாவத்தை முஸ்லிம் மையவாடியில் பள்ளிவாசலொன்றைக் கட்டியெழுப்பக் காரணமாயிருந்தவர் அவரே.

அக்பர் அவர்கள் தலைசிறந்த முஸ்லிம் ஞானிகளினதும் அம்பியாக்களினதும் நூல்களைக் கற்றார். அத்துடன் பல்வேறு மதங்கள் பற்றியும் கற்றறிந்தார். இலங்கைக்கு வருகை தந்த பாவாக்களையும் செய்குமார்களையும் பீர்களையும்

மெய்ஞ்ஞான ஊற்றிலிருந்து நீர் பருகும் பொருட்டு அவர் சந்தித்தார். இஸ்லாத்தைப் பற்றிய ஆழ்புலமை வாய்ந்த அவரின் அனேக கட்டுரைகள் அனேக முஸ்லிம் சஞ்சிகை களில் வெளியாயின. ஆனல், அவற்றை இன்று தேடிப்பெற முடியாமல் இருப்பது உண்மையிலே வருந்தத்தக்கது.

அக்பர் அவர்கள் சொலிசிட்டர் ஜெனரல் என்ற தோரணையில் சட்டவாக்க சபையில் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராக விளங்கினர். "முகம்மதியர்" என்ற பதத்தை "முஸ்லிம்" என மாற்றவேண்டுமென்று 1924 இன் பருவ காலப் பத்திரம் XXXV இல் சிபார்சு செய்த, சட்டவாக்க சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராக அக்பர் அவர்கள் விளங்கினர். அக் குழுவிலே என். எச். எம். அப்துல் காதர், எச். எம். மாக்கன் மாக்கர், ரீ. பீ. ஜாயா, எஸ். ஆர். முகம்மது சுல்தான் ஆகியோர் அங்கம் வகித்தனர். அவர்கள் செய்த சிபாரிசு வருமாறு:

> "முகம்மதியன் எனும் சொல், அது எந்த விதமாக எழுதப்படினும் பிழையான ஒன்ருக இருப்பதோடு உபயோகிக்கப்படக் கூடாததுமாகும். திருநபி (ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட மதத்தைப் பின்பற்றும் ஒருவரைக் குறிக்க உபயோகிக்கப் பட வேண்டிய சரி யான சொல் "முஸ்லிம்" என்பதாக இருத்தல் வேண் டும் என்பதோடு, மதத்தைக் குறிப்பிடும் பொழுது உபயோகிக்கப் பட வேண்டிய சொல் "இஸ்லாம்" என்பதாகவும் இருத்தல் வேண்டும். இந்த இரு வார்த் தைகளே குர்ஆனில் உபயோகிக்கப் பட்டுள்ளன."

அக்பர் அவர்களின் பல்திறமையை அவர் ஒரு குத்துச் சண்டை வீரராகவும் ஜூடோ வீரராகவும் இருந்தார் என்பதைக் கொண்டு அறிய முடிகின்றது. 1944 ஏப்ரில் 22 இல் தமது 64 ஆவது வயதில் அவர் இறையடி சேர்ந்தார்.


## எம். சீ. அப்துல் காதர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முகம்மது கரீம் அவர்கள் அப்துல் காதர் அவர்களின் தந்தையாவார். அவர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததோடு தம் கருத்துக்களில் பழைமை தழுவுகின்றவராயுமிருந்தார். மேல்நாட்டுக் கல்வியானது இஸ்லாமிய வாழ்க்கை நெறிக்கு முரணுக அமையும் என அவர் பயந்தார். ஆனுல், அவரின் துணைவியாரோ அதற்கு மாருன கருத்துக் கொண்டவராக இருந்ததோடு தம் மைந்தரான இளம் அப்துல் காதரை யாழ்ப்பாண் புதுச் செட்டித்தெரு உயர் பாடசாலையில் ஆரம்ப கல்விக்காகவும் அனுப்பி வைத்தார்.

படிப்பில் திறமைசாலியாக விளங்கிய அப்துல் காதரை அவரின் ஆசிரியர்கள் உயர்கல்வி கற்க உற்சாகப் படுத்தினர். இலங்கையில் நடந்த சென்னை பிரசிடென்சி மெட்ரிகுலேஷன் பரீட்சையில் திறமை சித்திபெற்ற அவர் பல்கலைக் கழகத்திற் சேர்வதற்காக புலமைப் பரிசிலொன்றையும் பெற்ருர்.

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் பட்டப் படிப்பு பெற்று இலங்கை திரும்பிய அப்துல் காதர் அவர்கள் அவரது தாயகக் கல்லுரியில் சிறிது காலம் கணிதம் படிப்பித்தார். சட்டப் படிப்பு அவரை ஈர்த்ததால் அத் துறையில் அவர் தேர்ச்சி பெற்று இலங்கைத் தீவின் உயர்நீதிமன்ற அட்வகேட்டாகத் தேறினுர். 1904 ஒக்டோபர் 7 ஆம் நாள் அவர் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் மேற்கத்திய உடையில் தம் சிரசில் துருக்கித் தொப்பி அணிந்தவராகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். பட்டதாரியாகவும் அட்வகேட்டாகவும் விளங்கிய முதல் இலங்கைச் சோனகர் அவரே என்ற பெருமை அவரைச் சார்ந்தது.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அவருக்குச் சிறந்த வருவாயைத் தரக் கூடிய தொழிற்பயிற்சி இருந்தது. அப்போதுதான் ஒரு சமயம் அவர் நீதியரசர் ஸேர் சீ. பீ. லயாட்



முன்னிலையில் மேன்முறையீட்டு வழக்கொன்றில் வாதாட ஆஜராகவேண்டி ஏற்பட்டது. அது நடந்தது 1905 மே 2 ஆம் தேதியாகும். அங்கே ஓர் எதிர்பாராத அதிர்ச்சி அப்

துல் காதர் அவர்களுக்கு ஏற்பட்டது.. அதாவது, நீதிமன்றத்துக்கு அவரது மரியாதையைக் காட்டுமுகமாக அவர் அணிந்திருந்த துருக்கித் தொப்பியை அல்லது சாப்பாத்துக்களைக் கழற்ற வேண்டுமென நீதியரசர் லயாட் அவரைக் கேட்டுக்கொண்டார்.

அப்துல் காதர் அவர்களோ உறுதியான உளம் கொண்டவர். நீதிமன்றத்தின் ஆணை பற்றி அவர் அச்சம் கொள்ளவில்லை. அவர் இரண்டையும் செய்ய மறுத்தார் துருக்கித் தொப்பி அணிந்து வருவது நீதிமன்றத்துக்குச் செலுத்தும் இஸ்லாமிய மரியாதையாகும் என்றும் தன் காலணிகளைக் கழற்றுவது என்பது முடியாத காரியம் என்றும் கூறிய அவர் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினர். ஆணையேற்க மறுத்தாராயினும் ஒரு சிறந்த சட்டவறிஞர் என்ற முறையில் அவர் பின்னர் நீதியரசரை அவரது அறையில் சந்தித்து நிலைமையை விளக்கினர். எனினும், அதனல் எதுவித பயனும் ஏற்படவில்லை.

இச் செய்கை மூலம் அவர் அப்போதைய சட்டவுலகுக்கு ஒன்றை எடுத்துக் காட்டினர் தம் சமூகத்தின் மரபுரிமையைக் காப்பது தமது தொழிலைவிட நனி சிறந்ததெனத் தாம் கருதுவதை அவர் உலகுக்கு உணர்த்தினர். தமது தொழிலுக்கு அதனல் ஏற்படக்கூடிய அபாயத்தை அவர் பொருட்படுத்தவில்லை. அவரது துணிகரமான செயல் முஸ்லிம் சமூகத்தின் மெச்சுதலைப் பெற்றது மாத்திரமன்றி ஒரு வெள்ளைக்கார நீதியரசரின் நடவடிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் எதிர்ப்பையும் தூண்டுவதாக அமைந்தது. அத்துடன் அது ஒரு பராமுகமான சமுதாயத்தைத் திடீரெனச் செயலாற்றவும் செய்தது. அப் போராட்டத்திலே தலைமை தாங்கியவர் அப்போது சோனக சங்கத் தலைவராக இருந்த ஐ. எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களாவார்.

எம். சீ. அப்துல் காதர் அவர்கள் நடந்துகொண்ட முறை சரியானதே என்பதை விளக்க அவர்கள் கூட்டாகச் செயற்படத் தொடங்கினர். சோனகரின் தூதுகோஷ்டி

யொன்று நீதியரசர் லயாடைச் சந்தித்தது. நீதியரசரோ தமக்கே உரித்தான ஏகாதிபத்தியப் போக்கில் உத்தியோக பூர்வமான முறையில் அவ்விடயம் பற்றிக் கதைக்க விரும்ப வில்லை. எனினும் தனிப்பட்ட முறையில் அதுபற்றிக் கதைப் பதானல் அவர்களைச் சந்திக்க விருப்பங்கொண்டார். எனவே, 1905 ஜூலை 17 ஆம் தேதி அவர்களை அவர் அவருடைய இல்லமான "டொரிங்டன் ஹவுஸில்" சந்தித்து, அவர்கள் சொல்வதைக் கேட்டார். தூதுகோஷ்டியினர் அவர்களின் கருத்தை விவரமாக எடுத்துக் கூறி, முஸ்லிம் சமூகத்தின் மரபுரிமையை மிக மோசமாகப் பாதிக்கும் அவரது கட்டளையை மாற்றினாலன்றி எதிர்காலத்தில் அது பாரதூர மான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய அபாயம் இருப்பதாகத் தாம் அஞ்சுவதாகவும் கூறினர்.

முறையான தீர்ப்பொன்றை அளிப்பதற்காக அவர்களது கோரிக்கையை எழுத்திற் சமர்ப்பிக்குமாறு நீதியரசர் தூதுகோஷ்டியினரைக் கேட்டுக் கொண்டார். அப்துல் காதர் அவர்கள் உயர்நீதிமன்றத்துக்கு மகஜரொன்றைச் சமர்ப்பித்தார். எனினும், தம் கட்டளையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நீதியரசர் லயாட் முயற்சித்ததனால் துருக்கித் தொப்பி அணிந்து நீதிமன்றத்தில் ஆஜராவதைத் தடை செய்ய 1905 செப்ரெம்பர் 19 ஆம் தேதி உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமுதாயம் ஒரு கூட்டு நடவடிக்கை எடுக்க முனைந்ததில் வியப்பில்லை. இத் தீர்ப்பை எதிர்த்து ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் உயர்மட்ட நிலையில் நடவடிக்கை மேற்கொள்ள "துருக்கித் தொப்பிக் குழு"வொன்றும் நியமிக்கப்பட்டது. அதிற் பின்வருவோர் அங்கம் வகித்தனர்:

1. ஜனாப் எம். எல். எம். ஸெய்னுதீன் ஹாஜியார், மாநகர சபை உறுப்பினர்
2. ஜனாப் முகம்மது மாக்கன் மாக்கர், துருக்கிக் கொன்சல்

3. ஜனாப் எம். ஐ. முகம்மது அலீ, சமாதான நீதவான்; துருக்கித் துணைக் கொன்சல்
4. ஜனாப் எஸ். எல். எம். மஹ்மூது ஹாஜியார், சமாதான நீதவான்
5. ஜனாப் ஐ. எல். எம். எச். நூர்தீன் ஹாஜியார்
6. ஜனாப் கரீம் ஜீ ஜபர் ஜீ
7. ஜனாப் எஸ். எல். நெய்னா மரிக்கார் ஹாஜியார், பொருளாளர், துருக்கித் தொப்பிக் குழு
8. ஜனாப் சீ. எம். மீரா லெப்பை மரிக்கார்
9. ஜனாப் ஏ. எல். அப்துல் கரீம்
10. ஜனாப் ஓ. எல். எம். அகமது லெப்பை மரிக்கார் ஆலிம் சாகிப்
11. ஹாஜி இப்ராஹிம் பின் அகமது
12. ஜனாப் ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், செயலாளர், துருக்கித் தொப்பிக் குழு
13. ஜனாப் ஐ. எல். எம். முகம்மது மீரா லெப்பை மரிக்கார்.
14. ஜனாப் என். டீ. எச். அப்துல் கபூர்
15. ஜனாப் பீ. ரீ. மீரா லெப்பை மரிக்கார்
16. ஜனாப் என். ஈ. எம். பக்கீர்
17. ஜனாப் முகம்மது அப்துல் காதர் ஆலிம் சாகிப்
18. ஜனாப் கே. ஏப்ரஹீம் சாகிப்
19. ஜனாப் எம். கே. எம். முகம்மது சாலிஹு
20. ஜனாப் எம். ஏ. கச்சி முகம்மது
21. ஜனாப் பீ. பி. உம்பிச்சி

உடையில் முஸ்லிம்களின் மரபுரிமையை மறுக்கும் இத் தீர்ப்புக் கெதிராக முஸ்லிமல்லாதாரும் முஸ்லிம்களுடன் சேர்ந்தனர்.

ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்களின் தலைமையில் இயங்கிய குழுவானது ஸெத் கரீம் ஜீ ஜபர் ஜீ அவர்களின் ஆலோசனையின் பேரில் புகழ் பெற்ற இந்திய முஸ்லிம் பாரிஸ்டரான மௌலவி ரபீயுத்தீன் அகமது அவர்

களை இங்கு நடைபெறவிருந்த கூட்டத்தில் பேச வரவழைத்தது. மரதானைப் பள்ளிவாசல் முற்றவெளியில் 1905 டிசம்பர் 31 ஆம் தேதி நடந்த அக்கூட்டம் முஸ்லிம்களின் அதிபெரும் பொதுக் கூட்டமெனக் கணிக்கப்பட்டது. ஸேர் ராஸிக் பரீத் அவர்களின் தந்தையான கௌவர டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான் அவர்கள் அக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.

உணர்ச்சியூட்டும் தமது உரையில் மௌலவி ரபீயுத்தீன் அகமது அவர்கள், தாம் இந்திய உயர் நீதிமன்றத்தில் எப்பொழுதும் தலையணி அணிந்தே ஆஜரானதாகவும் அதுபற்றி ஒருபோதும் தாம் கேட்கப்படவில்லையென்றும் எடுத்துரைத்தார். அத்துடன் விக்டோரியா மகாராணியின் முன் அவரது வீட்டுக் கோயிலில் தாம் துருக்கித் தொப்பி யணிந்து தோன்றியதாகவும் அவர் கூறினர். அவ்வாறிருக்க, துருக்கித் தொப்பி அணிந்து நீதிமன்றத்தில் ஆஜராவது எப்படி நீதிமன்றத்தை அவமதிப்பதாக நீதியரசர் லயாட் கருத முடியும் என்பது தமக்கு விளங்கவில்லையென்றும் அவர் எடுத்துரைத்தார்.

பிரித்தானியரின் நீதிமுறையையும் நியாய தர்மத்தையும் மத உணர்ச்சிகளைப் பேணுவதில் அவர்களுக்குள்ள ஊக்கத்தையும் புகழ்ந்துரைத்த அவர், நீதியரசர் லயாடின து கட்டளையானது பிரித்தானிய பரிபாலன முறைக்கு முற்றும் முரணுனது எனக் கண்டித்தார். இதுபற்றி பிரித்தானிய அரசுக்கு மேன்முறையீடு செய்ய வேண்டுமென அக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, சட்டவறிஞர்களின் மரபங்கியுடன் முகம்மதிய சட்ட அறிஞர்கள் துருக்கித் தொப்பியணிந்து நீதிமன்றத்தில் ஆஜராக முடியுமென குடியேற்ற நாட்டுச்

செயலாளர், துருக்கித் தொப்பிக் குழுத் தலைவருக்கு அறிவித்தார்.

இலங்கையில் பிரித்தானிய பேரரச ஆட்சி நிலவிய ஒரு காலத்தில் பிரித்தானிய நீதியரசரொருவரின் ஆணையை ஏற்காமல் இலங்கை முஸ்லிம்களின் மரபுரிமையைக் காத்த பெருமை எம். சி. அப்துல் காதர் அவர்களையே சாரும்.

அப்துல் காதர் அவர்கள் ஓர் அட்வகேட் மாத்திரமல்ல. முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல துறைகளிலும் ஈடுபட்ட ஒருவர். கொழும்பு அல் மத்ரஸதுல் ஸாஹிராவின் முகாமைப் பதவியையும் அவர் ஒரு சிறிது காலம் வகித்தார். சட்ட உலகம் அவரைப் பெரிதும் வேண்டி நின்றதை அவரால் மறுக்க முடியவில்லை. எனவே, காத்தான்குடியைச் சேர்ந்த அவரின் நண்பரான புரக்டர் ஏ. எம். சரீபு அவர்களின் அறிவுரையின் பிரகாரம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் தொழிற் பயிற்சி புரிவதற்காக அவர் காத்தான்குடியில் குடியமர்ந்தார்.

சட்டத் துறையில் ஈடுபட்ட போதிலும் அவர் கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகத்திலும் முகம்மதிய பதிவுக் கட்டளைச் சட்டத் திருத்தக் குழுவிலும் சிறப்புமிக்க ஓர் உறுப்பினராகக் கடமையாற்றினர். அக் குழுவில் கௌரவ டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான், கௌரவ எச். எம். மாக்கன் மாக்கார் போன்ற முஸ்லிம் தலைவர்களும் செயலாற்றினர்.

எம். சி. அப்துல் காதர் அவர்கள் அரசியல் அறிவுத் திறன் மிக்கவராக இருந்தார். இலங்கை அரசியமைப்பைத் திருத்துவதற்காக லண்டனிலுள்ள குடியேற்றநாட்டு அலு

வலகத்துக்குச் சென்ற முஸ்லிம் தூதுகோஷ்டியில் அவரும் அங்கம் வகித்தார். திருவாளர்கள் ரீ. பி. ஜாயா, எம். எம். மஹ்ரூபு. எப். குலாம் ஹுசைன் ஆகியோரும் அத் தூது கோஷ்டியில் சென்றவர்களாவர். தேர்தல் மூலம் அரசாங்க சபையில் குறைந்தது மூன்று இனவாரியான ஆசனங்களை முஸ்லிம்களுக்காக ஒதுக்க வேண்டுமெனக் கேட்பதே அத் தூதுகோஷ்டியின் பணியாக இருந்தது.

முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டமானது அப்துல் காதர் அவர்கள் அங்கம் வகித்த ஒரு குழுவின் சிபார்சின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது. அவர் பொதுநல சேவையில் எவ்வளவு ஆர்வம் கொண்டவராக இருந்தாரெனின், "பிரண்ட் இன் நீட்" கழகத்திலும் "புரவின் சியல் ரூேட் கமிட்டி"யிலும் ஓர் உறுப்பினராக இருந்தார். அவர் மட்டக்களப்பு முதல் நகரசபையின் ஓர் உறுப்பினராவார். அத்துடன் முதற் "காழிமார்" சபையிலும் அவர் அங்கம் வகித்தார். அவர் எங்கு சேவை செய்தாலும் தியாக உணர்வுடனும் பொதுநலன் கருதியும் அதனைச் செய்தார். மட்டகளப்பில் ஏறக்குறைய நாற்பது வருட காலம் அவர் சட்டப் பயிற்சி செய்தார்.

எம். சீ. அப்துல் காதர் அவர்கள் பயபக்தி நிறைந்த ஒரு முஸ்லிமாவார். ஐங்காலத் தொழுகையை நேரந் தவறாது தொழுது வரும் பழக்கம் அவரிடமிருந்தது. 1946 மே 21 ஆம் தேதி அவர் காத்தான்குடியில் இறையடி சேர்ந்தார். அவரது பூதவுடல் "கப்றை" நோக்கி எடுத்துச் செல்லப்படுவதற்கு பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரும் அவர் கடமையான தொழுகையை நிறைவேற்றியவராக இருந்தார்.

## எஸ். எல். மஹ்மூது ஹாஜியார்

சின்னலெப்பை மஹ்மூது அவர்கள் 1868 செப்ரெம்பரில் பிறந்தார். அவர் புறக்கோட்டையில் செல்வம் கொழிக்கும் வர்த்தகராக இருந்த பீ. ரீ. சின்னலெப்பை என்பாரின் மகனுவார். ஆங்கிலக் கல்வியை வெஸ்லி கல்லூரியில் பெற்ற மஹ்மூது, அவரது இல்லத்துக்கு அடுத்து வதிந்த எஸ். டீ. இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆலிம் அவர்களிடம் அறபு மொழி கற்ருர். அவர் அவரின் இளைய சகோதரரான எஸ். எல். அப்துல் ரஹீமுடன் வியாபாரத்தில் ஈடுபட்டார்.



1883 இல் அவர் அவரின் அறபு மொழி ஆசிரியருடன் முஸ்லிம் நாடுகளுக்குப் பிரயாணம் செய்தார். அவர்கள் விஜயம் செய்த முதல் நாடு எகிப்தாகும். எகிப்திலிருந்து இஸ்தாம்பூலுக்குச் சென்ற அவர்கள் அங்கிருந்து ஹஜ்ஜுக்காக மக்காவுக்குச் சென்றனர்.

அறபு நாடுகளின் வர்த்தகர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட மஹ்மூது ஹாஜியார் அவர்கள் இலங்கை விளைபொருட்களை அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததோடு மத்திய கிழக்கு விளைபொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்தார். ஸாஹிரா மத்ரஸாவின் (ஸாஹிராக் கல்லூரி)

பராமரிப்புக்காகக் கட்டப்பட்ட வீடுகளுக்கான செலவு 12,750 ரூபாவில் மஹ்மூது ஹாஜியார் அவர்களின் பங்கு 2,000 ரூபாவாகும். அவர் இங்கிலாந்தில் இருந்த சமயம் லிவர்பூலுக்கும் விஜயம் செய்தார். செய்கு அப்துல்லாஹ் அவர்கள் அங்கு இஸ்லாமிய பிரசாரம் நடாத்திக்கொண்டிருந்தார். அங்கு மஹ்மூது ஹாஜியார் அவர்கள் விஜயம் செய்த போது ஆங்கிலப் பத்திரிகைகள் அவரைச் சிங்கள முஸ்லிம் எனக் குறிப்பிட்டன.

1900 இல் சட்டவாக்க சபையில் முகம்மதிய ஆசனம் வெறுமையான போது சோனகர்களில் ஒரு பகுதியினர் அவரது பெயரைத் தெரிவுக்காகச் சமர்ப்பித்தனர். ஹமீதிய்யாப் பாடசாலையை நிர்வகித்த ஜம்மிய்யத்துல் ஹமீதிய்யாக் கல்விக் கழகத்தின் செயலாளராக அவர் விளங்கினார்.

இலங்கையில் குடியமர்ந்த ஆரம்ப முஸ்லிம்கள் சாபிஈ மத்ஹபைப் பின்பற்றுவோராக இருந்தனர். அவர்கள் 9 ஆம் நூற்றாண்டின் முஜத்திதான கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரழி) அவர்களின் காதிரிய்யாத் தரீக்கைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

1860ஆம் ஆண்டளவில் பெஸ்ஸிலிருந்து (மொறொக்கோ) பெரியாரான செய்கு ஒருவர் கொழும்புக்கு வருகை தந்தார். அவர் அப்போது மக்காவிலிருந்து கொண்டு சாதுலீ (ரஹ்) அவர்களின் தரீக்காவைப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார். குத்புஸ் ஸமான் செய்கு ஸாலிஹுல் பாஸி உஸ் சாதுலி என்பதே அவர்களது நாமமாகும். பெருமானார் (ஸல்) அவர்களின் புனித பிறப்பிடத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தரீக்காவாதலால் காதிரிய்யாக்களில் பெருந்தொகையானோர் அத் தரீக்காவிலே சேர்ந்தனர். அவ்வியக்கம் 'பாஸிய்யத்துல் சாதுலிய்யா' என அழைக்கப்பட்டது.

மஹ்மூது ஹாஜியார் அவர்கள் அத் தரீக்காவைப் பின்பற்றியவர்களில் பிரதான ஒருவராக விளங்கினார். 'ஸாவியா' என அழைக்கப்பட்ட பள்ளிவாசல்கள் பெருமளவில் கட்டப்பட்டன. களுத்துறை மாவட்டத்தைச்

சேர்ந்த மொல்லிமலைப் பள்ளிவாசலொன்றில் முதன் முதல் சாதுலிய்யாக்கள் அவர்களின் 'ஹாளரா'வை நடத்த முனைந்தனர். அந்த "ஹாளரா" முறை காதிரிய்யா ஜமாஅத்தார்களுக்குப் புதிதாக இருந்தது. அந்த 'ஹாளரா' முறைக்கு காதிரிய்யாக்கள் மறுப்புத் தெரிவித்தனர். இவ்விதம் மறுப்புத் தெரிவிப்பவர்களைச் சாதுலிய்யாக்கள் "முன்கிர்" என்றனர். காதிரிய்யாக்களும் சாதுலிய்யாக்களை அதே புனைபெயர் கொண்டு அழைத்தனர். 'ஹாளரா' நடத்துவதைத் தடுத்ததற்காக "மறுப்புத் தெரிவித்தவர்"களைக் குற்றவியல் சார்ந்த அச்சுறுத்தலுக்காகத் தண்டிக்குமாறு கேட்டு சாதுலிய்யாக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். (வழக்கு இல. 5167, பொலிஸ் நீதிமன்றம், களுத்துறை; 1888 ஜூன் 28) நீதவான் திரு. சீ. எச். லீஸிங் முன்னிலையில் வழக்கு விவாசரணை எடுத்துக் கொள்ளப் பட்டது. கொழும்பிலிருந்து புகழ் வாய்ந்த வழக்குரைஞர்கள் இருதரப்பார் சார்பிலும் தோன்றினர். லீஸிங் என்பாருக்குப் பின் வழக்கை விசாரித்த பொலிஸ் நீதவான் திரு. டபிள்யு. ஈ. டேவிட்ஸன் என்பார் வழக்கைப் பல நாள் விசாரித்ததன் பின் குற்றம் சாட்டப்பட்ட எல்லோரையும் விடுவித்தார்.

சோனகர் குடியிருப்பான புதிய சோனகத் தெருவிலும் பழைய சோனகத் தெருவிலும் அவற்றைச் சூழவுள்ள இடங்களிலும் சோனகர் வாழ்ந்தனர். முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஏ. எம். வாப்பிச்சி மரிக்கார், ஹாஜி இஸ்மாயில் எபெண்டியின் குடும்பத்தினர், எம். எல். எம். இஸ்மாயில், எஸ். எம். எல். எம். ஹனீபா ஆகியோரும் ஏனைய சிலரும் கொழும்பு தெற்குக்குக் குடிபெயர்ந்தனர். அதைக் கண்ட ஏனைய சோனகர்களும் தங்கள் குடியிருப்புப் பிரதேசத்திலிருந்து கொழும்பு தெற்குக் குடிபெயரத் தொடங்கினர். 1930 ஆம் ஆண்டளவில் சோனகர்களில் பெருந்தொகையானோர் கொழும்பு தெற்கில் குடியேறியிருந்தனர். அவர்களில் காதிரிய்யாக்களும் சாதுலிய்யாக்களும் இருந்தனர். முன்னர் அவர்களின் இறந்தோர் சடலங்கள் மாளிகாவத்தை, குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடிகளில் அடக்கம் செய்யப்பட்டு வந்தன. வெள்ளவத்தை, தெஹிவளை,

கிரிலப்பொனே ஆகிய பிரதேசங்களில் நிரந்தர குடியிருப்பாளர்களாய் இருந்தவர்களின் சடலங்கள் தெஹிவளை ஹொஸ்ப்பிட்டல் வீதி ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டு வந்தன. கொழும்பு தெற்குக்குக் குடிபெயர்ந்த சிலரும் அப் பள்ளிவாசலுக்கு இறை வணக்கத்துக்காகச் சென்றதோடு தங்கள் இறந்தோர்களின் சடலங்களையும் அங்குள்ள மையவாடியிலேயே அடக்கம் செய்தனர்.

1935 இல் வெள்ளவத்தையில் வதிந்த பிரபல சாதுலீ ஒருவர் காலம் சென்ருர். அவரது உடல் தெஹிவளை காதிரிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பள்ளிவாசலில் ஜனூஸாத் தொழுகை நடாத்தப்பட்டது. பள்ளிவாசலின் கதீபான எம். எம். நூஹு லெப்பை அவர்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் கே. எம். அப்துல் மஜீது அவர்களும் அதிற் கலந்து கொண்டனர். தொழுகையில் கலந்துகொண்டவர்களில் காதிரிய்யாக்களும் இருந்தனர். கூடியிருந்த சாதுலிய்யாக்கள் சந்தூக்கைச் சுற்றி 'ஹாளரா' நடாத்தத் தொடங்கினர். அதைக் காதிரிய்யாக்கள் எதிர்க்கவே பள்ளிவாசலில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டது.

மஹ்மூது ஹாஜியார் அவர்கள் பள்ளிவாசலின் கதீப் அவர்களையும் நம்பிக்கைப் பொறுப்பாளரையும் பள்ளிவாசலின் புறத் திண்ணைக்கு அழைத்துச் சென்று 'ஹாளரா'வின் தாத்பரியத்தை விளக்கிக் கொண்டிருந்தார். அதற்கிடையில் சாதுலிய்யாக்கள் 'ஹாளரா'வை முடித்துக் கொண்டு மையித்தை அடக்கத்துக்காக எடுத்துச் சென்றனர். கதீப் அவர்களும் நம்பிக்கைப் பொறுப்பாளரும் சாதுலிய்யாக்களுக்கு விரோதமாக பொலிஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். (வழக்கு இல. 29671). சாதுலிய்யாக்கள் குற்றவியல் சார்ந்த பலாத்காரத்துக்காகவும் பயமுறுத்தலுக்காவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். மஹ்மூது ஹாஜியார் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் சாட்சியமளித்தார். அதிலே அவர், மையித்தைக் கொண்டு வந்தவர்களுக்கு பள்ளிவாசலில் 'ஹாளரா' வைக்க எல்லாவித உரிமையும் இருக்கின்றது எனக் குறிப்பிட்டார். பின்னர் வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது.

இவ்விதம் காதிரிய்யா-சாதுலிய்யாப் பிரச்சினையை மஹ்மூது ஹாஜியார் அவர்கள் தீர்த்துவைத்தார். அவர் செய்கு அப்துல் கனீ ஸாஹிபுல் காதிரீ ஆரிப் பில்லாஹ்

அவர்களின் முரீதாக ஆனார். இஸ்லாமிய மறைஞானத்தில் (ஸூபித்துவத்தில்) அவருக்குப் பெரிதும் ஈடுபாடிருந்தது. அறபு மொழியிலும் அவர் திறமை மிக்கவர். 'திக்ரின்' பலதரப்பட்ட நிலையில் லயித்திருந்தபோது அவர் மிக உயர்ந்த ஆன்மீக நிலையை அடைந்தார். சந்தடியற்ற தோட்டமொன்றில் அமைந்த இல்லமொன்றில் செய்கு அவர்களால் மஹ்மூது ஹாஜியார் அவர்கள் 'கல்வ'த்தில் வைக்கப் பட்டார். அப்போது அவர் ஹிஜ்ரி 1345 சஃபான் பிறை 12 இல் மிக உயர்நிலையிலான ஆன்மீக காட்சியொன்றைக் கண்டார். அக் காட்சியில் அவர் கிழ்று (அலை), முகம்மது கௌதுல் காலிதீன், ஹழறத் குத்துபுல் மஜீத் காதிரொலி சஞ்ச்ஸொபாய் சாஹுல் ஹமீது, குத்புர் ரப்பானீ முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ, குத்புல் அக்பர் செய்கு அபுல் ஹஸன் அலீயுஷ் ஷாதுலீ ஆகிய பெரியார்களைக் கண்டார். அவ்வில்லம் முதலியார் ஆலிம் அவர்களின் இல்லமாகுமென செய்கு அவர்கள் அவருக்கு அறிவித்தார்.


புதிய சோனகத் தெரு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்த அவர் அப்துல் கனீ பாவாவின் ஸாலிஹூ தக்கியாவின் முக்கிய உறுப்பினராகவும் ஜமாஅத்துல் ஸாஹிலிய்யா புர்தா மஜ்லிஸின் தலைவர்களில் ஒருவராகவும் விளங்கினார்.

சமாதான நீதவானாக அரசினரால் நியமிக்கப்பட்ட அவர் "துருக்கித் தொப்பிக் குழு"வின் ஓர் உறுப்பினருமாவார்.

அவர் 1940 ஜூன் 24 இல் இறையடி சேர்ந்தார். அப்போது அவரது வயது 72 ஆகும். புதிய சோனகத் தெரு ஸாலிஹூத் தக்கியாவில் அப்துல் கனீ பாவா அவர்களின் சமாதிக் கருகில் அவரது உடலை நல்லடக்கம் செய்யக் கருதிய போதிலும் அவரின் உறவினர்கள் அதனை அனுமதிக்கவில்லை. அவரது உடல் மாளிகாவத்தையில் அவரின் தந்தையாரின் கப்றுக்கருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## ஸேர் முகம்மது மாக்கன் மாக்கர் எபெண்டி

காலியைச் சேர்ந்த உதுமாலெப்பை மரிக்கார் என்பவருக்கு ஆண்மக்கள் மூவர் இருந்தனர். நெய்னா மரிக்கார், மாக்கன் மரிக்கார், ஹாஜி அகமது என்போரே அவர்கள். நெய்னா மரிக்கார் அவர்களுக்கு அனேக ஆண்மக்கள் இருந்



தனர். அவர்களில் மூத்தவர் முகம்மது இஸ்மாயில் என்பவராவார். அவர் என். எம். இஸ்மாயில் எனும் அவரது பெயரின் கீழ் ஓர் மாணிக்கக்கல், நகை வியாபாரத்தை ஆரம்பித்தார். அவரது இறப்புக்குப் பின் அவரின் ஆண்மக்கள் மூவரான மஹ்மூது அலி, முகம்மது ஜமீல், முகம்மது காஸிம் என்போர் அந்த வியாபார நிறுவனத்தின் பெயரை "எம். அலி அன் பிரதர்ஸ்" என மாற்றி, விக்டோரியா ஆகேடில் மிகவும் லாபகரமான ஒரு வியாபாரத்தை நடத்தினர். அத்துடன், ஹட்டனுக் கருகாமையிலுள்ள வட்டவல தேயிலைத் தோட்டத்தினதும் சொந்தக்காரர்களாக ஆகினர். முகம்மது காஸிம் என்பார் இலங்கைக் கிரிக்கட் சங்கத்தின் கௌரவ செயலாளராக ஏறக்குறைய பத்து வருட காலம் சேவை செய்து புகழீட்டிய ஒருவர்.

ஹாஜி அகமது என்பாருக்கு கபீர் எனும் ஓர் ஆண் மகவு மாத்திரமே இருந்தது. அவர் காலி கோட்டைப்

பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுதுகொண்டிருக்கும் பொழுது காலன் வசப்பட்டார். அப்போது அவர் இளம் பிராயத்திலே இருந்தார்.

ஓ. எல். எம். மாக்கன் மரிக்கார் அவர்கள் காலிமுனையில் 1860 இல் ஓர் மாணிக்கக்கல், நகை வியாபாரத்தை ஆரம்பித்தார். அது சிறப்பாக நடைபெற்றது. கொழும்பு, கப்பல்கள் வந்து சேரும் துறைமுகமாக ஆக்கப்பட்டதும், அவ்
வியாபாரத்தை அவர் [redacted]
வியாபார நிறுவனம் கிராண் [redacted]
இலக்க இடத்தில் இருந்த [redacted]
1905 இல் அவர் கிராண் [redacted]
மேலும் விசேட ஓரிடத்து [redacted]
அவரின் வாடிக்கைக்காரர் [redacted]
பத்தினரும் பிரபுக்களும் [redacted]
மன்னன், ஐந்தாம் ஜோர்ஜ் [redacted]
களிடையே மன்செஸ்டர் [redacted]
ஐலஸ்போட் கோமான், [redacted]
கொம்பே பிரபு ஆகியோரு [redacted]
வர். 1901 இல் ஐந்தாம் ஜே [redacted]
னும் கண்டியில் "கிங்ஸ் ப [redacted]
கக்கல் கண்காட்சியைப் ப [redacted]
அவர்கள் மாக்கன் மாக்கர் [redacted]
வியதோடு அங்கிருந்த பல [redacted]
காக அவர்களை வெகுவாக [redacted]

மாக்கன் மாக்கர் அவ [redacted]
களுக்கு மாணிக்கக்கற்களை அடிக்கடி ஏற்றுமதி செய்தார். புகழ்பெறு 105 கரட் நிறைகொண்ட வைடூரியமும் "ப்ளு ஜயண்ட் ஒப் த ஓரியண்ட்" என வர்ணிக்கப்பட்ட 500 கரட் நிறைகொண்ட நீலமணிக் கல்லும் "வண்டர் ஸ்டார் ஒப் ஏசியா" என வர்ணிக்கப்பட்ட 225 கரட் நிறைகொண்ட ஆறு நூலும் அவர் வசமிருந்த பொக்கிஷங்களாகும். மேலும், பழங்கால சோனகப் புதுமணப்பெண்களால்

அணியப்பட்ட பழம்பாணியான நகைகளும் அவரது வியா பார நிறுவனத்தில் இருந்தன.

ஓ. எல். எம். மாக்கன் மாக்கர் அவர்கள் 1901 ஜூலை 4 ஆம் தேதி காலம் சென்றார். அவரின் இறப்புக்குப் பின் அவரின் நான்கு ஆண் மக்களான முகம்மது மாக்கன் மாக்கர், சம்ஸுதீன் மாக்கன் மாக்கர், அப்துல் வதூத் மாக்கன் மாக்கர், முகம்மது ஸாலிஹ் மாக்கன் மாக்கர் ஆகியோர் அவ் வியாபார நிறுவனத்தின் சொந்தக்காரர்களாயினர். ஸாலிஹ் மாக்கன் மாக்கர் அவர்கள் இளமையிலேயே காலம் சென்றார். அவர் ஐம்பதினாயிரம் ரூபாவை முஸ்லிம் மாணவர்களுக்கு உதவும் நோக்கமாக "ஸாலிஹ் மாக்கன் மாக்கர் முஸ்லிம் கல்வி நம்பிக்கைப் பொறுப்"பை நிறுவுவ தற்காக விட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது.

1942 இற்கு முன், கெய்ரோவில் செபர்ட் ஹோட்டல், கொண்டினண்டல் சவோய் ஹோட்டல், செமிராமிஸ் ஹோட்டல் ஆகியவற்றிலும் ஜெரூசலத்தில் கிங் டேவிட் ஹோட்டலிலும் அவ் வியாபார நிறுவனம் கிளைகளைக் கொண்டிருந்தது.

பதின்மூன்று பேரைக் கொண்ட ஒரு குடும்பத்தில் முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் ஐந்தாவதாகப் பிறந் தார். அவர் பிறந்தது 1879 செம்ரெம்பர் 7 ஆம் தேதி காலி கோட்டை சேச் வீதியிலுள்ள 47 ஆம் இலக்க இல் லத்திலாகும். அவர் புறக்கோட்டை வெஸ்லி கல்லூரியில் கல்வி பயின்றார். கல்லூரியின் கிரிக்கட் விளையாட்டுக் கோஷ்டி யில் எம். எம். முகம்மது எனும் பெயரின் கீழ் அவர் விளையாடி னார். விளையாட்டில் அவரது சமகாலத்தவர்கள் கோஷ்டிக் கப்டனான சி. ஈ. பெரேராவும் உலக உத்தியோகபூர்வ 'ரெகோட் கீப்ப'ரான எஸ். பீ. புஞண்டருமாவர். அவர் மருத்துவ புகுமுகப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய தன் பின் வர்த்தகத்தில் ஈடுபட்டார்.

அவர் காலியில் துருக்கிக் கொன்சலாக இருந்தார். பின் னர் 1903 இலிருந்து 1915 வரை கொழும்பில் துருக்கிக்

கொன்சலாக இருந்தார். 1906 இலிருந்து 1931 வரை காலி மாநகர சபை உறுப்பினராக விளங்கிய அவர் 1940 இலிருந்து 1943 வரை கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராக விளங்கினார். 'துருக்கித் தொப்பிக் குழு'வில் அங்கம் வகித்த அவர் அகில இலங்கை சோனக சங்கத்தின் ஆரம்ப தலைவராகவும் பலவருட காலம் சேவை செய்தார். பின்னர் அவர் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் ஆரம்ப தலைவராகவும் விளங்கினார்.

காலியிலுள்ள இப்ராஹிமிய்யா அபிறக் கல்லூரி அவரின் தாயாரான திருமதி ஓ. எல். எம். மாக்கன் மாக்கர் அவர்களால் ஆரம்பிக்கப் பட்டது. அதன் பராமரிப்புக்காக அவர் அறக்கொடைகளை விட்டுச் சென்றார்.

பின்னர் ஹாஜி முகம்மது மாக்கன்மாக்கர் எபெண்டி என அழைக்கப்பட்ட முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் 1910 ஜூலை 24 இல் கொழும்பு டரற் வீதி "முயிர்பேணில்" வசித்த எஸ். எல். நெய்னா மரிக்கார் ஹாஜியார் அவர்களின் மூத்த புதல்வியான நூர் நயீமா என்பவரை மணந்தார்.

மக்காவையும் மதீனாவையும் இணைக்கும் ஹிஜாஸ் ரெயில்வே 1907 இல் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதற்காக இலங்கை முஸ்லிம்கள் துருக்கி சுல்தானுக்கு ஒரு வாழ்த்துரையை துருக்கிக் கொன்சலான முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் மூலம் அனுப்பிவைத்தனர். அதற்கான கூட்டம் கொழும்பு புதிய சோனகத் தெரு பெரிய பள்ளி வாசலில் நடைபெற்றது.

முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் 1906 இல் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றினார். அவருடன் அபூபக்கர் முதலியாரின் மகளான அவரின் அன்னை ஆமினா உம்மாவும் முதலியார் காஸிம் லெப்பை மரிக்காரின் மகளான அவரின் பாட்டி பாத்துமுத்துவும் கூடச் சென்றனர். அவரின் தாய் வழி மாமனை அலு லெப்பை மரிக்கார் அவர்களும் "இஃவான்"களான எஸ். எல். எம். எச். அப்துல் வஹாப், எச். எஸ். எம். இஸ்ஸதீன் ஆகியோரும் அக் குழு

வில் இடம்பெற்றனர். அவர்கள் அரேபிய பாலைவனத்தை ஒட்டகைகளிற் கடந்து செல்லும் பொழுது அனேக துணிகர நிகழ்ச்சிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அங்கே ''பதவி'' (காட்டறபிகள்) களுடன் மோதவேண்டிய நிலை அவர்களுக் கேற்பட்டது.

துருக்கிக் கொன்சல் என்ற முறையில் அவர் 1909 இல் இஸ்தம்பூலுக்கு விஜயம் செய்தார். அதிலே அவருடைய சகோதரர் அப்துல் வதூதும் கலந்து கொண்டார். அங்கிருந்து அவர்கள் ரோமாபுரி, பாரிஸ், லண்டன் ஆகிய நகரங்களுக்கும் வியாபார நோக்கமாகச் சென்றனர். அவர் லண்டனிலிருந்த பொழுது அவரை குரு பிரபு அவர்கள் ஏழாவது எட்வட் மன்னருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் முஸ்லிம்களின் கல்வி நலனில் பெரிதும் அக்கறை கொண்டார். ஸாஹிராக் கல்லூரியின் பராமரிப்புக்காக டாலி வீதியில் கட்டப்பட்ட வீடுகளின் செலவான 12,750 ரூபாவில் அவர் ஆயிரம் ரூபாவைத் தம் கணக்கில் வழங்கினார். அவர் எம். ரீ. அக்பர் அவர்களுடனும் மற்றும் சிலருடனும் சேர்ந்து இலங்கை முஸ்லிம் கல்விக் கழகத்தை நிறுவினர். அக் கழகமானது ஹுசைனி ஆண்கள் பாடசாலையையும் பாத்திமா பெண்கள் பாடசாலையையும் ஸ்தாபித்து நடாத்தி வந்தது.

1921 ஒக்டோபர் 5 ஆம் தேதி இலங்கை முஸ்லிம் மகளிர், தேசாதிபதி ஸேர் ஹென்றி மனிங்கின் பாரியாரான மனிங்க் அம்மையாருக்கு ஒரு வரவேற்பளித்தது. முகம்மது மாக்கன் மார்க்கர் அவர்களின் கொள்ளுபிட்டி இல்லமான ''விலா ஸ்தம்பூ''வில் நடைபெற்ற அவ் வரவேற்பு வைபவத்தில் மனிங்க் அம்மையாருக்கு வாழ்த்துப் பத்திரமொன்று அளிக்கப்பட்டது. அவ் வரவேற்புக் குழுவில் இடம் பெற்றோர், திருமதி எஸ். எல். நெய்னா மரிக்கார், திருமதி ஈ. ஜீ. ஆதமலி, திருமதி சீ. எம். மீராலெப்பை மரிக்கார், திருமதி எம். ஏ. சீ. முகம்மது, திருமதி டபிள்யு.

எம். அப்துர் ரஹ்மான், திருமதி எஸ். எல். மஹ்மூது ஹாஜியார், திருமதி ஏ. ஏ. எம். சலீம், திருமதி எம். ஆர். அக்பர், திருமதி கௌஸ் முஹ்யிதீன், திருமதி என். என். எச். ஜலாலுதீன், திருமதி எச். எம். மாக்கன் மாக்கர் ஆகியோராவர்.

1924 இல் சட்டவாக்க சபையில் அகில இலங்கை முகம்மதிய ஆசனத்துக்கு முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1931 இல் அவர் அரசாங்க சபைக்கு மட்டக்களப்பு தெற்குத் தேர்தல் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அத் தேர்தலில் அவர் திரு. ஈ. ஆர். தம்பிமுத்து என்பாரைத் தோற்கடித்து, அப்பகுதி முஸ்லிகளிடையே ஓர் அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டினார். அவர் போக்குவரத்து மராமத்து அமைச்சராக நியமிக்கப் பட்டார். இந்நாட்டில் வருமான வரியை அறிமுகம் செய்வதற்காக அமைச்சரவை தீர்மானித்த பொழுது அவரது வாக்கே தீர்மான வாக்காக அமைந்தது. 1938 இல் அவருக்கு ஸேர் பட்டம் வழங்கப்பட்டது. அப்போது அவருக்கு அவரது பிறந்த ஊரான காலியில் பிரமாண்டமான ஒரு பொது வரவேற்பு அளிக்கப் பட்டது. அதிலே அவர் இலங்கையில் ஒரு சிங்கள அரசாங்கத்தை நிறுவுவதற்கு ஆதரவாகப் பேசினார். அவ்விதம் பகிரங்கமாக ஆதரவளித்த முதல் முஸ்லிம் அவராவார். ஆனால், அவ்வரசாங்கம் நீதியையும் நியாயத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். உண்மையிலே அகில இலங்கைச் சோனகர் சங்கத்தின் சிங்கள சார்புப் போக்கானது ''ஐம்பதுக் கைம்பது'' கோஷ்டியினரின்[1] முதுகெலும்பை நொறுக்கியது என்று கூற வேண்டும்.

---

1. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் கோரிக்கை.

அவருக்குப் பின் சோனகர் சங்கத்தின் தலைவரான ஸேர் ராசிக் பரீத் அவர்கள் இந்த "ஐம்பதுக் கைம்பது" கோஷம் திருகும் வரை சங்கத்தின் அக் கொள்கையில் விடாப்பிடியாக நின்றார்.

ஸேர் முகம்மது மாக்கன் மாக்கர் அவர்கள் இலங்கையின் முதற் பாராளுமன்றத்தில் செனெற்றராக 1947 இல் நியமிக்கப் பட்டார். 1952 மே 10 ஆம் தேதி (ஹிஜ்ரி 1371 ஷஃபான் 15) அவர் காலம் செல்லும் வரை அவர் அப்பதவியில் நீடித்திருந்தார். அவரின் பாரியார் அவருக்கு முன்
[redacted] டபிள்யு. எம். அப்துர்
[redacted] எச். ஜலாலுத்தீன் ஹாஜி
[redacted] யந்த நண்பராவர்.

[redacted] பேராதனை வளாகத்தில்
[redacted] ற்காக மாக்கன் மாக்கர்
[redacted] வை அளித்துச் சென்றார்.
[redacted] ரின் உயர் கல்விக்காகவும்
[redacted] வளர்ச்சிக்காகவும் அவர்
[redacted] யும் அளித்துச் சென்றார்.

[redacted] ம் பிரபலம் வாய்ந்தவர்
[redacted] ான அகமது ஹுஸைன்
[redacted] வில் ஈடுபாடு கொண்டவர்.
[redacted] பினராகவும் பாராளுமன்ற
[redacted] ு செய்யப்பட்டார். இன்
[redacted] ாக்கர் அவர்கள் பிரசித்தி
[redacted] வார். இளையவரான வைத்
[redacted] மாக்கர் அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழக மருத்துவப் பேராசிரியராக இருந்தார்.

# ரி. பீ. ஜாயா

துவான் பிரானுதீன் ஜாயா அவர்கள் மலாய் இனத்தைச் சேர்ந்தவர். அவர் பயிற்சிபெற்ற ஒரு பட்டதாரி ஆசிரியராக விளங்கினர். மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றிய அவரை மரதானைப் பள்ளிவாசல் நிறைவேற்றுக் குழுவினர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக நியமித்தனர். அவர் ஒரு சிறந்த கல்வித்துறை வித்தகராக இருந்ததோடு முன்னேறிவரும் முஸ்லிம் இளைஞர்களைப் பயிற்றுவிக்கத் தகுந்த சிறந்தவொரு முஸ்லிமாகவும் விளங்கினர். இஸ்லாமிய வரலாற்றில் அவருக்கிருந்த அறிவு மிக ஆழமானது. ஸாஹிராக் கல்லூரியின் முன்னேற்றத்துக்காக பள்ளிவாசற் குழு அவருக்கு முழு ஆதரவையும் அளித்தது. பாடசாலை அதிபர் என்ற முறையில் அரசாங்கம் அவருக்கு வழங்கிய சம்பளம்போதாதெனக் கண்ட மரதானைப் பள்ளிவாசற் குழுவினர் அவருக்கு மேலதிகமாக மாதம் ஆயிரம் ரூபாவை வழங்கியது.



ஜாயா அவர்கள், ஸாஹிரா ஆசிரியர் குழாத்தைச் சிறந்த பட்டதாரிகளைக் கொண்டு நிலைப் படுத்தியதோடு கல்லூரி மாணவர்களுக்காக விடுதியொன்றையும் நிறுவினர். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது ஸாஹிராக் கல்லூரிக் கட்டடம் இராணுவத்தினரின் உபயோகத்துக்காக எடுக்கப்

பட்டது. அப்போது அவர் கம்பளை, அளுத்கமை, கொம்பனித்தெரு, மாத்தளை ஆகிய இடங்களில் ஸாஹிராக் கல்லூரிக் கிளைகளைத் தோற்றுவித்தார். இன்று பல துறைகளிலும் சிறந்து விளங்கும் அனேக முஸ்லிம் பெருமக்கள் ஜாயா அவர்களின் கீழ் ஸாஹிராவில் படித்தவர்கள் என்று கூறலாம். அவர் கொழும்பு ஹமீதிய்யாப் பாடசாலையினதும் டெவ்ஹாம் பாடசாலையினதும் முகாமையாளராகவும் விளங்கினார்.

அரசியற் களத்தில் இறங்கிய அவர் 1924 ஆம் ஆண்டில் சட்டவாக்க சபைக்கு அகில இலங்கை முஸ்லிம் தொகுதிக்காக மூன்றாவது உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டவாக்க சபையில் இனவாரியான பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படல் வேண்டுமெனக் கேட்டு அவர் லண்டனுக்கு ஒரு முஸ்லிம் தூதுக் குழுவை அழைத்துச் சென்றார். அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவராக அவர் பல வருட காலம் சேவை புரிந்தார்.

1936-45 வருட காலத்தில் அவர் அரசாங்க சபையில் ஒரு நியமன அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1947 இல் இலங்கையின் முதற் பாராளுமன்றத்துக்கு அவர் கொழும்பு மத்திய தொகுதியின் இரண்டாம் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டீ. எஸ். சேனநாயக்கவின் அமைச்சரவையில் தொழில் அமைச்சரானார். பின்னர் பாகிஸ்தானில் இலங்கை உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட அவர் அங்கே அவ் வரசாங்கத்தினதும் மக்களினதும் நன்மதிப்புக்குள்ளானார். அவரது சேவைக்காகக் கராச்சிப் பல்கலைக்கழகம் அவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கியது. அவர் இலங்கை திரும்பியதும் அவருக்கு இலங்கையின் நான்காவது பாராளுமன்றத்தில் மலாய் மக்களுக்கான நியமன அங்கத்துவப் பதவி கொடுக்கப்பட்டது. அனேக மலாயர் சங்கங்களின் தலைவராகச் சேவை செய்த பெருமை அவருக்குண்டு.

அவர் மிகவும் பயபக்தியுள்ள ஒரு முஸ்லிமாக விளங்கினார். இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரைக்காக மக்கா செல்லும் யாத்திரிகர்களுக்காக மக்காவில் ஒரு கட்டடத்தைச் சுவீகரிப்பதற்காகப் பேச்சு வார்த்தைகளை நடாத்தவும் ஹஜ் கடமைக்காகவும் அவர் சவூதி அரேபியா சென்ற சமயம் ஹஜ்ஜுக்குச் சில நாட்களுக்கு முன்னர் அவர் இறையடி சேர்ந்தார். அங்கே அவரது உடல் ''ஜன்னத்துல் பகீ'' இல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# டபிள்யு. எம். ஹாஷிம்



டபிள்யு. எம். ஹாஷிம் அவர்கள் 1880 ஜனவரி 26 இல் பிறந்தார். அவரது பிறப்பு சேகாதி மரிக்கார் காஸி லெப்பை மரிக்கார் முதலியாரின் மகனை சீ. எல். எம். அப்துல் மஜீது அவர்களாற் பதிவு செய்யப்பட்டது. அவர் டபிள்யு. எம். ஹாஷிம் அவர்களின் தாயாரின் சகோதரியின் கணவராவார்.

டபிள்யு. எம். ஹாஷிம் அவர்கள் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் கல்வி பயின்ருர். நொத்தாரிசு பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது அவரை அவரின்

மூத்தோர்கள் வர்த்தகத்தில் ஈடுபடுமாறு கேட்டனா
ரின் மூத்த சகோதரரான டபிள்யு. எம். அப்துல் ஜ
அவர்கள் அவரின் மாமனாரான ஐ. எல். எம். ந
ஹாஜியார் அவர்களின் இரும்பு வியாபார நிறுவ
முகாமையாளராகப் பணியாற்றினார். மற்றுமொரு ச
ரான டபிள்யு. எம். தாஹா என்பாரும் அதே வ
நிலையத்தில் கடமையாற்றினார். அப்துல் ஜப்பார் அ
அவரின் சகோதரர்களான தாஹாவுக்கும் ஹாஷி
கொழும்பு புறக்கோட்டை பிரதான வீதி 71 ஆம்
இடத்தில் ஒரு பிரத்தியேக வியாபாரம் தொடங்க
செய்தார். அது நடந்தது 1906 இலாகும். ஹாஷிம் அ
முயற்சியுள்ள ஓர் இளைஞராக விளங்கினார். அவரது
கம் விருத்தியடைந்தது. இச் சந்தர்ப்பத்தில் கிழக்கி
வம் தேடி தாஹா அவர்கள் புறப்பட்டுப் போனார்.

1907 டிசம்பர் 14 ஆம் தேதி ஹாஷிம் அ
ஓ. எல். எம். அகமது லெப்பை மரிக்கார் ஆலிம் என்
மகளை மணந்தார். அகமது லெப்பை மரிக்கார் அ
ஒரு பெரிய வர்த்தகராகவும் நிலச் சுவாந்தாராகவும்
கினார். ஹாஷிம் அவர்களின் மற்றுமோர் உறவினரும்
வர்த்தகருமான எஸ். எல். நெய்னா மரிக்கார் ஹா
அவர்களும் ஹாஷிம் அவர்களுக்கு அவரது வியாபா
ஊக்கமளித்தார். முஸ்லிம்களினதும் முஸ்லிமல்லா
தும் நலனுக்காக ஹாஷிம் அவர்கள் வழங்கிய பண
அளவு கடந்தது.

ஹாஷிம் அவர்களின் வள்ளற்றன்மையையும் க
பந்தமான சேவையையும் மதித்த அரசாங்கம்,
ஜோர்ஜ் மன்னன் அரியாசனம் ஏறிய இருபத்தைந்
திறைவாண்டில் அவருக்கு சமாதான நீதவான் பட்

வழங்கியது. மாளிகாவத்தை டென்றாம் பாடசாலை அவரா லேயே நடாத்தப்பட்டது. அப் பாடசாலையின் நிர்வாக நிதிக்கு அவரே அதிக தொகை வழங்குபவராக இருந்தார். அவரின் மூதாதையர் மரதானைப் பள்ளிவாசலுக்கும் பெரிய பள்ளிவாசலுக்கும் அதிக அளவு உதவி செய்தனர். ஹாஷிம் அவர்கள் எல்லாக் காதிரிய்யாத் தக்கியாவினதும் கந்தூரி வைபவங்களுக்கு உதவி புரிந்தார். சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் ஆரம்ப உறுப்பினரும் ஆரம்ப துணைத் தலைவரும் அவராவார். அத்துடன் அகில இலங்கை சோனகர் சங்கத்தின் துணைத் தலைவராகவும் அவர் சேவை செய்தார்.

"சோனகர்", "யோனக்க", "சிலோன் மூஅர்" என்னும் வார்த்தைகளை அகற்றி அவற்றுக்குப் பதிலாக "இலங்கை முஸ்லிம்" எனும் வார்த்தை உபயோகிக்கப் படல் வேண்டுமென கொழும்பு நகர மண்டபத்தில் யாஸீன் மௌலானா அவர்களின் தலைமையில் ஒரு "பத்வா" கூட்டம் நடைபெற இருந்தது. ஹாஷிம் அவர்கள் சோனகர் சங்கத்தின் துணைத் தலைவர் என்ற முறையில் மரதானைப் பள்ளி வாசல் கதீப் முகம்மது ஹுசைன் ஆலிம், வை. எம். காலிது, பி. டீ. எம். காஸிம், ஏ. எல். எம். லாபிர், எச். ஏ. எஸ். எம். ரபீயுதீன், ஏ. எம். ஏ. கபூர், ஏ. ஐ. எல். மரிக்கார், எம். எம். ஸுலைமான், எம். ஸீ. எம். புஆத், ஐ. எல். எம். தௌபீக் ஆகியோருடன் இணைந்து அக் கூட்டம் நடைபெறுமற் செய்வதில் வெற்றி கண்டார்.

ஹாஷிம் அவர்கள் 1960 ஜூலை 6 ஆம் தேதி இறையடி சேர்ந்தார்.

## வைத்ய திலக்க ராஜகருணா ஹாஜி முகாந்திரம்
## செய்கு முகம்மது உடையார்

முகாந்திரம் முகம்மது உடையார் அவர்கள் ஒரு யூனானி வைத்தியராவார். அவர் இலங்கைக்கு வந்த மூரிஷ் அரச வைத்தியர்களின் வழிவந்தவர். ஸ்ரீ சங்கபோ, ஸ்ரீ பராக்கிரமபாகு ஆகிய பழைய சிங்கள அரசர்களின் ஆட்சிக் காலத்தில் இருந்தே அரசாங்க சேவையில் சிறப்பிடம் வகித்த பிரசித்தி பெற்ற சிலரில் அவரின் மூதாதையரும் இடம் பெறுகின்றனர். கேகாலைத் தொல் பொருளாராய்ச்சியின் ''கெட்டபேரிய சன்னஸ'', பக்கம் 99 இல் அவரது குடும்பம் பற்றிக் குறிப்பிடப் படுகிறது.

அவரின் மூதாதையர்களில் ஒருவர் ஸ்பெயின் வடகிழக்கு கிரனடாவைச் சேர்ந்த சிறப்புமிக்க கற்றறிவாளரும் விஞ்ஞானியுமான அபூபக்கர் முகம்மது அப்துல் மாலிக் இப்னு துபைல் ஆவார்.

முகாந்திரம் முகம்மது அவர்களின் மூதாதையர் அனைவரும் யூனானி ஹக்கீம் (மருத்துவர்)களாக விளங்கினர். 1672 இல் அவரின் முப்பாட்டனாரான ராஜகருணா பெஹெறத் கே முதியன்சே அப்துல் காதிர் அவர்கள் அக்காலத்தைய மிகவும் பிரபல்யம் வாய்ந்த மருத்துவராக விளங்கியதோடு அவருக்கு ''அதிகார்'' பட்டமும் வழங்கப்பட்டிருந்தது. பூட்டனாரான பல்கும்புறே வைத்யதிலக்க ராஜகருணா கோபாலன முதியன்சலாகே பெஹெறத் கே சேகு முகம்மது உடையார் அவர்கள் அரச மருத்துவராக விளங்கினார். அரசவையின் ஓர் உறுப்

பினராகவும் அவர் இருந்தார். பாட்டனாரான சேகு மதார் உடையார் அவர்கள் யூனானி மருத்துவராகத் தொழில் புரிந்த தோடு பரணகுரு கோறளையின் தலைமை ஆரச்சியாகவும் கடமை புரிந்தார். அவருக்கு அவரின் சேவைகளுக்காக அனேக பரிசில்கள் கிடைத்தன. முகாந்திரம் அவர்களின் தகப்பனாரான செய்கு அப்துர் ரஹ்மான் பாதிலியாரும் மருத்துவத் துறையில் அவர் தம் மூதாதையரைப் பின்பற்றிய வராக இருந்தார். அப்பகுதி எல்லாச் சிங்கள இல்லங்களி லும் அவரது பெயர் அடிபட்டது.

1885 இல் பிறந்த முகாந்திரம் செய்கு முகம்மது உடையார் அவர்கள் அவரின் மூதாதையரின் பெருமைமிக்க தொழிலை நடத்துபவராக இருந்தார். 1902 இல் மருத்துவப் பயிற்சியைத் தொடங்கிய அவர் தரும நோக்கங்களுக்காக எத்தனையோ அறக்கொடைகளை ஈந்ததன் மூலமும் ஏழை களுக்கு உதவியதன் மூலம் ஒரு சிறந்த இடத்தை வகிக்கிறார். அவர் சாந்த குணமும் விருந்தோம்பும் பண்பும் படைத்தவர்.

# ஏ. எம் ஹாமிது



அஸனு மரிக்கார் ஹாமிது அவர்கள் இலங்கைச் சோன கர்களின் ஒரு பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்து செல் வத்தின் அரவணைப்பில் வளர்ந்தவர். அவரின் தந்தை யாரான எஸ். எம் அஸனு மரிக்கார் அவர்கள் கொழு ம்பு புறக்கோட்டை சைனு வீதியில் பீங்கான் வியாபா ரம் நடாத்தி வந்தார். அது அவரின் முன்னோ ரான சுல்தான் மரிக்கார், அபூலெப்பை மரிக்கார் என் பவர்களால் 1840 இல் ஸ்தா பிக்கப்பட்ட வியாபாரமா கும். ஹாமிது அவர்கள் எஸ். எம். ஹாஷிம் என்பாருடன் இணைந்து ஒருபெரும் வியாபார நிலையத்தை நிறுவினார். அந் நிறுவனம் நாண யத்துக்கும் நேர்மைக்கும் இருப்பிடமாக விளங்கியதால் சர்வதேச புகழைப் பெற்றது. "எஸ். எம். அஸனு மரிக் கார் அன் கம்பனி" என அறியப்பட்ட அந் நிறுவனம் பெரும் இலங்கை வியாபார நிறுவனங்களில் ஒரு நூற் றாண்டைக் கண்ட சிலவற்றில் ஒன்றாகும்.

ஹாமிது அவர்கள் புறக்கோட்டை காஸ்வேக்ஸ் வீதிப் பாடசாலையில் ஆரம்ப கல்வியைப் பெற்று பின்னர் முகத்து

வார சென். தோமஸ் கல்லூரியிற் பிரவேசித்தார். அவரின் சகாக்களில் ஒருவர் "தேசத்தின் தந்தை" என வர்ணிக்கப்பட்ட இலங்கையின் முதல் பிரதமரான டீ. எஸ் சேனநாயக்க ஆவார். டீ. எஸ். சேனநாயக்க அவர்கள் அவரின் உற்ற நண்பராகவும் விளங்கினார்.

மேலைத் தேயத்தினதும் கீழைத் தேயத்தினதும் ஒரு கலப்பாக விளங்கிய ஹாமிது அவர்கள் அவற்றின் கலாசாரங்களில் சிறந்தவற்றைத் தம்மில் எடுத்துக் கொண்டார். கல்வியறிவைத் தேடுவதிலும் அவர் மிகவும் ஆர்வங் கொண்டவராக விளங்கினார். அறிவுத் துறை சார்ந்த கழகமான அரச ஆசிய கழகம் இலங்கைக் கிளையில் அவர் நீண்ட காலமாக உறுப்பினராக இருந்தார். அத்துடன் வை. எம். ஸீ. ஏ. யிலும் அவர் ஒரு மதிப்புக்குரிய உறுப்பினராக விளங்கினார். அவரது சாந்தமான, தற்பெருமையற்ற நடவடிக்கைகளால் நன்மதிப்பும் நம்பிக்கையும் அவரை வந்தடைந்தன.

அவர் அகில இலங்கை சோனக சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராவார். அதன் நடவடிக்கைகளில் அவர் மிக நெருக்கமாக ஈடுபாடு கொண்டார். இலங்கை அரசியலமைப்புக்குச் சீர்திருத்தம் கொண்டுவர அனுப்பப்பட்ட சோல்பரி ஆணைக்குழுவின் முன் ஸேர் ராஸிக் பரீத் (அப்போது ஏ. ஆர். ஏ. ராஸிக்) தலைமையில் சாட்சியமளித்த அகில இலங்கை சோனகர் சங்கத்தின் உறுப்பினர்களில் அவரும் ஒருவராவார். மரதானைப் பள்ளி வாசல் நிறைவேற்றுக் குழுவில் உறுப்பினராக இருந்த அவர் அதன் செயலாளராகவும் பொருளாளராகவும் பணியாற்றினார். கௌரவ டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான்,

அல்ஹாஜ் என். டீ. எச். அப்துல் கபூர், ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், என். எச். எம். அப்துல் காதர், எம். ரீ. அக்பர் போன்றோருடன் அவர் செயலாற்றினார்.

அவர் அலவியாத் தரீக்காவைப் பின்பற்றிய பக்திமானாகவும் கொழும்பு ஜிப்ரிய்யத்துல் அலவியாத் தைக்காவைப் பரிபாலித்த 'ஸும்ரத்துல் அலவிய்யா'வின் முன்மாதிரியான ஒரு தலைவராகவும் விளங்கினார். சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் அவரும் ஒருவராவார். அத்துடன் அதன் வளர்ச்சிக்காக அனேக விதத்தில் உதவியும் புரிந்தார். அதன் மார்க்க குழுவின் தலைவராக விளங்கிய அவர் அக் குழுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கும் போது உரிய நேரத்தில் சமுகம் தந்து ஏனைய உறுப்பினர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கினார்.

சாரமும் சப்பாத்தும் அணிந்து குடையுடன் புன்முறுவல் பூத்த முகத்தினராகக் காட்சி தந்து கொண்டிருந்தவர் ஏ. எம். ஹாமிது ஆவார். எந்தக் குழந்தையும் அவரைப் பார்த்தவுடனேயே அவரை அறிந்து கொள்ளும். அவர் ஒரு சிறந்த பக்திமானாக விளங்கியதுடன் அவரது வாழ்வின் இறுதிப் பாகத்தை அனேகமாக இஸ்லாமிய நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்காகவே செலவு செய்தார்.

# எஸ். எம். இஸ்மாயில்



இலங்கைச் சோனகரிடையே ஓர் எழுச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்த ஒரு சகாப்தத்தில், காலியில் பிரசித்தி பெற்ற சோனகக் குடும்பம் ஒன்றில் முகம்மது இஸ்மாயில் பிறந்தார். அவரின் தந்தையார் காலிக் கச்சேரியில் காசாளராகக் கடமையாற்றியவர். முன்னைய தலைவர்களது வழிகாட்டலின் பேரில் பிற்போக்கான நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டிருந்த இலங்கைச் சோனகர், தாம் ஓர் அரசியற் சிந்தனையில் அகப்பட்டுத் தடுமாறிக்கொண்டிருப்பதைக் கண்டனர். அரசியலைப் பொறுத்தவரையில் முஸ்லிம் தலைமை பீடத்தில் இருந்த போட்டி பொறாமை காரணமாக மதத்தின் உயர் அந்தஸ்து கீழ்த்தர அரசியலுடன் கலக்கப்பட்டது. சோனகர் தங்கள் தனித் தன்மையை இழந்து தங்கள் தேசிய பிறப்புரிமையையும் இழக்கும் அபாயத்துக்குத் தள்ளப்பட்டனர்.

இக் கால கட்டம் பெரும் நெருக்கடி வாய்ந்த ஒன்றாக இருந்தது. இத் தடுமாற்றத்தை நீக்கத் துணிவான நடவடிக்கை எடுத்தாலன்றி முழுச் சமூகமுமே கஷ்டப்பட வேண்டிய நிலை இருந்தது. அப்போது சட்டத்தின் சிக்கல்களை விள

கும் திறம் வாய்ந்தவரும் புகழேணியில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தவருமான புரக்டர் இஸ்மாயில் அவர்கள் இவ் வாபத்தைக் கண்டார். இந்த அலை அவரையும் தாக்காமல் விடவில்லை. தம் கண்முன் தோன்றும் இவ் வபாயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள சோனக சமூகம் அவரின் உதவியை நாடியது. அவர் அகில இலங்கை சோனக சங்கத்தின் ஓர் ஆரம்ப உறுப்பினராக ஆனதோடு ஏ. ஐ. எல். மரிக்கார் அவர்களுடன் சேர்ந்து அதன் இணைச் செயலாளராகவும் கடமையாற்றினர்.

அவர் சோனகரின் சிந்தனையைக் கிளறினர். "Whither Moors"?–சோனகர் எத்திசையில்?–என்னும் எழுச்சியைத் தூண்டும் ஒரு சிறு நூலை வெளியிட்டார். அதில் அடங்கியிருந்த கருத்துக்கள் சிலரின் கண்களைத் திறந்தன. அதே நேரத்தில் பிடிவாதம், ஏனையோரின் பார்வையை மறைத்தது.

ஸேர் முகம்மது மாக்கன் மாக்கர், ஸேர் ராஸிக் பரீத் போன்றோரின் தலைமையில், எதிர்ப்புகளுக்கிடையே அவரது சங்கம் தேசிய அரசியல் உரிமைகளுக்காகப் போராடியது. இஸ்மாயில் அவர்களின் கூற்றுக்கள் சிந்தனையைக் கிளறின. அதே சமயம் அவை எதிர்ப்பையும் அதிகரிக்கச் செய்தன. அவரின் உண்மையான நோக்கத்தையும் அரசியல் மதிநுட்பத்தையும் நிரூபிக்க அதிசீக்கிரமே காலம் வந்தது. ஐக்கிய முஸ்லிம் அரசியல் கூட்டு மகஜரொன்றை அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனும் யோசனையை அவர் ஒதுக்கித் தள்ளினர். ஏனெனில், அது சோனகரின் இனவாரியான தனித்துவத்தை இழக்கச் செய்வதோடு அவர்களது அரசியல் தற்கொலைக்கும் வழிகோலும் என அவர் கருதினர். பிரத்தியேக பிரதிநிதித்துவம் பெறுவதிலேயே சோனகரின் விமோசனம் தங்கியுள்ளது என அவர் கருத்துக் கொண்டார். அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் சோனகருக்கு போதிய அளவான பிரதிநிதித்துவமும் பாதுகாப்பும் அளிக்கப்படல் வேண்டுமெனக் கோரி மகஜரொன்று தயாரிக்கப் பட்டது.

சோல்பரி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அம் மகஜரைச் சமர்ப்பித்த அகில இலங்கை சோனகர் சங்கத்தின் பேச்சுப் பாளராக அவர் இருந்தார். சோனகரின் பிரச்சினைகளை அதி திறமையாக அவர் விளக்கியதால் இந்நாட்டின் ஏனைய இனங்கள் மத்தியில் இலங்கைச் சோனகரும் ஒரு தனித்து வம் வாய்ந்த இனமாகக் கருதப்பட்டனர்.

சோனக சமூகத்தின் எல்லா முற்போக்கான இயக் கங்கள் சம்பந்தமாகவும் அவரது அறிவுரை நாடப்பட்டது. அத்துடன் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தை நிறுவுவது பற்றியும் அதன் ஆரம்ப நடவடிக்கைகளிலும் அவரது கருத்து வேண்டப்பட்டது. அப்போதெல்லாம் அவர் சிறந்த அறிவுரை வழங்கினார். அவரின் ஆழ்ந்த சிந்தனை யின் பலனாக எழுந்த யோசனைகள் இலங்கைச் சோனகரின் முன்னேற்றத்துக்காகப் பல துறைகளிலும் வழியைத் திறந்து கொடுத்தன. அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பிய எல்லா விடயங்களிலும் சோனக சமூகத்தின் தலைவர்கள் அவரின் முதிர்ந்த அறிவுரையை நாடி நின்றனர்.

சமுதாயத்தில் அவர் கௌரவிக்கப்பட்டதோடு மக்க ளின் நம்பிக்கைக்கும் உள்ளானார். சோனக இனத்தைப் பாதிக்கக் கூடிய, பிரச்சினைகளைக் கிளறிய எல்லா விடயங் களிலும் அவரின் கூற்றுக்கள் தெளிவாகவும் தர்க்கரீதியாக வும் அமைந்தன. சோனகர், அவர்களின் முன்னேற்றப் பாதையில் ஒரு திருப்புமுனையில் இருந்த ஒரு காலகட்டத்தில் அவர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்.

# எம். எல். எம். றியாழ்

எம். எல். எம். றியாழ் அவர்கள் மீராலெப்பை மரிக்கார் என்பாரின் மூத்த மகனுவார். ஒரு தொழிற்சங்க வாதியாகத் திகழ்ந்த அவரது வாழ்க்கை சுவாரஸ்யமானது. இலங்கையில் நிறுவப்பட்ட முதல் தொழிற் சங்கத்துக்காக உழைத்த அவர் பதினேழு ஆண்டுகள் கொழும்பு மாநகர சபை உறுப்பினராகத் திகழ்ந்தார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடி அவற்றை வென்று கொடுத்தவர் அவர் அவரே அவரது வாழ்க்கையைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிருர்:

"நான் 1894 இல் கொழும்பு பழைய சோனகத் தெரு 4 ஆம் இலக்க இல்லத்தில் பிறந்தேன். எனது இல்லம் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷனுக்கும் வெஸ்லி கல்லூரி புறக்கோட்டைக் கிளைக்கும் அடுத்து இருந்தது. கொழும்பு புதிய சோனகத் தெரு பெரிய பள்ளிவாசலைச் சேர்ந்த ஹமீதியாப் பாடசாலையில் நான் குர்ஆனை ஓதக் கற்றுக் கொண்டேன். நான் எனது ஆரம்ப கல்வியை சென்ட்ரல் கல்லூரியிலும் வெஸ்லி கல்லூரியிலும் பெற்றேன். ஹாவட் புலமைப் பரிசிலைப் பெற்ற நான் றோயல் கல்லூரியிற் சேர்ந்து அங்கே 1914 இல் கேம்ப்ரிஜ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சித்திபெற்றேன். எனக்கு அப் பரீட்சையின் பெறுபேறு மூலம் லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் விதிவிலக்கு அளிக்கப் பட்டது. 1914 இல் திரு. சி. ஹார்ட்லி, றோயல் கல்லூரியின் அதிபராக இருந்த பொழுது கல்லூரி உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டேன்; பரேட் ஹவுஸில் மின்



பொறியியலாளராகத் தகுதி பெற நான் இங்கிலாந்து செல்லவிருந்தேனுயினும் முதலாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானதால் அவ்வாறு செய்ய முடியாமற் போய் விட்டது.

பின்னர் நான் வர்த்தகத்திலீடுபட்டு டபிள்யு. ஜீ. போல்ஸ் அன் கம்பனியில் தொழில் பயிலுநராகச் சேர்ந்தேன். பின்னர் அந்தக் கம்பனியின் சார்பாக இலங்கையிலும் இந்தியாவிலும் பிரதிநிதித்துவம் வகித்தேன். காலப் போக்கில் சுவிட்சர்லாந்தில் இரு வர்த்தக நிறுவனங்களினதும் மூன்று பிரித்தானிய வர்த்தக நிறுவனங்களினதும் ஏக பிரதிநிதியாக ஆனேன். வியாபாரத்தில் நான் முன்னேற்றம் கண்டதோடு மேற்கூறிய வர்த்தக நிறுவனங்களும் எனது வேலையில் திருப்தி கொண்டன.

ஏறக்குறைய இச் சமயத்தில் தான் இந்தியாவிலே "கிலாபத்" இயக்கம் தோன்றியது. மௌலானா சௌக்கத் அலி, டொக்டர் சிக்லூ ஆகியோரின் இலங்கை வருகை என்னை அரசியலில் குதிக்கச் செய்தது. ரீ. பீ. ஜாயா அவர்களதும் இலங்கை முஸ்லிம் சங்கத்தின் தலைவரான எம். கம்ர் காஸிம் அவர்களதும் ஆதரவு எனக்குக் கிடைத்தது. இச் சங்கம் பயன்மிகு சேவைகளைப் புரிந்து கொண்டிருந்தது. வெளிநாட்டிலிருந்த துருக்கிய செம்பிறைச் சங்கம் இச் சங்கத்தின் சேவைகளுக்கு ஒப்புதல் அளித்தது. இச் சங்கத்தின் உயிர்நாடியாய் விளங்கியவர்கள் மேற்குறிப்பிட்ட இருவரும் நானும் ஜனுப் ரஸீன் அப்துல் காதருமாவோம். அப்போது "இஸ்லாம் மித்திரன்" பத்திரிகையைப் பதிப்பித்துக் கொண்டிருந்தவர் எம். உதுமான். அவர்களாவார். அவர் எதுவித புதுக்கருத்தையும் பொறுக்காதவர். அவற்றை மும்முரமாகக் கண்டித்தார். அவர் எங்களை "லண்டன் குஞ்சுகள்" என வர்ணித்தார். எங்களைப் பற்றி அப் பத்திரிகையில் வெளி

யான கூற்றுக்கள் சில சமயம் உண்மையென்று கருதப்பட்டன. அதன் பெறுபேருக எம் சங்க உறுப்பினர்கள் என். எச். எம். அப்துல் காதர், என். டீ. எச். அப்துல் கபூர் ஆகியோரால் சங்கக் காரியாலயம் அமைந்திருந்த கட்டடத்திலிருந்து வெளியேற்றப் பட்டனர். எனவே, இடவாய்ப்பு இல்லாமற் போனதால் இலங்கை முஸ்லிம் சங்கத்தின் நடவடிக்கைகளைத் தொடர முடியாமற் போய் விட்டது. அதனுல் அச் சங்கம் இளமையிலேயே மரணத்தைத் தழுவ வேண்டி ஏற்பட்டது.

மௌலானு சௌக்கத் அலீ அவர்களதும் முகம்மது அலீ அவர்களதும் கிலாபத் இயக்கம் என்னில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் திருவாளர்களான ஏ. ஈ. குணசிங்ஹ, விக்டர் கொறயா, ஈ. ரீ. டி. சில்லா, பி. எப். டி. சில்வா ஆகியோரைச் சந்தித்த போதெல்லாம் பிரித்தானியரின் குடியேற்ற ஆட்சியின் கீழ் எங்கள் நாட்டின் துர்ப்பாக்கிய நிலை பற்றியும் தொழிலாளர்கள், சிறப்பாக அரசாங்க, தனியார் துறைகளிலுள்ள கொழும்புத் தொழிலாளர்கள் எவ்வாறு சுரண்டப்பட்டுத் துன்புறுகின்றனர் என்பது பற்றியும் அடிக்கடி கலந்துரையாடினேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரேயொரு வழி தொழிலாளர் சங்கமொன்றை நிறுவுவது தான் என நாம் கண்டோம். அந்தப் பணியை திரு. ஏ. ஈ. குணசிங்ஹ பாரமெடுத்து, துறைமுகத் தொழிலாளரை அவர் கூட்டினுர். இரகசியக் கூட்டங்களையே நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஆரம்பத்தில் ஏற்பட்டது. நாட்டின் வர்த்தகத்தைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஐரோப்பிய முதலாளிகளின் எதிர்ப்பு அதற்கிருந்தது. அச்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்ற வேலைகள் வோபேஜ் கம்பனி

யாலேயே செய்யப்பட்டது. அக் கம்பனியின் தலைவராக இருந்தவர் பார்ஸி இனத்தைச் சேர்ந்த மெஹ்தா என்பவராவார். அவர் தொழிலாளர்களை அடிமைகளாகவே கருதினர். அத் தொழிலாளர்கள் இந்த அடக்குமுறையை எதிர்த்து நிவாரணம் வேண்டி திரு. ஏ. ஈ. குணசிங்ஹவிடம் முறையிட்டனர். அப்போது நான் இவ்வியக்கத்தின் முன்னணியில் இருந்தேன். எனவே, அவர்களின் இரகசியக் கூட்டங்களை எனது அலுவலகமான புறக்கோட்டை பூந்தோட்ட வீதியிலிருந்த 'அல்ஹம்ராக்' கட்டடத்தில் நடத்த அனுமதித்தேன்.

முதற் போராட்டம் ஏற்பட்டது முதலாளித்துவ வியாபார நிறுவனமான வெள்ளவத்தை ஸ்பினிங் அன் வீவிங் மில்ஸ் லிமிற்றெட்டிலாகும். அங்கு வேலை செய்த தொழிலாளர்கள் எங்கள் சங்க உறுப்பினர்களாயிருந்தனர். அவர்கள் அவர்களின் குறைகளைத் திரு. குணசிங்ஹவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். குணசிங்ஹ அவர்கள் செயற்குழுவைத் தொழிலாளர் சங்கமாக மாற்றியமைத்தார். அது இலங்கைத் தொழிலாளர் சங்கம் என அறியப்பட்டது. குணசிங்ஹ அவர்கள் அதன் தலைவராகவும் நான் அதன் துணைத் தலைவராகவும் பற்பல வியாபார நிறுவனங்களிலிருந்து பதினைந்து பேர் குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப் பட்டோம். இப்போது நாம் சட்டபூர்வமாகத் தொழிற்பட ஆரம்பித்தோம். முதலாளித்துவத்தின் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்த தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கலானோம். அவர்கள் எங்கள்தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களாயினும் அல்லாவிடினும் நாம் பாகுபாடு காட்டவில்லை. மேற்போந்த நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளராக் விளங்கியவருக்கு எங்கள் நடவடிக்கை

தெரிய வந்ததும் அவர் தொழிலாளர்களை மேலும் மும் முரமாகத் தொந்தரவு செய்யத் தொடங்கினர். எங்கள் நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்பட்டதுடன் எங்கள் தொழிற் சங்கத்துக்கு ஒப்புதல் தரவும் மறுத்துவிட்டார்.

வேறெதுவும் செய்ய முடியாத நிலையில் நாம் வேலை நிறுத்தத்தில் இறங்கினோம். நெசவாலையில் வேலை செய்த அனைவரும் - எங்கள் தொழிற் சங்க உறுப்பினரும் அல்லா தாரும்-ஒன்றென இணைந்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். வேலைநிறுத்தம் நீடித்துக் கொண்டே சென்றதால் திரு. குணசிங்ஹ உடன்பாட்டுக்கு வர முனைந்தார். ஆனால், அதன் முகாமைப் பணிப்பாளரான திரு. கப்டனே பிடி வாதமாக நின்று எதுவித பேச்சுவார்த்தைக்கும் உடன்பட மறுத்தார். இச் சந்தர்ப்பத்தில் வேலை நிறுத்தத்தை ஓர் உடன்பாட்டுக்குக் கொண்டுவர திரு. குணசிங்ஹ எனக்கு உரிமையளித்தார். அதற்குப் பிரதான காரணம் அந் நெசவாலையில் வேலை செய்த தொழிலாளர்களில் பெருந் தொகையான முஸ்லிம்கள் இருந்ததாகும். அவர்கள் சங்கத் துக்கு விசுவாசமாக இருந்தனர். நான் எனக்களிக்கப்பட்ட பொறுப்பை உற்சாகத்துடன் ஏற்றேன். வழியில் ஏமாற் றங்களும் தடைகளும் என்னை வரவேற்றன. ஆனல், உறுதி தளரவில்லை. வேலை நிறுத்தம் ஒரு மாதம் வரை நீடித்தது. இறுதியாக நாம் இதுபற்றி பம்பாயிலிருந்த ஆலைச் சொந் தக்காரர்களுக்கு அறிவித்தோம். தொழிலாளர்களின் குறை களை ஆராய்ந்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்குமாறு அவர்கள் திரு. கப்டனைப் பணித்தனர். அதன் காரணமாக தொழிலாளர்களுக்கு இரட்டிப்பான கூலியும் மேலதிக நேர வேலைப்படியும் சிறந்த வீட்டு வசதியும்

பிற வாழ்வு நலன்களும் கிடைத்தன. இது தொழிலாளர்களுக்குக் கிடைத்த ஒருபெரும் ஆரம்ப வெற்றியாகும்.

இப்போது ஏனைய இடங்களிலும் வேலை செய்த தொழிலாளர்கள் ஒருமித்த போராட்டத்தின் பெறுமதியை உணரத் தொடங்கினர். தங்கள் வாழ்வு நிலையை முன்னேற்றிக் கொள்ள தொழிற் சங்கத்தில் சேர்வதுதான் ஒரே வழி என்பதை அவர்கள் உணர்ந்தனர். அரசாங்க தொழிற்சாலையிலும் ரெயில்வேயிலும் வேலை செய்த தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தில் சேர்ந்து கொண்டனர். செயற்குழுவில் இருந்த நாம் அவர்களின் குறைகளை ஆராய்ந்து அவ்விழி நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கலானோம். அரசாங்க தொழிற்சாலை ஊழியர்களின் கோரிக்கைகளோ பல. அரசாங்க சேவையிலிருந்த மற்றும் பல தொழிலாளர்களுடன் நாம் இரகசியப் பேச்சு வார்த்தைகளை நடாத்தினோம். அவர்களின் குறைகளை மிகக் கவனமாக ஆராய்ந்த திரு. குணசிங்ஹ, அவற்றை அவ்வத் திணைக்களத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். பொறுமையையும் சாதுர்யத்தையும் கடைப்பிடித்த அவர் தொழிலாளர்களின் நியாயமான குறைகளை நிவர்த்தி செய்வதில் வெற்றி கண்டார். ஆனால், அரசாங்க தொழிற்சாலையின் பிரதம பொறியியலாளரும் ரெயில்வே பிரதம முகாமையாளரும் சிறிதும் கர்சனை காட்டவில்லை. ஏமாற்றமடைந்த தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தத்தில் குதிப்பதை விட வேறு வழி இருக்கவில்லை. வேலை நிறுத்த இயக்கத்தின் தலைவராக குணசிங்ஹ அவர்களும்அவரின் உதவியாளராக நானும் தெரிவு செய்யப்பட்டோம். வேலை நிறுத்தம் செய்தோரை உற்சாகமாகவும் அமைதியாகவும் இருக்கச் செய்யும் பொறுப்பு எனக்களிக்கப்பட்டது. அதே

நேரத்தில் குணசிங்ஹ அவர்கள் இணைக்களத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில் ஈடுபட்டார்.

எனக்குப் பாரம் சாட்டப்பட்ட பொறுப்பு மிகவும் பாரதூரமான ஒன்றாக இருந்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்போரை அமைதியாக இருக்கச் செய்வதும் அவர்களின் மன உறுதியைத் தளரவிடாமற் காப்பாற்றுவதும் கஷ்டமான காரியமாகும். இவ்விடயத்தில் காலியைச் சேர்ந்த காஸிம் மாஸ்டர் அவர்கள் எனக்குப் பெரிதும் துணைபுரிந்தார். அவர் சிறந்த நகைச் சுவை மன்னனாகத் திகழ்ந்தார். வன் செயலில் ஈடுபட நான் சந்தர்ப்பம் அளிக்காததால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் என்னைப் பழித்துரைத்ததுடன் என்னைத் தாக்கப் போவதாகவும் பயமுறுத்தினர். இறுதியாக இருபது நாள் போராட்டத்துக்குப் பின்னர் உயர் அதிகாரிகள் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கவேண்டி ஏற்பட்டது.

ஒரு தொழிலாளி முன்பெல்லாம் "கூலி" என அழைக்கப் பட்டான். நான் அவர்களை எல்லாக் கூட்டங்களிலும் "கம்கறுவா" என்றே விளித்தேன். இவ் வித்தியாசமான அழைப்பு தொழிலாளர்களுக்கு ஒரு கௌரவத்தைக் கொடுத்தது. எனவே, "கூலி" என்ற வார்த்தையை அகற்றுவதற்குக் காரணமாக இருந்தவன் நான் என்பதில் பெருமையடைகின்றேன்.

இப்போது அரசாங்கம் தொழிலாளர் சங்கத்துக்கு அங்கீகாரம் அளித்தது. அதனால் உற்சாகமடைந்த தொழிலாளர் தொழிற் சங்கங்களை நிறுவி தங்கள் உரிமைகளைக் கோரினர். திரு. குணசிங்ஹ, அக் கோரிக்கைகளுக்காகப் போராடிய பொழுதெல்லாம் நான் அவரின் உதவியாளராக இருந்தேன்.

இச் சமயத்தில் திரு. குணசிங்ஹவின் பகைவர் சிலர் அவரை மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் மூலம் தொந்தரவு செய்தனர். அதனுல் திரு. குணசிங்ஹ வின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தினர். எனவே என் பொறுப்பு அதிகரித்தது. அப்போதெல் லாம் துறைமுக வேலைகள் வேலை ஒப்பந்தக்காரரான சிலோன் வோபேஜ் கம்பனியாலேயே செய்யப் பட்டது. இச்சமயத்தில் தலைவராக விளங்கியவர் இன்ச்கேப் பிரபு ஆவார். அதன் நிர்வாகக் குழுவில் பன்னிரண்டு ஆங்கி லேயர் இருந்தனர். அவர்கள் துறைமுகத் தொழிலாளர் களுக்குக் குறைந்த கூலியையே கொடுத்து வந்தனர். அத் தொழிலாளர்களில் அனேகர் முஸ்லிம்களாக இருந்தனர். அவர்களுக்கு மிகக் குறைந்த கூலியே கொடுக்கப் பட்டது. இது என் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டதும் நான் திரு. குணசிங்ஹவை அணுகி அத் தொழிலாளர்கள் வாழக் கூடியவாறன ஒரு கூலியைப் பெற்றுக் கொடுக்கப் போரா டும்படி கேட்டுக் கொண்டேன். நாம் உபவேலை ஒப்பந் தக் காரரான ஸ்டீபன் கொறயாவை அணுகி அவரின் கீழுள்ள தொழிலாளர்களுக்கு சிறந்த கூலி வழங்க வேண்டு மெனக் கோரினேம். ஆனல், ஒரு சதத்தாலேனும் அவர் களின் கூலியை அதிகரிக்க அவர் மறுத்துவிட்டார். அதன் பெறுபேருக நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் துறைமுக வேலைகள் முற்ருக ஸ்தம்பித்தன. அது மூன்று வாரங்கள் வரை நீடித்தது. அதன் பின் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க் கப் பட்டது. இச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதுவரை தொழிற் சங்க இயக்கத்துக்கு அரை குறை ஆதரவை அளித்துக் கொண்டிருந்த முஸ்லிம் தொழிலா ளர்கள், தொழிற் சங்க இயக்கத்துக்கு ஆதரவளிப்பதன் மூலம்

தான் முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கு உதவ முடியு மென உணரத் தொடங்கினர்.

இச் சமயத்தில் மௌலானு சௌக்கத் அலீ, டொக் டர் கிச்லுர், டொக்டர் மஹ்மூது ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்தனர். அவர்கள் இங்கிருந்தபோது கிலாபத் இயக் கம் பற்றி அனேக கூட்டங்களிற் பேசினர். முஸ்லிம் வீரர்களை யும் கிலாபத் இயக்கத்தையும் வரவேற்று தொழிலாளர் இயக்கத்தின் சார்பாக ஒரு மாபெரும் கூட்டம் பிரைஸ் பாக்கில் நடைபெற்றது. அவர்களின் பேச்சைச் சிங்களத் திலும் தமிழிலும் நான் மொழிபெயர்த்தேன். மௌலானு சௌக்கத் அலீ அவர்கள் என் மொழிபெயர்ப்பால் ஈர்க்கப் பட்டு அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் அவர் பேச்சுக் களை மொழிபெயர்ப்பதற்காக என்னை அழைத்துச் சென் ருர். இச் சந்தர்ப்பத்தைத் தீவிலுள்ள எல்லா முஸ்லிம் களினதும் நல்லெண்ணத்தைப் பெற நான் பயன்படுத்திக் கொண்டேன். மெதுவாக, ஆனுல் உறுதியாக முஸ்லிம் சமூகம் என்னை அதன் கனிஷ்ட தலைவர்களில் ஒருவராக எண்ணத் தொடங்கியது. நான் தொழிலாளர் இயக்கத் தில் ஒரு சிறந்த ஆதரவாளனுக இருந்தபோதும் பொதுவாக முஸ்லிம்களின் நலனையும் சிறப்பாகத் தொழிலாளர் நலனை யும் பாதுகாப்பவனுக இருந்தேன்.

குடியேற்ற நாட்டு ஆட்சியிலிருந்து ஒரு சுதந்திரமான ஆட்சிக்கு இந்நாட்டை மாற்ற வேண்டுமென்று நாம் கிளர்ச்சி செய்தோம். இலங்கை மக்கள் தங்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஓரளவு ஏற்கத் தகுதியுடையவர் களாக இருக்கின்றனர் என உணர்ந்த பிரித்தானிய அர சாங்கம், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஐவரைக்

கொண்ட ஓர் அரச ஆணைக் குழுவை இங்கு அனுப்பியது. நாட்டின் அரசியல் நிலைமையை ஆராய்வதும் அரசியல் சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்வதுமே அவர்களது பணி யாக இருந்தது. இலங்கைத் தேசிய காங்கிரஸ், டொன மூர் ஆணைக் குழுவின் முன் சாட்சியமளித்த பொழுது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் ஆள்சபை நிறுவப்படல் வேண்டுமெனக் கோரினர். ஆனால், வாக்குரிமையானது ஓரளவாதல் கல்வித் தகைமை, அல்லது ஆதனம் உள்ளவர்களுக்கு அளிக்கப்படல் வேண்டு மெனக் கூறப்பட்டது. அதற்கு நேர்மாற்றமாகத் தொழி லாளர் இயக்கம், வயது வந்தோர் வாக்குரிமையால் தெரிவு செய்யப்படும் ஒரு சுயாட்சி அரசாங்கத் தைக் கோரியது. ஸேர் பாரொன் ஜயதிலக்க அவர்கள் தலைமைதாங்கிய இலங்கைத் தேசிய காங்கிரஸ் உட்பட எல்லா இயக்கங்களும் வயது வந்தோர் வாக்குரிமையை எதிர்த்தனர். ஆனால், திரு. குணசிங்ஹ, வயது வந்தோர் வாக்குரிமையைக் கோரி நின்றார். அவருக்குப் பக்கபலமாக நின்ற ஒரேயொரு முஸ்லிம் நானுவேன். முஸ்லிம்களோ பெரும்பாலும் வயதுவந்தோர் வாக்குரிமையைப் பயந்தனர். அதனால் தமக்குப் பிரதிநிதித்துவம் எதுவும் கிடைக்காமல் போகலாம் என எண்ணினர்.

தொழிலாளர் இயக்கத்தின் இந்தக் கோரிக்கையை ரீ. பி. ஜாயா, டபிள்யு. எம். அப்துர் ரஹ்மான் ஆகியோ ரும் எதிர்த்தனர். நான் பணக்கார முஸ்லிம்களின் பழிப் புரைக்கும் சிறுமைக்கும் ஆளானேன். உண்மையிலேயே பழைமை தழுவும் சில முஸ்லிம்களால் நான் பகிஷ்கரிக்கப் பட்டேன். முஸ்லிம்களால் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவாறான மூன்று இனவாரியான ஆசனங்களை அரசாங்க சபையில் முஸ்லிம்களுக்காக ஒதுக்கும் பொருட்டு அரசி யலமைப்பு திருத்தப்படல் வேண்டுமெனக் கேட்டு ரீ. பி. ஜாயா அவர்கள் லண்டனிலுள்ள குடியேற்றநாட்டுக் காரி யாலயத்துக்கு அனுப்பப் பட்டார். எனினும் டொனெ மூர் ஆணையாளரோ தொழிலாளர் இயக்கத்தின் கோரிக்

கையைச் சிபார்சு செய்தனர். அல்லாஹ்வின் அருளால் இது எதிர்ப்புக்களிடையே நான் அடைந்த பெரும் வெற்றிகளில் ஒன்ருகும். முஸ்லிம் உழைக்கும் வர்க்கத்தின் ஆதரவு இல்லாவிட்டால் நான் இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது. அதனுல் நான் எதிர்பார்த்தது ஓர் ஐக்கிய இலங்கையையே ஆகும்.

1915 இல் சில கருத்துப் பிசகல்களிஞல் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான கலவரத்தைத் தொடர்ந்து பிரித்தானிய அரசாங்கத்தால் வரவழைக்கப்பட்ட பஞ்சாபி போர் வீரரின் மிருகத்தனமான கடூரமான செய்கைகளை வஞ்சம் தீர்ப்பதற்காக சில சிங்கள இளைஞர்கள் திரு. விக்டர் கொறயாவின் தலைமையில் ஒரு துக்க தினத்தை ஏற்பாடு செய்தனர். அத் தினம் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் கொண்டாடப்பட்டு வந்திருந்தது. திருவாளர்கள் ஈ. ரீ. டி. சில்வா, அட்வகேட் சீ. ஏ. பீ. விஜேரத்ன, ஏ. ஈ. குணசிங்ஹ போன்ருேரும் அதற்கு ஆதரவளித்தனர்.

1919 ஒக்ரோபரில் திரு. விக்டர் கொறயாவின் தலைமையில் அத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அது அந்நாளை ஞாபகார்த்தம் செய்வதற்கு மாத்திரமன்றி படையாட்சிச் சட்டத்தின் கீழ் சிங்களவர் அனுபவித்த இன்னல்களுக்குக் காரணம் முஸ்லிம்களே என்பதனுல் எல்லா முஸ்லிம்களையும் சிங்களவர் பகிஷ்கரிக்க வேண்டுமென ஒரு தீர்மானம் எடுக்கவும் நடைபெற்ற ஒரு கூட்டமாகும். அத் தீர்மானம் திரு. விக்டர் கொறயாவினுல் பிரேரிக்கப்பட்டது. அக் கூட்டத்திற் கலந்து கொண்ட இருபதினுயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் டவர் ஹோலிலிருந்து மரதானைப் புகையிரத நிலையம் வரை பரந்திருந்தனர்.

நானும் கூட்ட அரங்கின் ஒரு மூலையில் நின்றவண்ணம் பல பேச்சாளர்களால் முஸ்லிம்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சசாட்டுக்களையும் பழியுரைகளையும் கேட்டுக் கொண்டிருந்தேன். எனது இரத்தம் கொதித்தது. என் உணர்ச்சிகளை என்னுல் அடக்க முடியாமற் போகவே,

நான் தலைமை வகித்தவரின் ஆசனத் தருகே விரைந்து சென்றேன். முஸ்லிம்களுக்கெதிராகக் கூறப்பட்ட நியாய மற்ற பழியுரைகளுக்குப் பதில் கூற எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கும்படி வேண்டினேன்.

விக்டர் கொறயா அவர்கள் நியாய தர்மம் படைத்த வர். அவர் எனது வேண்டுகோளை ஏற்று என்னைக் கூடியிருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். நான் பேசும் வேளையில் கூச்சல் போடாது பேச்சுக்குக் காது தாழ்த்தும்படியும் அவர் கூட்டத்தினரை வேண்டிக் கொண்டார். அங்கே அமைதி நிலவவே நான் அவர்களை விளித்து சிங்களத்தில் உரையாற்றினேன். அவர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிராகரித்துப் பேசிய துடன் அக்கலவரத்தின் போது அவர்களின் மிதமிஞ்சிய போக்கையும் பற்றி விளக்கினேன். கலவரத்துக்குக் காரணம் கருத்துப் பிசகே எனக் கூறிய நான் அதுகாலவரை முஸ்லிம்கள் சிங்களவருடன் நேசமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்தனரென்பதை நிரூபித்தேன். சோனகர்களில் அனேகரின் உடம்பில் ஓடும் இரத்தம் சிங்கள இரத்தமே என்பதை நான் வலியுறுத்தினேன். சிங்களவர் முஸ்லிம்களைத் தம் இனத்தவராகவே கருதியதோடு முஸ்லிம்களும் சிங்களவரைத் தங்கள் சகோதரர் போலவே கௌரவித்தனர் என எடுத்துக் கூறி, அவ்வாறே நாம் நூற்றாண்டு காலமாக வாழ்ந்தோம், இனி மேலும் அவ்வாறே வாழ முடியும் எனவும் கூறினேன். நான் உணர்ச்சிவசமாகப் பேசிக் கொண்டிருந்த அதே வேளையில் ஒரு கூரிய கத்தியை இழுத்தெடுத்து எனது இடக் கரத்தைக் கீறினேன். அதிலிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாகக் கீழே வழிந்தது. என் உடம்பில் சிங்கள இரத்தம் இல்லை என்பதை நிரூபிக்குமாறு நான் சவால் விட்டேன். இச் செய்கை அங்கு கூடியிருந்தவர்களின் மனதைப் பிழிந்திருக்க வேண்டும். எல்லோரும் "சாது, சாது, முஸ்லிம்கள் எங்கள் சகோதரர்கள்" என இன்றொன்ன விதமாகச் சப்தமிட்டனர்.

எனது தாழ்மையான கருத்துப்படி இச் சிறு சம்பவம் முஸ்லிம்கள் மீது சிங்களவருக்கிருந்த மனக்கசப்பை நீக்கியதோடு அவர்களிடையே ஓர் அன்னியோன்னிய நேச மனப்பான்மையை வளர்க்கவும் உதவியது எனக் கூறுவேன்.

முஸ்லிம்களைப் பகிஷ்கரிக்கக் கூட்டப்பட்ட கூட்டம், இறுதியில் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோருவதில் முடிவுற்றது. அம் மக்கள் எல்லோரும் டவர் ஹோலிலும் அதைச் சூழவுள்ள இடங்களிலும் கூடி மலர்களையும் மலர் வளையங்களையும் ஏந்திய வண்ணம் ஊர்வலமாக தெவட்ட கஹப் பள்ளி வாசலை நோக்கி நடந்தனர். 1915 இல் நடந்த சம்பவம் பற்றி தங்கள் மனவருந்தலைச் செய்கை மூலம் காட்டுவதற்காகவே அவர்கள் அவ்வாறு செய்தனர். ஆயிரக் கணக்கான அம் மக்கள் தெவட்டகஹ பள்ளிவாசலை அடைந்தவுடன் அக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த விக்டர் கொறயா அவர்கள் பன்னிரண்டு வீர வான்களுடன் பள்ளிவாசல் ''ஸியாரா''த்துக்குச் சென்று மரியாதை செலுத்தி மலர் வளையங்களையும் மலர்களையும் சமாதியின் கால்மாட்டில் சமர்ப்பித்தார்.

அவர்கள் பள்ளிவாசலை விட்டு வெளிவந்ததும் கூடியிருந்த பெருந் திரளான மக்களை நோக்கி உரை நிகழ்த்தினார். 1915 இன் சம்பவங்களை மறந்து சிங்களவரும் முஸ்லிம்களும் அவர்களின் தாய்நாடான ''லங்கா''வின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

லண்டனில் நடந்த ஒரு தொழிற்சங்க சம்மேளனத்துக்கு பிரித்தானிய தொழிற் கட்சியினால் திரு. குணசிங்ஹ அழைக்கப்பட்டார். அவர் தொழிலாளர் சங்கத்தினதும் இலங்கைத் தொழிலாளர்களினதும் சார்பில் அதிற் கலந்து கொண்டார். இக்கால இடைவெளியில் நான் அவருக்காகப் பதிற் கடமையாற்ற நியமிக்கப் பட்டேன். அது நெருக்கடி நிறைந்த ஒரு கால கட்டமாக இருந்தது. முதலாளித்துவ வாதிகள் குணசிங்ஹ அவர்கள் இலங்கையில் இல்லாத இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்கத்தால் தட்டிக் கொடுக்கப் பட்டவர்களாக தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்கினர். பிரித்தானிய பொறியியல் நிறுவனமான மெஸர்ஸ் ஹோர் அன் கம்பனி லிமிட்டட் அந்

நிறுவனத்தின் தொழிற் சாலையில் வேலை செய்த தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு தொந்தரவு கொடுத்தது. தொழிலாளர் சங்கத்தின் பதில் தலைவர் என்ற முறையில் நான் சமாதான ரீதியில் தீர்வுகாண முனைந்தேன். அது எதுவித பலனையும் தராததால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கத் தீர்மானித்தனர். அவ்வித ஒரு நடவடிக்கைக்கு நான் விரும்பவில்லையாயினும் பெரும்பான்மையின் தீர்மானத்துக்கு இணங்கவேண்டி இருந்தது. வேலை நிறுத்தம் நாட்கணக்கில் தொடர்ந்தது. டொக்டர் முத்தையா, சீ. எச். இஸட். பெர்னாண்டோ, புரக்டர் மார்ஷல் பெரேரா போன்றோர் இச் சந்தர்ப்பத்தில் எனக்குப் பேருதவி புரிந்தனர். அவர்களின் ஆலோசனையின் பேரில் நான் மேற்போந்த கம்பனியின் நிர்வாகப் பணிப்பாளரான ஷிப்டன் என்பாருடன் தொடர்பு கொண்டேன். அவர் ஒரு சிறந்த கனவானாக விளங்கினார். எனவே, எங்களுக்கும் இந்நிறுவனத்துக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் சங்கத்துக்குச் சார்பாக முடிந்தன. தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் வேலைக்குத் திரும்பினர். இச் சந்தர்ப்பத்தில் தான் முதலாளித்துவ வாதிகள் ஒன்று கூடி ''வேலை வழங்குவோர் கூட்டுக் குழு' வை நிறுவி தொழிலாளர் சங்கத்தையும் தொழிற் சங்க இயக்கத்தையும் அங்கீகரித்தனர். இது இலங்கையில் தொழிற் சங்க வரலாற்றில் ஒரு மாபெரும் வெற்றியாகும்.

எங்கள் நோக்கம் உழைக்கும் மக்களின் வாழ்வு வசதியை முன்னேற்றுவதாகவே இருந்தது. அவர்களுக்குச் சிறந்த வீட்டு வசதி இருக்கவில்லை. பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டக் கூடிய சிறந்த பாடசாலை வசதி இருக்கவில்லை. போதிய சுகாதார வசதி இருக்கவில்லை. இளைப்பாற்றுச் சம்பள வசதியோ, சேமலாப நிதி வசதியோ இருக்கவில்லை. உண்மையிலே ஒரு தொழிலாளி அடிமையாகவே நடத்தப் பட்டான்.

இச் சந்தர்ப்பத்தில் கொழும்பு டிராம்வேய்ஸ் லிமிட்டெட், தொழிலாளர் சங்கத்துக்கு ஒரு சவாலாக அமைந்

தது மாத்திரமன்றி தொழிலாளர்கள் மீது அடக்கு முறையையும் கையாண்டது. அந்நிறுவனத்தின் முகவர்களாக இருந்தவர்கள் மெஸர்ஸ் பூஸ்டட் பிரதர்ஸ் ஆவர். டிராம் வேயில் வேலை செய்த ஊழியர்களின் நிவாரணத்துக்காக குணசிங்ஹ அவர்களும் அவரைச் சேர்ந்தோரும் முயற்சி செய்தனர். டிராம் சாரதிகளும் கொண்டக்டர்களும் மிகக் குறைந்த கூலியைப் பெற்றதுடன் அவர்கள் நாட் சம்பளக்காரர் என்றே கணிக்கப் பட்டனர். உலகில் அவர்கள் போன்ற ஏனைய தொழிலாளர்களுக்கு இருக்கும் வாழ்வு வசதிகள் அவர்களுக்குக் கொடுபடவில்லை. பிரித்தானிய எஜமானர்கள் அத் தொழிலாளர்களின் மன்றாட்டத்தைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை. அத்துடன் அவர்களிற் சிலரை வேலை நீக்கமும் செய்தனர். எனவே, அத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். பொதுமக்கள் பாதிக்கப்பட்டார்களாயினும் அவர்கள் அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். நான் தலைவராக இருந்த ''வண்டி ஓட்டிகள் தொழிற் சங்கம்'', அலுவலக ஊழியர்களை ஏற்றிச் செல்ல உதவியது. வேலை நிறுத்தம் தொடர்கையில் மரதானை வீதியில் பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலயத்தருகில் ஒரு கலவர நிலை ஏற்பட்டது. குணசிங்ஹ அவர்கள் ''செஞ் சட்டையினரை'' ஆதரித்த மக்களை ஆசுவசப் படுத்த அவ்விடத்துக்குச் சென்றார்.

கடமையில் இருந்த பொலிஸார் செஞ் சட்டையினரைத் தாக்கினர். பொலிஸ் நடவடிக்கையை அங்கிருந்த மக்கள் கூட்டம் விரும்பவில்லை. திரு. குணசிங்ஹ, பொலிஸ் தாக்குதலுக்கு முழு வேகத்துடன் எதிர்ப்புத் தெரிவித்தார். பொலிஸ் நடவடிக்கையை விரும்பாத மக்கள் கூட்டம் மரதானைப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தைத் தாக்க முனைந்தது. குணசிங்ஹ அவர்கள் அம் மக்களை மிகச் சிரமத்துடன் பலாத்காரத்தில் இறங்க விடாமல் அமைதியாக இருக்கும்படி செய்தார்.

அதுசமயம் சட்டவாக்க சபை கூடியிருந்தது. தொழிலாளர் இயக்கத்தின் பெரும் ஆதரவாளரான திரு. சீ. எச். இஸட். பெர்ணுண்டோவும், திருவாளர்கள் ஈ. ஏ. பீ. விஜேரத்ன, அருணுசலம் மகாதேவா ஆகியோரும் இப் பிரச்சினையைச் சபையில் எழுப்பினர். ஊரடங்குச் சட்டத்தை அமுல் நடாத்த அரசாங்கம் எண்ணியது. பெர்ணுண்டோ அவர்களும் மகாதேவா அவர்களும் அவ்வித ஒரு நடவடிக்கைக்கு அவசியமில்லையெனக் கூறி நிலைமையை ஒரு சுமுகமான முடிவுக்குக் கொண்டுவர முடியுமென ஆலோசனை தெரிவித்தனர்.

அதே வேளையில் நானும் திரு. குணசிங்ஹவும் புறக்கோட்டையில் கொன்ஸிஸ்டரி கட்டடத்துக்கு எதிர்ப்புறத்தில் ஒரு கூட்டத்தில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தோம். தொழிலாளர்களை அமைதியாக இருக்கும்படி கேட்பதே எங்கள் வேலையாக இருந்தது. சட்டவாக்க சபைக் கூட்டம் முடிந்து திரும்பிய பெர்ணுண்டோ அவர்களும் மகாதேவா அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப் படலாம் என்றும் நானும் திரு. குணசிங்ஹவும் கைதுசெய்யப் படலாம் என்றும் அவர்கள் அக் கூட்டத்தில் அறிவித்தனர். அவ் விருவரும் என்னையும் திரு. குணசிங்ஹவையும் எங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

மரதானைப் பொலிஸார் என்னையும் திரு. குணசிங்ஹவையும் சுட்டுக் கொல்வதில் கவனமாயிருந்தனர். சனக் கூட்டம் மீண்டும் ஒன்று கூடி பலாத்காரத்தில் இறங்குவதற்கு ஆயத்தமாக இருந்தது. ஆதாம் என்னும் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் எங்கள் இருவரையும் சுட்டுக் கொல்லும்படி மறைமுகமாகப் பணித்திருந்தார். அவர் மரதானைப் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியே வரும்போது சீமன் வீதியில் கூடியிருந்த ஒரு சனக் கூட்டத்தின் மத்தியில் திரு. குணசிங்ஹவைப் போன்ற ஒருவரைக் கண்ணுற்று அவரைச் சுட்டுக் கொன்ருர். ஸ்தலத்திலேயே மாண்ட அவர் இளம் புரக்டரான திரு. எல். பீ. குணவர்தன

என்பவராவார். என்ன நடக்கின்றதென்று பார்க்க வந்தவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். வெறிபிடித்த பொலிஸ் சார்ஜண்ட் அத்தோடு நிற்கவில்லை. அங்கு தென்பட்ட துருக்கித் தொப்பி அணிந்த ஒரு முஸ்லிம் இளைஞரைக் கண்ணுற்று அவர் நானென நினைத்து சுட்டுக் கொன்றார். இச் சந்தர்ப்பத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டம் கட்டு மீறியதில் வியப்பில்லை. மரதானைப் பொலிஸ் நிலையத்தைத் தீக்கிரையாக்குவதாக அவர்கள் பயமுறுத்திக் கொண்டிருந்தனர்.

திரு. ஏ. ஈ. குணசிங்ஹவும் முகம்மது றியாழும் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்களென அடுத்த நாட் காலை புதினப் பத்திரிகைகள் தலைப்புச் செய்தியை வெளியிட்டன. இச் செய்தி தொழிலாளர் வர்க்கத்தை நிலைகுலையச் செய்தது. அரசாங்கத் தொழிற்சாலை ஊழியர்களும் துறைமுக ஊழியர்களும் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டனர். பொலிஸார் தங்கள் தாவணத்துக்குப் பின்வாங்கினர். அதன்பின் செஞ்சட்டையினர், திரு. விக்ரமசிங்ஹ என்பவரின் தலைமையில் மரதானையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். கொழும்புச் சரித்திரத்தில் குற்றவியல் குற்றங்களுக்காகவும் அதுபோன்ற பிற செயல்களுக்காகவும் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படாமல் விட்ட முதல்முறை அதுவாகும். பழிவாங்க நினைத்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு உண்மையில் எனக்கும் திரு. குணசிங்ஹவுக்கும் என்ன நடந்ததென்று தெரியவில்லை.

உதவி குடியேற்றநாட்டுச் செயலாளரான திரு. மேர்பீ என்பார் என் இல்லத்துக்கு வந்து என்னைக் கலவரம் நிகழ்ந்த மரதானைப் பகுதி முழுவதும் மக்கள் காணக் கூடியவாறு அழைத்துச் சென்றார். நான் உயிரோடு இருக்கிறேன் என்பதைக் காட்டுவதற்காகவே அவ்வாறு செய்

தார். அதே போன்று குடியேற்ற நாட்டுச் செயலாளரான திரு. எப். ஜீ. டிரல் என்பார் திரு. குணசிங்ஹவை அழைத்துச் சென்றார். டிராம்வே வேலை நிறுத்தம் வெற்றிகரமாகத் தீர்க்கப்படும் என அவர் கூடியிருந்த மக்களுக்கு உறுதி வழங்கி அவர்களைக் கலைந்துபோகும்படி வேண்டிக் கொண்டார். அதன்பின் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் வேலைக்குத் திரும்பினர். பின்னர் தொழிலாளர் சங்கத்தின் குழு பலநாட்கள் முயற்சி செய்து டிராம்வே நிறுவனத்துடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்தது. இது உண்மையிலேயே தொழிற் கட்சிக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகும். தொழிலாளர்களை அவர்களின் எஜமானர்களின் இரும்புப் பிடியிலிருந்து விடுவிக்கும் இப் போராட்டங்களில் முஸ்லிம் பாட்டாளி மக்கள் எனக்குப் பேருதவி புரிந்தனர் என்பதை நான் குறிப்பிட வேண்டும்.

நான் நேரடி அரசியலில் குதித்தது 1924 ஆம் ஆண்டிலாகும். 1924 செப்ரம்பரில் நடைபெற்ற சட்டவாக்க சபைத் தேர்தலில் அகில இலங்கை முகம்மதிய மூவாசனங்களுக்காகப் போட்டியிட்டு நான்காவதாக வந்தேன். இத் தேர்தல், கல்வி அறிவையும் ஆதனத் தகைமையையும் அடிப்படையாகக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஒன்றாக இருந்தபடியால் இலங்கைத் தொழிலாளர் இயக்கத்தின் துணைத் தலைவராக இருந்த நான் தோல்வியடைந்ததில் வியப்பில்லை.

எனினும் 1926 இல் நான் கொழும்பு மாநகர சபைக்கு தொழிற் கட்சியின் அபேட்சகராக சென்செபஸ்தியன் வட்டார உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பட்டேன். 1927 இலிருந்து 1943 வரை நான் தொடர்ந்து மாநகர சபை உறுப்பினராக இருந்தேன்."

இவ்வாறு தொழிலாளர் நலனுக்காகப் போராடிய ஒரு கர்ம வீரர் சில ஆண்டுகளுக்கு முன் காலஞ் சென்றார்.

## 'மோர்ஸ்' அல்லது முகம்மதியர் சம்பந்தமான விசேட சட்டங்கள்

பிரித்தானியர் இந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய போது, 'மூஅர்ஸ்' அல்லது சோனகர் அவர்களின் மதச் சட்டதிட்டங்களில் தலைசிறந்த முஸ்லிம் நீதிபதிகளின் கீழ் முறையாக ஆளப்பட உதவ வேண்டியது அவசியமெனக் கண்டனர். 1798 இல் தேசாதிபதி பிரட்ரிக் நோர்த் என்பார் சமர்ப்பித்த அறிக்கையில், கடந்த காலங்களில் இலங்கைச் சோனகர், அவர்கள் சம்பந்தமான சட்டதிட்டங்களில் உள்ளூர் நீதிமன்றங்கள் எவ்வாறு தலையிடாத விதமாக வாழ்ந்தனர் என்பது சுட்டிக் காட்டப் பட்டது. அவரது அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு:

''அரசாங்க வருமானத்துக்கு இம் மக்களிடமிருந்து ஏறக்குறைய அதே தொகையை வசூலிக்க நான் எண்ணியுள்ள அதே நேரத்தில் முஸல்மான் சட்டத்தின் எல்லா அம்சங்களிலும் நான் கலந்தாலோசிக்கத் தக்கவாறு ஒரு முப்தியையும், மூரிஷ் குடிமக்கள் தலைவர்களின் கீழ் ஒன்று பட்டு அதிகமாக வாழும் தீவிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கு நீதிபதிகளான ''காழி''கள் அறுவரையும் தீவுக்கு வரவழைப்பதன் மூலம் ஒரு சரியான கௌரவமுள்ள அரசாங்கத்தின் சௌகரியங்களை அவர்களுக்குப்-பெற்றுக் கொடுக்கவும் எண்ணியுள்ளேன். இந்தப் பணியாளர் குழாத்துக்கான செலவுகளின் பெரும்பாகம் முஸல்மான்களின் உதவு தொகைகள் மூலம் பெறப்படும். அது டச்சுக் காலத்தில் வசூலிக்கப்பட்டதை விடக் குறைவானதாகவே இருக்கும். ..............இந்த லெப்பைகள் நாட்டின் முதலாளிகளிலும் சுறுசுறுப்பான வர்த்தகர்களிலும் பெருந்தொகையினராவர். அவர்கள் விடா முயற்சியுள்ளவர்கள். அத்துடன் உண்மையிலேயே அமைதியானவர்கள். அவர்களிடையே பூசல்கள்

ஏற்படின் அவற்றைத் தீர்மானிக்கக் கூடியவாறு அவர் களின் சட்டங்களிலெல்லாம் பொதுவான அறிவுள்ள ஒருவர் அவர்களிடையே இல்லை என்பது வியப்பான ஒன் றல்ல''.

பிரித்தானிய அரசாங்கம் முஸ்லிம் சட்டங்களை உத்தி யோகபூர்வமாக ஏற்றுக் கொண்டு அவற்றை வகுக்க சோனகர்களை அழைத்தது. அச் சட்டங்களை ஒரு கட்டளைச் சட்டத்தில் சேர்ப்பதற்காகவே அவ்வாறு செய்தது. எனவே, சோனகர்களில் பலர் முஸ்லிம் சட்டங்களை வகுக்க அமர்ந்து அவ்வாறு வகுக்கப்பட்ட சட்டங்களை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தனர். 1806 ஒகஸ்ட் 5 ஆம் தேதி பிரதம நீதியரசர் அவற்றை ஆள்சபையில் சமர்ப்பித்தார். கொழும்பு மாகாண சோனகர்களால் கடைப்பிடிக்கப்படுவனவும் அவ்வினத்தின் தற்போதைய நடைமுறைக்கேற்ப ஏற்றதாக்கிக் கொள்ள அம் மாவட்ட தலைமைச் சோனக மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டனவுமான முகம்மதிய சட்டக்கோவை அது என அவரால் எடுத்துக் கூறப்பட்டது.

அச்சட்டங்கள் தீவு முழுவதும் கடைப்பிடிக்கப் படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அச் சட் டம் ''மோர்ஸ் அல்லது முகம்மதியர்கள் சம்பந்தமான விசேட சட்டங்கள்'' என அழைக்கப் பட்டது.

கீழ்வரும் சோனக கொமிஷனர்கள், அச் சட்டங்களை வகுக்க அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டவர்களாவர்:

1. மம்முனாப் புள்ளை ஸுலைமா லெப்பை மரிக்கார்
2. சேகு இஸ்மாயில் லெப்பை நெய்னா மரிக்கார்
3. உதுமா லெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்கார்
4. மகல்லம் முஹ்யிதீன் லெப்பை
5. சேகு மீரா லெப்பை உதுமா லெப்பை மரிக்கார்
6. இப்ராஹிம் புள்ளை சின்ன லெப்பை

7. லெப்பை மரிக்கார் ஸரே லெப்பை மரிக்கார்

8. அகமது லெப்பை சேகு அப்துல் காதிர், பேச்சு மொழி பெயர்ப்பாளர்

9. ஓமர் நெய்னு புள்ளை சேகு லெப்பை

10. காஸி லெப்பை மம்மு நெய்னு லெப்பை

11. அஸன் மீரா லெப்பை மகம்மது லெப்பை

12. ஔதுகண புள்ளே ஒஸனு லெப்பை

13. காஸி லெப்பை சேகு மீரா லெப்பை

14. இதுரூஸ் லெப்பை சுல்தான் கண்டு

15. லெப்பை மரிக்கார் உமரு லெப்பை மரிக்கார்

16. சேகு மீராப் புள்ளே அவ்வக்கர் லெப்பை அல்வர்ஸ்

17. லெப்பை மரிக்கார் ஸம்ஸு லெப்பை மரிக்கார்

18. மீரா லெப்பை மேஸ்திரியார் சேகாதி மரிக்கார்

19. ஸுலைமா லெப்பை யூஸுபு நெய்னு

20. சுலைமா லெப்பை பக்கீர் புள்ளே

21. மம்மு நெய்னு புள்ளே ஸம்ஸுதீன் லெப்பை

22. அகமது லெப்பை அலி மரிக்கார்

23. லெப்பை மரிக்கார் உதுமா லெப்பை மரிக்கார்

24. லெப்பை கண்டு ஸெய்து

52. ஒஸன் லெப்பை கப்பித்தான் அகமது லெப்பை

26. மாதினு லெப்பை சேகாதி மாக்கர்

27. முகம்மது காஸிம் அகமது லெப்பை

28. லெப்பை நெய்னு மரிக்கார் அகமது அலி மரிக்கார் கப்பித்தான்.

○ ○ ○ ○



LIBRARY
25 NOV 2011
*SEUSL*
008920